

சட்டமன்றக் கூட்டவையில் ஆளுநர் உரை

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே!

சட்டமன்றத்தின் இரு அவைகளும் இணைந்த இக்கூட்டத்திற்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் நாட்டில் வடகிழக்குப் பருவ மழை அறவே பொய்த்துவிட்டதால் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ள இத்தருணத்தில், சட்டமன்றத்தின் இக்கூட்டத் தொடர் தொடங்குகிறது. தென்மேற்குப் பருவ மழையும் காலந்தாழ்த்தியே தொடங்கியது; அதுவும் தமிழ் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் போதிய அளவு பெய்யவில்லை. இதன் விளைவாக, மேட்டூர், பவானிசாகர், பெரியாறு முதலான பெரிய நீர்த்தேக்கங்களில் நீர்வரத்து குறைந்துவிட்டது. இதனால் பல நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்துக்காகத் தண்ணீர் விடும் தேதியை ஒத்திவைக்க வேண்டி வந்தது. வடகிழக்குப் பருவ மழையைப் பொறுத்தவரை, சென்ற நூறு ஆண்டு கால அளவில், இந்த ஆண்டில்தான் இவ்வளவு குறைவாக மழை பெய்துள்ளது. இப்பருவத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவில் 35 சதவீத மழையே பெய்துள்ளது. மிகக் குறைவாக மழை பெய்ததால், பாசன ஏரிகள் பலவும் போதிய அளவு நீர் பெறவில்லை. இதன் விளைவாக, மழை மூலம் நீர் பெறும் பாசன ஆதாரங்களை நம்பியுள்ள பயிர்கள் பாதிக்கப்பட்டன. குறுவை விளைச்சல் ஓரளவு குறைந்தது. தாளடிப் பயிரும் சம்பாப் பயிரும் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் 39 இலட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா பயிரிடப்பட்டிருக்க, இவ்வாண்டில் 29 இலட்சம் ஏக்கர் பரப்பில் மட்டுமே சம்பா பயிரிடப்பட்டது. கடந்த ஆண்டில் 56 இலட்சம் டன் அரிசி கிடைக்கும் வகையில் நெல்லும், 15 இலட்சம் டன் தினை வகைகளும், 2 இலட்சம் டன் பயறு வகைகளும் விளைவிக்கப்பட்டன.

தற்போதைய மதிப்பீட்டின்படி, இவ்வாண்டில் 43 இலட்சம் டன் அரிசி கிடைக்கும் வகையில் நெல்லும், 7 இலட்சம் டன் தினை வகைகளும், 1 இலட்சம் டன் பயறு வகைகளும் விளையக்கூடும். ஆகவே, அரிசி, தினை வகைகள், பயறு வகைகள், அனைத்தின் மொத்தப் பற்றுக்குறை 20 இலட்சம் டன் அளவில் இருக்கும். இப்பற்றுக்குறை நமது உணவு தானிய உற்பத்தியில் சற்றேறக்குறைய 30 சத வீதமாகும்.

இத்தகைய கடுமையான, இதுவரை கண்டிராத வறட்சியின் விளைவுகள் பல வகைகளிலும் பரவியிருக்கவே செய்யும். உணவுப் பற்றுக்குறையைத் தவிர, மக்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடு உள்ளது; தீவனப் பற்றுக்குறையும் உள்ளது; அடுத்த வேளாண்மைப் பருவத்துக்குப் பயிரிடு விதைகளும் ஓரளவுக்குப் பற்றுக்குறையாக இருக்கும். இந்நிலைமையைச் சமாளிக்க முயற்சிகள் பலவும் இணைப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும் குறைந்த நிலம் வைத்துள்ள எளிய குடியானவர்களுக்கும் மாநிலமெங்கணும் பரவலாக வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான், அவர்களிடம் போதிய வாங்கும் சக்தி இருக்கும். அதற்கு நிகராக உணவு தானியங்களும் நியாய விலையில் கிடைக்க வழி செய்ய

வேண்டும். கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் குடிதண்ணீர் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். தேவை மிக அதிகம் உள்ள இடங்களில் தீவனம் வழங்குவதன் மூலம் கால்நடைகளைக் காப்பாற்றுவதும் அவசியம்.

வறட்சியால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு, இம்மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறுவைப் பருவத்தே 1,50,000 டன் அரிசியை நாம் கொள்முதல் செய்துள்ளோம். நெல்லுக்கு நியாயமான ஆதாயம் தரும் நல்ல விலை தர அரசு முன்வந்ததும், நெல் கொள்முதல் செய்யும் அரசு நிறுவனங்கள் திட்டமிட்ட வகையில் முனைந்து முயற்சி மேற்கொண்டதும் இதற்குக் காரணங்களாகும். அதிக அளவில் கொள்முதல் செய்வதுடன் பொதுமக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் ஏற்பாடுகளும் பரவலாக்கப்பட்டன.

கடந்த ஆண்டுகளில் சென்னை மாநகர், கோயம்புத்தூர் நகரம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகியவற்றில் மட்டுமே உணவுப் பொருள் வழங்கும் ஏற்பாடு செயலில் இருந்தது. அண்மையில் நியாயவிலைக் கடைகள் பிற மாவட்டங்களிலும் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெருமளவில் கோதுமையும் புன்செய்த் தானியங்களும் விற்கப்படுவதுடன், இவ்வாறு இந்த ஏற்பாட்டினைப் பல இடங்களுக்கும் நீட்டித்ததால், இம்மாநிலத்தின் பற்பல பகுதிகளிலும் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் நியாய விலையில் மாதம் ஏறக் குறைய 55,000 டன் அரிசி விற்கப்பட்டு வருகிறது.

சம்பாப் பருவத்தில், இரு நிலைகளில் கொள் முதல் நடைபெற வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் இந்திய உணவுக் கழகமும் விதி முறைக் கொள்முதல் (Levy) ஏற்பாட்டின்படி, இதற்கென அறிவிக்கப்பட்ட விலைகளில் சட்டப்படிக்கான கொள்முதல் செய்யும் பணியை மேற்கொள்ளும். விற்பனை இடங்களுக்கேநேராக நெல்லைக் கொண்டு வந்து ஒப்படைக்கும் விவசாயிகளுக்குப் போக்குவரத்து உதவித் தொகையாக, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 5 ரூபாய் அளிப்பதுடன், அவர்களுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு 10 ரூபாய் சிறப்பு ஊக்க விலை ''லெவி'' திட்டத்தின் கீழ் அளிக்கப்படும். இத்துடன் உபரிப் பகுதிகளில், விவசாயிகளுக்கு மேலும் ஆதாயமுள்ள விலைகளில், கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை நிலவர விலைக்கு வாங்கிக் கொள்ளும். இத்தகைய உபரிப் பகுதிகளில் தனிப்பட்ட மொத்த வணிகர்கள் நெல் வாங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நான்கு இலட்சம் டன்அரிசியையும், சுமார் 3 இலட்சம் டன் புஞ்சைத் தானியங்களையும் பிற மாநிலங்களிலிருந்து வாங்கக் கருதியுள்ளோம். இத்துடன், அடுத்த 10 திங்களுக்குத் திங்கள்தோறும் ஒரு இலட்சம் டன் உணவு தானியங்கள் ஒதுக்கித் தருமாறு மத்திய அரசைக் கேட்டுள்ளோம். தமிழ் நாட்டுக்கு கோதுமை அளவை உடனடியாக 50,000 டன்னாக உயர்த்திக் கொடுக்க இசைந்ததற்காக மத்திய அரசுக்கு நாம் நன்றி உடையவர்களாவோம். வருகின்ற மாதங்களில் இந்த அளவு படிப்படியாக உயர்த்தப்படுமெனவும் மேலும் அதிக அளவில் அரிசி வழங்கப்படுமெனவும் இவற்றின் விளைவாக 1975 அக்டோபருக்குள் தமிழ் நாட்டுக்கு மொத்தம் 10 இலட்சம் டன் உணவு தானியங்கள் ஒதுக்கப்படும் எனவும் நம்புகிறோம்.

குடியானவர்களுக்கு இன்னல் தீர்க்கவும், மற்றும் பல உதவிகள் செய்யவும் இவ்வரசு பல நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டுள்ளது. வறட்சியால் பீடிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நில வரியும். உள்ளூர்த் தீர்வையும் மேல் வரியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அரசுக்குச் சேர வேண்டிய கடன் தொகைகளையும் பழைய நில வரி பாக்கிகளையும் வசூலிப்பது, அடுத்த பசலிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த குறுகிய காலக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்படும். இதன் விளைவாக, பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தாமல், கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்த பயிரிடும் பருவத்துக்கும் குடியானவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களை மீண்டும் கொடுக்க முடியும். விவசாயிகளுக்குத் தனிப்பட்டவர் கொடுத்த கடன்களை வசூலிப்பதற்காக, நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுப்பதை ஓராண்டுக்குத் தடை செய்து அவசரச் சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டுள்ளது. மின்சாரப் பற்றுக்குறை இருந்த போதிலும், குடியானவர்களுக்கு முழு அளவில் மின்சாரம் வழங்கப்படுகிறது. டீசல் விசையேற்றங்களை வாங்குவதற்கு, விசையேற்றம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. மேலும் வேளாண்மை நடவடிக்கைகளுக்காகப் போதிய அளவில் டீசல் எண்ணெய் வழங்கப்படுகிறது.

வீட்டுப் பயனுக்காயினும் வேளாண்மைப் பயனுக்காயினும் கிராமப் பகுதியில் மின்சார வசதி அளிப்பதில் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் தமிழ்நாடே முதலாவதாகத் திகழ்கிறது. நமது மாநிலத்தில் இப்போது 7 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதிலும் மின் இணைப்பு பெற்ற வேளாண்மை விசையேற்றங்களில் இது மூன்றிலொரு பகுதியாகும். நமது மாநிலம் எங்கும் ஏராளமான குழாய்க் கிணறுகளுக்கு இவ்வாறு விசையேற்ற வசதி அளித்திருக்காவிட்டால், நடப்பாண்டில் மழை பொய்த்துப் போனதால் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிப்பது இன்னும் மிகக் கடினமாயிருந்திருக்கும். 1974-75-ல் 30,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கக் கருதியுள்ளோம். 1975-76-ஆம் ஆண்டில் மேலும் 60,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கும் பெருந்திட்டம் தொடங்கப்படும். இவ்வேலைத் திட்டத்தை உரிய காலத்தில், முறையாகச் செய்து முடிக்க முயற்சிகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலமில்லா வேளாண்மைத் தொழிலாளர்களும் குறைந்த நிலமுள்ள எளிய குடியானவர்களும் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். என்றும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளும் பொருள்களை வாங்கப் பண வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் நான் முன்னரே குறிப்பிட்டேன். இது தொடர்பாக, மாவட்ட வாரியான, விரிவான மதிப்பீடு செய்து முடிக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில், இம்மாநிலம் முழுவதும், அடுத்த 9 அல்லது 10 மாதக் கால அளவில், வறட்சித் துயர் தணிப்புக்காக 55 கோடிரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பெருந்திட்டம் ஒன்றை நிறைவேற்ற முற்பட்டுள்ளோம். கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள், சிறிய, நடுத்தர, பெரிய பாசனப் பணிகள், ஏரிகளில் தூர் வாருதல், ஏரிகளைச் சிறப்புச் செப்பனிடுதல், மண்வளப் பாதுகாப்புப் பணிகள், புதிய சாலைகள் அமைத்தல், சாலைகளை மேம்படுத்தல், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நிறைவேற்றப்படுகிற பல்வேறு கிராம வசதிகள், பணிகள் செய்து கொடுத்தல் ஆகியவை இந்த நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு மேற்கொள்ளப்படும். இராமநாதபுரத்திலும், தருமபுரியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள ''வறட்சிப்பகுதி வேலைத் திட்டமும்'' வறட்சியால் ஏற்பட்டுள்ள அவசரத் தேவைகளைச் சமாளிப்பதற்காக விரிவாக நடைபெறும்.

ஏராளமானவர்களை வேலையில் ஈடுபடுத்தும் பொருட்டு, துயர் தணிப்பு வேலைத் திட்டங்களை அதிகமான வேலை வாய்ப்புகள் உள்ளவையாகக் கவனமுடன் வகுத்து வருகிறோம். சராசரியில், இப்பணிகளின் மொத்தச் செலவில், சற்றேறக்குறைய 65 வீதத் தொகை, ஊதியம் கொடுப்பதில் செலவிடப்படும். அடுத்த 9 மாதங்களில் 61 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் உருவாகி வரும் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில், விரிவான செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில், கிட்டத்தட்ட அனைத்துமே இப்பணிகளால் பயனடையும். தொடர்ந்து, அடுத்த 9 அல்லது 10 திங்கள் வேலை அளிக்கும் வகையில், வேலைகள் பரவலாகச் செயல்படுத்தப்படும். வாங்கும் சக்தியை இவ்வாறெல்லாம் பெருக்கியதற்கு நிகராக, உணவு தானியங்களை நியாய விலையில் வாங்குவதற்கான வசதிகளும் போதிய அளவில் செய்யப்படும்.

வறட்சித் துயர் துடைப்பதற்காகச் செய்யும் செலவுகளில் பெரும்பகுதி, மூலதனச் செலவுகளாக அமையுமாறு பார்த்துக் கொள்வதே இத்திட்டங்களை வகுப்பதிலும் செயல்படுத்துவதிலும் நமது குறிக்கோளாகும். அப்போதுதான் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளால், நீடித்த நிலைத்த பயனளிக்கவல்ல குடிநீர் வழங்கல் வசதி, பாசன வசதி, சாலைகள் முதலியவற்றை நாம் உருவாக்க முடியும். இத்தகைய பணிகளே எதிர்காலத்தில் நமக்குப் பயனுள்ளவைகளாக இருக்கும். இந்நோக்கத்தைக் கருத்தில் கொண்டே, ஆண்டுத் திட்டத்தில் கிராமப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதிகள், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், முனைப்பாக, மும்முரமாக, முழு மூச்சுடன் செலவு செய்யப்படும். இதன் மூலம், வறட்சிப் பணிக்குத் தேவைப்படுகிற தொகையில், 25 கோடி ரூபாயை இயல்பான திட்ட ஒதுக்கீட்டிலிருந்து பெற இயலுமென நம்புகிறோம். எஞ்சிய 30 கோடி ரூபாய் தந்துதவுமாறு மத்திய அரசுக்கு எழுதியுள்ளோம். நடப்பாண்டுக்கு 7.5 கோடி ரூபாய் சிறப்பு உதவி அளித்து நமது வேண்டுகோளுக்கு இணங்கியுள்ளதற்கு மத்திய அரசுக்கு நாம் நன்றியுடையவர்களாவோம்.

வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக முதல் தவணையாக இம்மாநில அரசு 3 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இது திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவினமாகும். இதனையடுத்து இரண்டாவது தவணையாக 2 கோடி ரூபாயும் மூன்றாவது தவணையாக 5 கோடி ரூபாயும் அளிக்கப்பட்டுள்ளன. எனவே, நடப்பாண்டில், திட்டச் செலவுகளுக்கு அப்பால், வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக மொத்தம் 10 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால நோக்கில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கமே, குறிப்பாக உணவு தானியங்களின் உற்பத்திப் பெருக்கமே, அகவிலைகளும் பற்றாக்குறையும் நீங்க உறுதியான வழியாகும்.

சென்ற பல ஆண்டுகளாக, தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி மன நிறைவளிக்கும் வகையில் ஏற்பட்டுள்ளது. உணவு தானியங்களைப் பொறுத்தவரை, நான்காவது திட்டக் கால அளவில், 74 இலட்சம் டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இலக்காயிருக்க. 1973-74 ஆம் ஆண்டில், 73 இலட்சம் டன் உணவு தானியங்களை நாம் உற்பத்தி செய்துள்ளோம். எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில், 11.5 இலட்சம் டன் என்று உற்பத்தி இலக்கு வரையறுக்கப்பட்டிருக்க, 12.2 இலட்சம் டன் உற்பத்தி கிட்டியது. பருத்தியைப் பொறுத்த வரையில், 1973-74-க்கான உற்பத்தி இலக்கு 4 இலட்சம் பொதிகள் என்றிருக்க, கிட்டிய உற்பத்தி 3.4 இலட்சம் பொதிகளாகும். கரும்புப் பயிரைப் பொறுத்த வரையில், 11 இலட்சம் டன் வெல்லம் என்ற உற்பத்தி இலக்குக்கு மாறாக, 13.7 இலட்சம் டன் வெல்லம் உற்பத்தியாகியது. இவ்வாறாக இம்மாநிலத்தில் பல்லாண்டுகளாக வேளாண்மை உற்பத்தித் திறன் கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டிருப்பது கண்கூடு.

மிகுபயன் தருகிற விதைகளையும், இராசயன உரங்களையும், பூச்சி கொல்லி மருந்துகளையும், மேம்பட்ட வேளாண்மை முறைகளையும் பயன்படுத்துவதற்கான விருப்பத்தையும் திறமையையும் நமது உழவர்கள் பெற்றுள்ளனர். நமது உழவர்களுக்கு, உரிய காலத்தில், போதிய அளவிற்குக் கடன் வசதியையும், பயிரிடு பொருட்களையும் வழங்குவதற்

கான அடிபபடை வசதிகள் நம்மிடம் உள்ளன. ஆயினும், நிலநீரைப் பெருமளவிற்கு நாம் பயன்படுத்திய பிறகுங்கூட, நாம் வேளாண்மைக்கு மழையையும், மத்திய அரசு வழங்குகிற இரசாயன உரத்தையும் இன்னும் பெரிதும் நம்பியிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எடுத்துக்காட்டாக, நடப்பாண்டில் 3.25 இலட்சம் டன் நைட்ரஜன் நமக்குத் தேவைப்படுகிறது. எனினும், மத்திய அரசு நமக்கு 2.56 இலட்சம் டன் நைட்ரஜன் மட்டுமே ஒதுக்கியுள்ளது.. அதிலும், இதுவரையில் 1.70 இலட்சம் டன் மட்டுமே கிடைத்திருக்குமெனக் கணக்கிட்டுள்ளோம். வறட்சி நிலைமை நிலவும் இச்சூழ்நிலையில், உரிய காலத்தில், போதிய அளவிற்கு இரசாயன உரங்களை இம்மாநிலத்திற்கு ஒதுக்கித் தருமாறு நான் மீண்டும் மத்திய அரசை வேண்டிக்கொள்கிறேன். அப்போதுதான். உணவு உற்பத்திக்கான வளவாயில்களை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

வறட்சி நிலைமை காரணமாக வரும் மாதங்களில் வேளாண்மை உற்பத்தியை நாம் மும்முரமாகப் பெருக்க வேண்டியது அவசியம். இது தொடர்பாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோடை மாதங்களில் மூன்றும் போகம் விளைவிக்க உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்கான பல சலுகைகளும் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன் பெறும் வசதி மட்டுமின்றி போதிய அளவிற்கு உரங்களும் பூச்சி கொல்லி மருந்துகளும் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மின்வசதியும் தட்டுப்பாடின்றி வழங்கப்படும். மூன்றும் போகம், லெவி கொள்முதலிலிருந்து விலக்களிக்கப்படும். இச் சலுகைகளும் வசதிகளும் வழங்கப்படுவதன் விளைவாக, இயலும் இடங்களிலெல்லாம் உழவர்கள் மூன்றும் போகச் சாகுபடி செய்ய முன்வருவர். என்று நான் நம்புகிறேன்.

வருகிற பயிர்ட் பருவத்தில் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்காக குறிப்பாகப் பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். அடுத்த பயிர்ப் பருவத்தில் உழவர்களுக்குத் தேவைப்படும் விதைகளைக் கொள்முதல் செய்ய 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இம் மாநிலம் முழுவதிலும் நிலநீர் திட்டங்களுக்காகத் துளைபோடும் சாதனங்களையும், வெடி மருந்துகளையும் வாங்குவதற்காக, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், கல்லணைக் கால்வாயின் கடை மடைப் பகுதியில் உள்ள நிலங்கள் பயனடைவதற்காக, நிலநீரைப் பயன்படுத்த அவசரக் காலத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி நிலைமை நகரப் பகுதிகளில் குடிநீர் வழங்குதலையும் பாதித்துள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் 4,000 கிணறுகளைத் தோண்டவும், 5,000 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்காகவும், லாரிகளின் எண்ணிக்கையை 50 ஆக உயர்த்துவதற்காகவும் நீர்த் தொட்டிகளின் எண்ணிக்கையை 800 ஆக உயர்த்துவதற்காகவும் மாநகராட்சிக்கு 1,055 இலட்சம் ரூபாய் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகரப் பகுதிகள், கிராமப் பகுதிகள் இரண்டிற்காகவும் குடிநீர் வழங்கு திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றியுள்ளது. நான்காவது திட்டத்தில், இதற்காக மொத்தம் 46 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1971-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்டபிறகு 19.8 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இரண்டு மாநகராட்சிகளும், 83 நகராட்சிகளும், 5 நகராட்சி நகரியங்களும், 8 ஊராட்சி நகரியங்களும், 81 பேரூராட்சிகளும் தற்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு வசதி பெற்றுள்ளன. இவற்றால் தமிழ் நாட்டில், நகர மக்கள் தொகையில், ஏறத்தாழ 65 சத வீதத்தினர் பயனடைகின்றனர். நடப்பு ஆண்டில், 25 நகர நீர்வழங்கு திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 112 நகரங்களில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதிகளைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள 634 கிராமங்களுக்கும் நரம்புச் சிலந்தி போன்ற நோய்கள் பரவியுள்ள 1,041 கிராமங்களுக்கும் 1974-75-ல் குடிநீர் வழங்கப்படும். இதற்காக 4.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதலாக, ''யுனிசெஃப்'' உதவியுடன் மொத்தம் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1,500 துளைக் கிணறுகள் அமைக்கப்படும். குழாய்கள் தயாரிக்கப்படுவதையும், அமைத்துப் பொருத்தப்படுவதையும் விரைவுபடுத்துவதன் மூலம், வீராணம் நீர் வழங்கு திட்டத்தைத் துரிதப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1976-ஆம் ஆண்டு முற்பாதியில் இத்திட்டம் பயனளிக்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

நீர் மின் சக்தியையே இன்னும் பெரிதும் சார்ந்துள்ள நமது மாநிலத்தில், மழை குன்றிய காலங்களில் மின்சக்தி நிலைமை எவ்வாறு மோசமாகப் பாதிக்கப்படும் என்பதைத் தற்போதுள்ள வறட்சி நிலைமை மீண்டும் உணர்த்தியுள்ளது. இம் மாநிலத்தில் மொத்த மின்சக்தி உற்பத்தித் திறன், 2,254 மெகாவாட்டாகும். இதில் நீர் மின் வாயில்களிலிருந்து கிடைக்கிற மின் சக்தி, 1,224 மெகாவாட்டாகும். தமிழ் நாட்டில் உள்ள நீர் வாயில்கள் அனைத்தையும் நாம் பெரும்பாலும் முழுவதும் பயன்படுத்திவிட்டோம். நிலக்கரி கிடைக்கிற பகுதிகளிலிருந்து நாம் மிகுந்த தொலைவில் உள்ளோம். எனவே, அணுசக்தி வாயில்கள், நமது மாநிலத்திலேயே கிடைக்கிற பழுப்பு . நிலக்கரி ஆகியவற்றின் அடிப்படையில்தான், மின்சக்தி உற்பத்தியை வருங்காலத்தில் நாம் பெருக்க இயலும். இந்தக் காரணத்தால்தான், கல்பாக்கம் அணு மின் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி முடிக்குமாறு .. நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். 500 மெகாவாட் திறனுள்ள மூன்றுவது பிரிவைக் கூடுதலாக ஏற்படுத்துவதன் மூலம், இந்த நிலையத்தை விரிவுபடுத்தும் பணியை இனியும் கால தாமதம் இல்லாமல் தொடங்க வேண்டும். 1,000 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அணு மின் நிலையம் ஒன்றைத் தூத்துக்குடி அருகில் நிறுவவும் நாம் வேண்டியுள்ளோம். இது தொடர்பான முடிவுகளை விரைவில் மத்திய அரசு அறிவிக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

ஆயிரம் மெகாவாட் திறன் உள்ள இரண்டாவது அனல்

மின் நிலையத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கு, நெய்வேலியில், இரண்டாவது சுரங்கத்தை வெட்டும் பணியை, மத்திய அரசு மேலும் கால தாமதம் செய்யாமல் தொடங்க வேண்டியது அவசியமாகும். இத் திட்டம் முழுமையுற 7 அல்லது 8 ஆண்டுகள் ஆகக் கூடும். எனவே, தொடக்கப் பணிகளை மேற்கொள்ளுவதில் தயக்கமோ தாமதமோ இல்லாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். இம் மாநிலம் தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும், நீடித்து முழு வளர்ச்சியுடன் விளங்குவதற்கு அவசியமான பெருந் திட்டங்களை, மத்திய அரசு தொடர்ந்து ஒத்திப் போட்டுக் கொண்டிருப்பது, நமக்கு மிகுந்த கவலையையும் வேதனையையும் அளிக்கிறது. குறுகிய கால இடர்ப்பாடுகள் உள்ள நேரத்தில், நீண்ட கால மேம்பாட்டையும் வளர்ச்சியையும் நாம் மறந்து விடுவதற்கு இல்லை. குறிப்பிட்ட ஒரு திட்டம் மிகப் பெரிய அளவினதாகவும், அதன் பயன்கள் பல்லாண்டுகளுக்குப் பின்னர் தான் கிட்டும்என்றும், அதனல் அது குறித்து உடனடியாக முடிவெடுப்பது சரியல்ல எனவும் தோன்றக் கூடும். எனினும், மின் உற்பத்தி, மின் வழங்கல் போன்ற இன்றியமையாத் துறைகளில் உருவாக்கும் வசதிகள், அவ்வப்போதுள்ள தேவைகளை விட ஓரளவுக்குக் கூடுதலாகவே அமைவது அவசியம் என்பதை, இருபது ஆண்டுகளாக நாடு எங்கும் நாம் பெற்ற அனுபவம் வலியுறுத்தி உள்ளது. எனவே, மின் வசதியைப் போன்றஅடிப்படை வளர்ச்சித் துறையில், துணிவுடன் முதலீடு செய்வது அவசியமாகும்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்குவதில் அத்தகைய ஒரு முடிவு, மேற்கொண்டும் சுணக்கமின்றி எடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன். அப்போதுதான், தமிழ் நாட்டின் மேம்பாட்டுக் காகவும், வளர்ச்சிக்காகவும், தக்க காலத்தில் செய்ய வேண்டிய முயற்சியை செய்யாது விட்டுவிட்டோமோ என்று பத்தாண்டுகளுக்குப் பின்னர் எண்ணும் நிலை ஏற்படாமல் இருக்கும்.

மத்திய அரசு, தமிழ்நாட்டுப் பிரச்சினைகளில், பரிவுடன் அணுகி, உடனடி உதவி அளிக்க வேண்டியுள்ள சிலவற்றைப் பற்றி நான் குறிப்பிட விழைகிறேன். பொது மக்களுக்கு உணவு தானியம் வழங்கிவரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, நமது மாநிலம் மேற்கொண்டுள்ள முனைப்பான கொள் முதல் திட்டத்திற்கு உறுதுணையாக, மத்திய அரசு உரிய காலத்தில் போதுமான அளவுக்கு உணவு தானியங்களை ஒதுக்கித் தர வேண்டுமென்பது நமது தலையாய வேண்டுகோள் ஆகும்.

மாநில உணவு உற்பத்தியில் 20 இலட்சம் டன் பற்றாக் குறை ஏற்படுமென நாம் கணக்கிட்டுள்ளோம். அதைக் கருதிப் பார்க்கையில், அடுத்த 10 திங்கள்களுக்கு 10 இலட்சம் டன் உணவு தானியம் வழங்க வேண்டும் என்ற நமது கோரிக்கை அதிகமென்று கூற முடியாது. கடந்த ஆண்டுகளில் நமக்கு நல்ல விளைச்சல் கிடைத்தபோதெல்லாம், இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுடன் நாமே முன்வந்து நமது உபரியைப் பகிர்ந்து கொண்டுள்ளோம். அதே போல், இன்று நமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்குங்கால், உபரி மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்கள், மத்திய அரசிடமிருந்து தேவையான இசைவு கிடைக்குமாயின் நமக்கு உதவி செய்வதாகக் கொள்கையளவில் விருப்பம் தெரிவித்துள்ளன. தற்போதைய நிலவரங்களின்படி, இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் நல்ல பயிர் விளைச்சல் இருக்குமெனத் தோன்றுகிறது. உணவு தானியங்கள் உள் நாட்டில் கிடைப்பதற்குக் கூடுதலாக, பெருமளவில் இறக்குமதி செய்யவும் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு உதவி செய்ய முடியும் என்றும், வரும் மாதங்களில் தமிழ்நாட்டின் இன்றியமையாத உணவுத் தேவையை ஈடு கட்ட ஒரு வழி கட்டாயம் காண இயலும் என்றும் நாம் நம்புகிறேன்.

இது குறித்து தானும் அதே அளவுக்கு அக்கறை கொண்டு உள்ளதாக மத்திய அரசு நமக்கு உறுதியளித்துள்ளது. தமது மாநிலத்துக்குத் தானியங்களை, குறிப்பாக அரிசியை கூடுதலாக ஒதுக்குவதன் மூலம் மத்திய அரசு அதன் உறுதிமொழியைச் செயற்படுத்திக் காட்டும் என்று நான் நம்புகிறேன்.

வறட்சித் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 30 கோடி ரூபாய் நிதி உதவி வழங்குமாறு நாம் மத்திய அரசை அணுகியுள்ளோம் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். மத்திய அரசு நடப்பாண்டுக்கு 7.5 கோடி ரூபாய் அளித்திருப்பதுடன் 1975—76-ல் மீதித் தொகையையும் அளிக்குமென நம்புகிறோம்.

ஆறாவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கை விளைவாகக் கொண்டுவரப்பட்ட ஏற்பாடுகளையொட்டி, இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இடர்ப்பாடுகளைச் சமாளிப்பதற்கான சிறப்பு நிதி உதவி முறை கைவிடப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாநிலமும் இயற்கைச் சீற்றங்கள் துயர் தணிப்பு நிதிக்கு ஆண்டுதோறும் பங்குத் தொகை அளிக்க வேண்டும் என்றும், எதிர்பாராத இயற்கைச் சீற்றங்களைச் சமாளிப்பதற்காக அந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிணங்க, நிதி ஆணைக் குழு பரிவுரை செய்துள்ளவாறு, நடப்பாண்டில் துயர் தணிப்பு நிதிக்கு 1.52 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். துரதிருஷ்டவசமாக, வறட்சி நிலைமைகளும், வெள்ளமும், ஏனையஇயற்கைச் சீற்றங்களும் நிதித் திட்டக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்படுவதுமில்லை, அந்த நிதிகள் முறையாகச் சேர்ந்து பலன் அளிக்கும் வரையில் காத்தி

ருபதுமில்லை. எனவே, சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன்மூலமாகத்தான் இத்தகைய அசாதாரண நிகழ்வுகளைச் சமாளிக்க முடியும்.

இந்தப்பிரச்சினையை மத்திய அரசு மெய்ப்பாட்டுணர்வுடன் அணுகி, பல ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்க வகையில் நமக்கு நிதிஉதவியை அளிக்கும் என்று நாம் நம்புகிறோம். அப்போதுதான், வறட்சி நிலைமை காரணமாக, நமது மாநிலத்தில் வளர்ச்சித் திட்டங்களையும் நலத் திட்டங்களையும் குறைக்காமலிருக்க இயலும். பார்க்கப் போனால், வறட்சி நிவாரணப் பணிகளுக்கான தேவைகளை முன்னிட்டு கிராமப் புற வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளை உயர்த்த வேண்டியிருக்கும். எனவே, வறட்சி காரணமாக, இயல்பான வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுமானால், அது இரட்டிப்புத் தண்டனையாகவே இருக்கும்.

தற்போதையசூழ்நிலைகளில், வேளாண்மைக்குக் கிடைக்கக் கூடிய நீரின் அளவைப் பெருக்கக் கூடிய அவசரத் திட்டங்கள் பலவற்றை நாம் மேற்கொள்ள வேண்டுவதும் அவசியமாகும். விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் இயல்பான அளவை, வரும் ஆண்டில், ஆண்டு ஒன்றுக்கு 30,000 என்பதிலிருந்து 60,000 ஆக உயர்த்த வேண்டியது இவற்றுள் எல்லாம் மிக முக்கியமானதாகும். இத் திட்டத்திற்காக, மின்சாரத் துறைக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசியமாகும். இத் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து சிறப்பு உதவி கிடைக்கும் என்று நம்புகிறோம்.

1974 செப்டம்பர் 1 ஆம் நாளிலிருந்து, மாநிலம் முழுவதிலும் மதுவிலக்கு மீண்டும் முழுமையாகச் செயலுக்குக் கொண்டு வந்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சி தரும் செயல் ஆகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள அரசு நெறிமுறை கோட்பாடுகளில் மதுவிலக்கும் ஒன்றாகும். ஆனால், மதுவிலக்கை மீண்டும் செயலுக்குக் கொண்டு வருவதினால் மாநில வருவாயில் ஏற்படக் கூடிய இழப்பை, துரதிருஷ்டவசமாக, விதி முறைகளை மட்டும் முன்னிட்டு, ஆறாவது நிதி ஆணைக் குழு கருத்தில் கொள்ளவில்லை. இதனால் ஐந்தாவது திட்டக் காலத்தில், அதாவது, அடுத்த நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பு செயலுக்கு வரு முன்னர், மொத்தம் 234 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிட்டுள்ளோம். 1969-க்கும் 1974-க்கும் இடைப்பட்ட காலத்தில் மத்திய அரசு செயல்படுத்தி வந்த திட்டத்தின்படி, மது விலக்கைச் செயலுக்குக் கொண்டு வந்துள்ள மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பில், 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு வந்தது. இத்திட்டத்தை மீண்டும் செயலுக்குக் கொண்டுவருமாறும், துணிவாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ள தமிழ்நாட்டிற்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஓரளவிற்கேனும் இவ்வாறு ஈடுசெய்யுமாறும் நாம் மத்திய அரசைக் கேட்டுக்ளோம். மாநிலங்கள் தங்கள் சொந்த முயற்சியினாலேயே தங்களது வழி வகை நிலைமையைச் சீராக்கிக் கொள்ளும் வரை, சிறிது காலத்திற்கேனும் மத்திய அரசு அவற்றின் உதவிக்கு வரவேண்டியது அவசியமாகும்.

மக்களது பல்வேறு தேவைகள் பெருகிவருகின்றன; விலைவாசிகள் கடுவேகத்தில் உயர்ந்து வந்துள்ளன. இந்நிலையில், திட்டப் பணிகளுக்கான மத்திய அரசின் உதவி கடந்த இரண்டு ஆண்டுகளாக உயராமல் ஒரே அளவாக இருப்பது முரணாகும். அடுத்த ஆண்டிலும், மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவி உயர்த்தப்பட மாட்டாது என்று தெரிய வருகிறது. இதனால் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆகும் கூடுதல் செலவுகளை மாநில அரசுகள், தங்கள் சொந்த முயற்சிகளைக்கொண்டு நிறைவேற்றவேண்டியநிலைமை உருவாகியுள்ளது.

மாநிலஅரசுகளின்பொறுப்புகள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே செல்கின்றன. ஆனால், அவற்றின் வருவாய்களும், வரி விதிப்பு அதிகாரங்களும் குறைவாகவே உள்ளன. எனவே, அறவே வளர்ச்சியற்ற திட்ட நிதி உதவி முறை, நடைமுறைக்கு ஏற்றதாகயில்லை. இந்த முரண்பாட்டை உடனடியாகக் கவனித்து, வருகின்ற ஆண்டில் எல்லா மாநிலங்களுக்கும் அளிக்கப்படும் திட்ட நிதி ஒதுக்கீட்டைத் தக்கவாறு உயர்த்தவேண்டும் என மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகர், இந்தியாவிலுள்ள பெரு நகர்களில் ஒன்றாக இருப்பதால், தமிழ் நாட்டிற்குத் தனிப் பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன. சென்னை மாநகர் நமது மாநிலத்திற்கு மட்டுமல்லாது, பரந்த உள் நாட்டுப் பகுதிகளுக்குத் துறைமுகமாகவும், வணிக நிலையமாகவும் இலங்குகிறது. எனவே, இந்த மாநகரின் தேவைகள், மத்திய அரசாலும் மாநில அரசாலும் கூட்டு முயற்சியின் மூலம் நிறைவு செய்யப்பட வேண்டியது முறைமையாகும். மத்திய அரசிடமுள்ள பெருநகர் வளர்ச்சி நிதியிலிருந்து கிடைக்கின்ற



உதவி, கல்கத்தா, பம்பாய் போன்ற பிற பெருநகர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இந்த மாநகரின் குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, குடிசைமாற்றுத் திட்டம், சாலைகள்—போக்கு வரத்துத் தேவைகள் உரிய காலத்திலும் அவசரமாகவும் கவனிக்கப்பட வேண்டிய அளவுக்குப் பெரிதும் பெருகி உள்ளன. மத்திய அரசு நீண்ட நோக்குடனும், பரிவுடனும் இதைப் போன்ற தேசீயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நமக்கும் உதவிட முன்வரும் என்று நம்புகிறோம்.

மத்திய அரசின் ஒத்துழைப்பும் உதவியும் தேவைப்படுகின்ற முறைகள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன் என்பதாலேயே வளர்ச்சிப் பணிக்காகவும் வறட்சித்துயர் தணிப்புப் பணிக்காகவும் நமது சொந்த வருவாய் வாயில்களை கவனமாகச் சேகரித்துப் பல வழிகளிலும் பெருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எந்த வகையிலேனும் குறைக்க விரும்புகிறேன் என்பது பொருள் அல்ல. நெறிக்குட்பட்டு, நிதி நிர்வாகத்தை நாம் நடத்தி வந்துள்ளதால், அவசியமேற்படுகின்ற காலங்களில் மத்திய அரசின் உதவி பெறுவதற்குரிய சிறப்புரிமை நமக்கு உண்டு என்று கருதுகிறோம். நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. வரி விதிப்பு மூலமாகவும், தனிப்பட்டோர் சேமிப்புகளைத் திரட்டுவதன் மூலமாகவும் நாம் கூடுதலாக நிதி திரட்டும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம்.

1974-ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம், தமிழ்நாடு இத்துறையில் மற்ற மாநிலங்களுக்கு மீண்டும் முன்னோடியாக விளங்குகிறது. தனிப்பட்டவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கவும் அதே நேரத்தில் சமூக முதலீடுகளைப் பெருக்கவும், மக்களின் தனிப்பட்ட சேமிப்பைத் திரட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதலீடு செய்கின்றவர்களுக்கும், அரசுக்கும் பயன் அளிக்கின்ற இத் திட்டத்தை, மக்களிடையே பரப்ப வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேசீய அளவிலும், நமது மாநில அளவிலும் நாம் தற்பொழுது இக்கட்டான நிலைமையில் இருந்து வருகிறோம். இருந்தாலும், தற்போதைய நிலைமைகளையெல்லாம் கடந்து, முழு வெற்றியுடனும், கூடுதலான வலுவுடனும் திகழ்வோம் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இந்த நிலைமையைச் சமாளித்து வருகிறோம். 1969-ல் நாம் வறட்சி நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அதன்பின் மூன்று ஆண்டுகள் கழித்து 1972-ல் கடுமையான வெள்ள நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இந்த நிலைமைகளையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்தோம். மீண்டும் அவ்வாறே இப்போதுள்ள வறட்சி நிலையைச் சமாளிப்போம் என்பதில் ஐயமில்லை.

இந்தச் சமயத்தில், எல்லாப் பிரிவு மக்களிடையேயும் ஒற்றுமையும் ஒருமித்த கருத்தும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். வரும் ஆண்டு தேர்தலுக்கு முந்திய ஆண்டாக இருந்தபோதிலும், உணவுப் பிரச்சினை அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு, இந்த நெருக்கடியைச் சமாளிப்பதில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்குவர் என நான் நம்புகிறேன். நாம் பழமையும் பெருமையும் நல்லதொரு பாரம்பரியத்தையும் கொண்டவர்கள். வரும் மாதங்களில், மாநிலம் முழுவதிலும் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளைச் சமாளிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒவ்வொருவரும் தங்களது முழு மனதுடன் கூடிய ஒத்துழைப்பை நல்குவர் என்று நம்புகிறேன். குறிப்பாக நெருக்கடியான இந் நேரத்தில், அரசு அலுவலாளர்கள், தத்தம் பணிகளில் முழுமூச்சுடன் ஈடுபட வேண்டுமென்று நான் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

நடக்கவிருக்கும் கூட்டத் தொடரில் இரு அவைகளிலும் உங்கள் நடவடிக்கைகளை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். உயர்ந்த கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி, வழக்கமாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நல்லெண்ணம் ஆகியவை கமழும் சூழ்நிலையில் இந்த விவாதங்கள் நடத்தப்பெறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய குண நலன்களுக்காக இந்திய நாட்டினர் அனைவரும் நம்மைப் பாராட்டி வருகின்றனர். இவை நமது பொது வாழ்வின் உயிர் நாடியாக விளங்கி வருகின்றன. வளர்ச்சியுறும் சமுதாயம் எதற்கும் இது அருஞ் செல்வமாகும். ஜனநாயகத்தை வாழ்க்கை முறையாக மலரச் செய்வதில் இந்தியா முழுமைக்கும் தமிழ்நாடு வழி காட்டும் என நான் மனமார நம்புகிறேன்.

வணக்கம்.

(தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 20-2-1975 அன்று ஆற்றிய உரை).

10 ரூ. — 100 ரூ.

ஆதாயமோ மீண்டும் பெறுவதோ

எதுவாயினும்

தமிழ்நாடு பரிசுப் பத்திரம் வாங்குவீர்!
போட்ட முதல் வீணாவதில்லை.

பெரும் பரிசைப் பெற ஆறு வாய்ப்புகள்.
பரிசு பெறாவிட்டால் நீங்கள் போட்ட முதல்
உங்களுக்கே திருப்பி அளிக்கப்படும்.
ரூ. 100/- மற்றும் ரூ. 10/- விலை மதிப்பில்
தமிழ்நாடு பரிசுப் பத்திரங்கள் கிடைக்கும்.
ஆறு குலுக்கல்கள் நடைபெறும்.
சிறப்பு பரிசு: ரூ. 5,00,000 மற்றும்
ரூ. 2,00,000. முதல் பரிசு: ரூ. 1,00,000
மற்றும் ரூ. 50,000. இவற்றைத் தவிர
உன்னதப் பரிசுகள் பல உண்டு.

உங்களுக்கு பரிசு கிடைக்காவிட்டால்,
முதல் குலுக்கல் தேதியிலிருந்து இரண்டு
ஆண்டுகளுக்குப் பின்பு உங்கள் முதலீடு
திருப்பி அளிக்கப்படும்.
பரிசுப் பத்திரங்கள் நாட்டுடமையாக்கப்பட்ட
வங்கிகள் மற்றும் ஷெட்யூல்ட் வங்கிகள்,
துணைக் கருவூலங்கள் மற்றும் தமிழ்நாடு
பரிசுத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள
அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம்
கிடைக்கும்.

மேற்கொண்டும் விவரங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்;
இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600 002

DIPR

சிந்தனைச் சின்னம்!

~ ஈரோடு தமிழன்பன் ~



நூற்காத பட்டே! நெய்யும்
தறியிடை நுழையா நூலே!
ஏற்புடைத் தாடி உன்னை
எப்படிப் பாடுவேன் நான்?
தோற்புலம் மீது தோன்றித்
தாடையில் தொங்கு கின்றாய்!
நேற்றுக்கு முன்னாள் எல்லாம்
நீஎங்கே இருந்தாய் கூறு?

கன்னமுன் படுக்கை! ஆடிக்
களிப்பதற் கேற்ற மேடை!
மென்முக விளிம்பின் மேலே
விதையிடா தெழுந்த நாற்றே!
உன்னெழில் உணரார் வெட்டி
ஒழிப்பதால் ஒழிந்தா போனாய்!
வன்பகை அஞ்சாக் கட்சி
வளர்ச்சிக்கோர் எடுத்துக் காட்டே!

தாடிநீ வாழ்க! உன்னைக்
கைகளால் தடவின் நெஞ்சில்
பாடியே எண்ணம் பூக்கும்
பாய்ந்திடும் புதிய வெள்ளம்!
வாடிடாப் பயிரே! உன்னால்
வனப்புறக் கன்னப் பக்கம்
மூடினர் ஒடுக்கம் பல்லோர்
முழுமெய்யே! பொய்யா சொன்னேன்?

முகத்தினில் அழகு சேர்க்கும்
முன்னிளந் தாடி செம்மை
முகக்குஞ்செம் பட்டே யாகும்
முழுவாழ்வும் பனைநார் போலத்
திகழ்வதும் உண்டோ நீதான்?
தெள்ளாற்ற றல்போல் மின்னித்
தகதகப்பை வாலி பத்தில்
தையல்கள் மையல் கொள்வார்!

மூப்பினில் பஞ்சே யாகி
முகிழ்த்திட்ட நெஞ்சத் தூய்மை
கூப்பிட்டுச் சொல்வாய்! பேரர்
கொஞ்சிட ஊஞ்சல் ஆவாய்!
சாப்பிட்ட பின்னர்க் கையைத்
தடவுதற் கிசைவாய் வாங்கிச்
சூப்பிய பின்னெ றிந்த
பனங்கொட்டை நிலைமை சொல்வாய்!

முள்போலக் குத்தும் தாடி
முளைத்திட்ட ஊசிக் கூட்டம்
யாரை
என்னுவர் தாடி
உன்மத்தங் காயே என்று!
வெள்ளாட்டுத் தாடி, சற்றே
விளிம்பினில் விளைச்சல், பாக்கி
உள்ளமற் றிடம்க ரம்பே
உழுதாலும் விளையா தோன்றும்!

சிந்தனைச் சின்னம் நீயே!
சிறக்கநீ தாடை மீது
வந்ததால் தாடி யானாய்
வாய்மிசை வந்த தாலே
வந்திட்ட மீசைப் பேர்போல்!
வாலிபர் உன்னைப் பற்றி
இந்நாள் புரிந்து கொண்டார்
என்னமாய் வளர்க்கின் றார்கள்!

விலைவாசிகள் விஷம் போல்

ஏறிவரும் இந்த
நாட்களிலும் கூட

உங்கள் மன
நிம்மதிக்கு மட்டும்
பஞ்சமில்லை.

30 வருடங்களில் உங்கள் ஆயுள்
இன்ஷூரன்ஸின் மதிப்பு ரூ. 2500/-
அதாவது நீங்கள் சாதாரணமாக
நாளொன்றுக்கு ஒரு கோப்பை
தேநீருக்கென 25 காசு* வீதம்
செலவிடுவதைப் போன்றதே.



* இப்போது உங்கள் வயது 30
என்று வைத்துக் கொள்வோம்

PRATIBHA 2317-IVI-TAM-1

இந்த நாட்களிலும்
ஆயுள் இன்ஷூரன்ஸ் உதவியினால் நீங்கள்
மன நிம்மதி பெறுவது உங்கள் சக்திக்குட்பட்டதே.

வெற்றி குவிக்கும் வீட்டு வசதி வாரியம்!

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் வீட்டுப் பிரச்சினையும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மக்கள் நெருக்கம் அதிகமுள்ள நகரங்களில் வசதியான வீடு இல்லாமல் அல்லல்படும் மக்களை நாம் பார்க்கிறோம். இந்தக் குறையைப் போக்கிட, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மக்களின் வீட்டுத் தேவையை நிறைவேற்றும் வகையில் பல்வேறு சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றது. இதனை விளக்குகிறார் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள்.

கே : வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் என்ன ?

ப : *1. பொருளாதார வசதி அடிப்படையில் பல்வேறு பிரிவினருக்கு அவர்களுடைய சக்திக்கு ஏற்ற வகையில் வீட்டு மனைகள் விற்பது. 2. வாரியம் அமைக்கும் புறநகர் பகுதியில் சாலைகள், தண்ணீர் வழங்குதல் போன்ற பல முக்கிய வசதிகளைச் செய்து கொடுப்பது. 3. சென்னை நகருக்கு அருகே உள்ள இந்தப் புதுப் பகுதிகளில் வசிப்பவர்கள் அனாவசியமாக நகருக்குப் போய் வருவதைத் தவிர்க்கும் வகையில், புதுப் பகுதிகளிலேயே அஞ்சல் நிலையம், காவல் நிலையம், மருத்துவமனை, பள்ளிக்கூடம் போன்ற பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பது. 4. மக்கள் உடல்நலத்துடன் வாழ்வதற்கு ஏற்ற வகையில் அழகிய பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் ஆகியவைகளை அமைப்பது., 5.சமூக கலாச்சார வாழ்வுக்கான திருமண மண்டபம், பொழுதுபோக்கு நிலையம் போன்றவைகளை அமைக்க வசதி செய்வது ஆகியவை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய நோக்கங்களாகும்.*

கே : தமிழ்நாட்டில் வீட்டு வசதி வாரியம் ஆற்றிவரும் பணிகள்பற்றி விவரமாகக் கூறமுடியுமா ?

ப : *தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. 1. நிலம் கையகப்படுத்தலும், மேம்படுத்தலும், 2. குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கான தவணை முறை வீட்டு வசதித் திட்டம், 3. நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களுக்கான தவணை முறை வீட்டு வசதித் திட்டம், 4. சென்னையைத்*

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்.,

— பேட்டி —

தவிர மற்ற மாவட்டங்களில் குடிசை மாற்றுத் திட்டம். 5. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம். 6. கடைநிலை ஊழியர்களுக்கான வீட்டு வசதித் திட்டம், 7. தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம், 8. நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் சேமிக்கும் திட்டம், 9. சிறப்பு மலிவு வீடு திட்டம், 10. கடைகள், பொதுக்கூடங்கள் வாடகைத் திட்டம், 11. நீதித்துறை அலுவலர்களுக்கான வாடகை வீடு திட்டம், 12. வருவாய் மற்றும் வணிகத் துறை அலுவலர்களுக்கான வாடகை வீடு திட்டம், 13. உதகை, ஏர்க்காடு முதலிய இடங்களில் 'சிறு குடில்' அமைத்தல் திட்டம், 14. முன்னாள் இராணுவத்தினருக்குக் கோவை புதூரில் வீட்டு வசதித் திட்டம், 15. பர்மா அகதிகள் மறு வாழ்வுத் திட்டம், 16. கைவினைஞருக்கு வீட்டு மனைகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஆகியவற்றை நாம் இங்கே முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

கே: இதுவரை எத்தனை நகர்கள் உருவாகியுள்ளன?

ப: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இதுவரை 44 நகர்கள் உருவாகியுள்ளன. இவற்றில் சென்னையில் மட்டும் 1. அசோக் நகர், 2. கலைஞர் கருணாநிதி நகர், 3. அறிஞர் அண்ணா நகர், 4. பெசன்ட் நகர், 5. இந்திரா நகர், 6. சாஸ்திரி நகர், 7. அறிஞர் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், 8. கொரட்டூர், 9. வட சென்னை புறநகர் (வியாசர்பாடி), 10. திருவான்மியூர் புறநகர், 11. கோட்டூர்புரம், 12. மறைமலை நகர், 13. மணலி புறநகர், 14. திரு.வி.க நகர், 15. சர்மா நகர், 16. சி.ஐ.டி. நகர் 17. நந்தனம், 18. இராமகிருஷ்ணா நகர், 19 சி.ஐ.டி. காலனி (மைலாப்பூர்), 20. மந்தைவெளிப்பாக்கம், 21. டிரஸ்ட்புரம், 22. பட்டினப்பாக்கம், 23. லாயிட்ஸ் காலனி, 24. பீட்டர்ஸ் காலனி, 25. கீழ்ப்பாக்கம் கார்டன் காலனி, 26. சில்வன் லாட்ஜ் காலனி, 27. செனாய் நகர், 28. சிதம்மா காலனி ஆகியவை உருவாகியுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் 1. கலைஞர் கருணாநிதி நகர், 2. பாலாஜி நகர், கரூர், 3. திருச்சி புறநகர்த் திட்டம், 4. சுந்தரராஜ நகர், செங்கை மாவட்டத்தில் செங்கைபுறநகர்த் திட்டம்; வடஆர்க்காடு மாவட்டத்தில், வேலூர் புறநகர்த் திட்டம்; தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர் புறநகர்த் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவையன்றி, பூம்புகாரில் மீனவர் குடியிருப்புத் திட்டம், புதுக்கோட்டை புறநகர், சேலம் புறநகர்த் திட்டமும், நீலகிரி மாவட்டத்தில் காந்தி நகர், மதுரை மாவட்டத்தில் ஞானஒளிபுரம், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர் ஆகியவையும், திருநெல்வேலி மாவட்டத்தில், பாளையங்கோட்டை புறநகர்த் திட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் புறநகர்த் திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கே: குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக வீட்டு மனைகள், சலுகைகள் தரப்படுகின்றனவா?

ப: ஆம். பொருள் வசதி மெலிந்தோருக்கும், கைவினைஞர்களுக்கும் வீட்டு மனைகள் தரப்பட்டிருக்கின்றன. வியாசர்பாடியில் 2,215 மனைகளும், கொரட்டூரில் 361 மனைகளும், கலைஞர் கருணாநிதி நகரில் 2,037 மனைகளும், அறிஞர் அண்ணா நகரில் 1,983 மனைகளும், அறிஞர் அண்ணா மேற்கு விரிவாக்கத்தில் 354 மனைகளும் ஆக மொத்தம் 6,949 மனைகள் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளன.

கே: ஒரு ரூபாய் சேமிப்பின் மூலம் வீடுகள் தரப்படுகின்றனவா?

ப: ஆம். வீட்டு வசதி வாரியம் சிண்டிகேட் வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றின் கூட்டு முயற்சியோடு பணம் செலுத்த விழைவோர்களிடம் நாளொன்றுக்கு ஒரு ரூபாயோ, அதற்கு மேலேயோ, அவரவர்கள் வீடு சென்று பெற்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்று வந்த பணம், ஒவ்வொரு மாத முடிவிலும் சேமிப்பவர் கணக்கில் சேர்க்கப்படும். இவ்வண்ணம் 5 ஆண்டில் சேமிக்கப்பட்ட பணம் ஒரு வீடு அல்லது வீட்டு மனை வாங்கப் பயன்படுத்தப்படும். சேமிப்பை வசூலிக்கும் வங்கிகள், சேமிப்புடன் வட்டியும் சேர்த்து அதற்கு மும்மடங்கிற்கான தொகையையும் வீட்டு வசதி வாரியத்தின் சேமிப்பவரின் வீடுகட்டி கொடுக்கும் பணியில் முதலீடு செய்யப்படும். இத்திட்டத்தின்



பெசன்ட் நகரில் நடுத்தர வருமானமுள்ளவர்க்கான வாடகை வீடுகள்.



கொரட்டூரில்.....



சென்னை சாஸ்திரி நகரில்....

கீழ் பல இடங்களில் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

கே: மிகக் குறைந்த வருவாயுடையவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏதேனும் மலிவு வீடு திட்டம் உள்ளனவா?

ப: தமிழ்நாட்டில் வீட்டு வசதி வாரியம் பலதரப்பட்ட வருவாய்ப் பிரிவினர்களின் குடியிருப்புகள் தேவைகளை மிகுந்த கவனத்துடன் நிறைவேற்றி வருகின்றது. இருப்பினும், பெரும்பான்மையாக மிகக் குறைந்த வருவாயுடையவர்கள் சொந்தக் குடியிருப்பு வசதிகளைப் பெறும் வகையில் கவர்ச்சிகரமான ஓர் திட்டத்தினை வாரியம் தீட்டியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வீடு கட்ட, சொந்த நிலம் ஏற்கெனவே வைத்திருப்பவர்களுக்கு ரூ. 8,500 முதல் ரூ. 10,000 மதிப்புள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டின் பரப்பளவு சுமார் 263 சதுர அடியிலிருந்து 322 சதுர அடி வரை உள்ளன. மனுதாரர் விண்ணப்ப மனுவுடன் முன் வைப்புத் தொகையான ரூ. 100 செலுத்துதல் வேண்டும். இக்குடியிருப்புத் திட்டம் தயாராகி செயல்படவிருக்கும் துறு வாயில் திட்டமதிப்பீட்டில் 10 சதவீதத் தொகை செலுத்த வேண்டும். மீதமுள்ள 90 சதவீதத் தொகை குடியமர்ந்த நாளிலிருந்து 20 ஆண்டுகளில் மாதத்தவணை முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

இவ்வாரியம் தன்னுடைய தேவைக்கான நிதியைப் பெரும்பாலும் தில்லி நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெற முயற்சி செய்யும். இக்கழகத்தின் வட்டி 6.5 சதவிகிதம். பணம்செலுத்தும்காலத்தவணை 20 ஆண்டுகள் ஆகும். வீட்டின் விலையைக் குறைக்கும் நோக்கத்துடன் சிறப்பு வடிவப்பாடுகளும், சிக்கன முறைகளும்



தஞ்சையில்.....



திருச்சியில்.....



மதுரை அண்ணாநகரில் சிறப்பு மலிவு வீடுகள்

மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தனிப்பட்டவர்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுக்கப்படமாட்டாது. மேலும் இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ. 425.00 இலட்சம் செலவில் 3,794 சிறப்பு மலிவு வீடுகள் கட்டப்படவிருக்கின்றன.

கே : இதுவரை எத்தனை சிறிய பெரிய வீட்டு மனைகள் (Plots) கொடுக்கப்பட்டுள்ளன ?

ப : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சென்னையிலும், மற்றும் எல்லா மாவட்டங்களிலும் சேர்ந்து 50,325 பெரிய மனைகளும், 6,949 சிறிய மனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

கே : வாடகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் (Flats) எத்தனை ?

ப : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சென்னையிலும், மற்றும் எல்லா மாவட்டங்களிலும் சேர்த்து வாடகை அடிப்படையில் வீடுகள் (Flats) கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி குறைந்த வருவாயுள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாடகை வீடுகள் அல்லது மாடி வீடுகள் சென்னை மாநகரில் 624, மதுரை மாவட்டத்தில் 282, திருச்சி மாவட்டத்தில் 198, கோவை மாவட்டத்தில் 142.

நடுத்தர வருவாயுள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாடகை வீடுகள் அல்லது மாடி வீடுகள் சென்னை மாநகரில் 415. மதுரை மாவட்டத்தில் 42. திருச்சி மாவட்டத்தில் 48. ஆக மொத்தம் தமிழகத்தில் வாடகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 1829.

கே : வீட்டு வசதி வாரியத்தின் புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?

ப : வீட்டு வசதி வாரியம் பல்வேறு புதிய திட்டங்களை நிறைவேற்றவிருக்கின்றன. அவை: 1. திருவான்மியூர் புறநகர்த் திட்டம், 2. அம்பத்தூர் புறநகர்த் திட்டம், 3. மதுரை வாயல் புறநகர்த் திட்டம், 4. பெசன்ட் நகர் விரிவுத் திட்டம், 5. பல்லாவரம் புறநகர்த் திட்டம். 6. மறைமலை நகர் நில மேம்பாட்டுத் திட்டம். 7. மணலி புறநகர்த் திட்டம்.

கே : அறிஞர் அண்ணாநகர் பொருட்காட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட ஒரு வீடு காட்சியளிக்கிறதே அதைப்பற்றிக் கூறமுடியுமா ?

ப : இந்த வீடு, ஒவ்வொரு செங்கல்லையும் அடுக்கி வைத்துக் கட்டப்பட்ட வீடு அல்ல. அப்படிக் கட்டுவதற்குப் பல நாட்கள் ஆகும். கட்டடத்திற்கு வேண்டிய கூறுகளைத் தனித்தனியாய் முன்கூட்டியே தயாரித்துக் கொண்டு கட்டப்பட்ட ஒரு முன்னிணைவு வீடு ஆகும் இது. அதாவது இதை 'Prefabricated House' என்று கூறுவார்கள்.

இந்த வீட்டைப் பதினைந்தே நாட்களில் வீட்டு வசதி வாரியம் கட்டி முடித்திருக்கிறது. இதனைக் கட்டுவதற்காகும் செலவு ரூ. 10,500 ஆகும்.

இந்த வீட்டில் ஒரு வரவேற்பு அறை, ஒரு சாப்பாட்டு அறை, ஒரு படுக்கை அறை மற்றும் குளியல் அறை, கழிவிடம் ஆகிய வசதிகள் உள்ளன. இம்மாதிரியான வீடுகள் கலைஞர் கருணாநிதி நகரில் கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு பொதுமக்களின் நன்மைக்காகப் பல்வேறு பயனுள்ள அரிய திட்டங்களைத் தமிழக அரசு செயற்படுத்தி வருகின்றது. மனைவளம் ஓங்கிட, மக்கள் நல்வாழ்வு வாழ்ந்திட வீட்டு வசதி வாரியம் நாளும் நற்பணியாற்றி வருவதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

—பேட்டி : பி. வி. ஜி.

முன்னிணைவு வீடு

தமிழகத்தில் வனவிலங்குகள்

மலர மலர விழிக்கும் மான்கள், பதுங்கிப் பாயும் புலிகள், பெண்மையின் சாயலைப் பிரதிபலிக்கும் மயில்கள், வண்ண வண்ணப் பறவைகள்- இவையெல்லாம் இயற்கை எழிலுக்கு உயிரூட்டும் உயிர்கள். இந்த உயிரினங்கள் நமது அரிய செல்வம், அழகிய செல்வம். இவற்றை அழியவிடாமல் பாதுகாப்பது நமது கடமை மட்டுமல்ல. இயற்கைக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனும் ஆகும்.

அனைத்து இந்தியாவிலுமாக வனங்களில் சுமார் 500 வகையான விலங்குகள் இருக்கின்றன. தமிழ்நாட்டைப்பொறுத்தவரை நம் மாநிலத்தின் பூகோள அமைப்பு, தட்பவெப்ப நிலைமைகள், பல்வேறு தாவரங்களின் சூழல் காரணமாக இங்கு வியன்மிகு விலங்குகளும், பறவையினங்களும் உள்ளன. இவை அந்தந்தச் சுற்றுப் புற நிலைமைகளையொட்டி வாழ்ந்து வருகின்றன. நமது காடுகளில் கம்பீரமான யானைக் கூட்டங்களும், குலை நடுங்க வைக்கும் புலிகளும் இருப்பதோடு பலதரப்பட்ட மான் கூட்டங்களும், கலைமான்களும் உள்ளன. இந்த மான் இனங்களில் கருப்பு மான், நான்கு கொம்புகளுள்ள கலைமான், குலைக்கும் மான், (கேளை ஆடு) எலி மான், புள்ளி மான் முதலியன குறிப்பிடத்தக்கவை. மேலும் வெள்ளைக் காட்டெருமை, மற்றும் சில விலங்குகளும் பறவையினங்களும் நமது காடுகளில் மட்டும்தான் உள்ளன. இந்தியாவில் வேறெங்கும் இவை இல்லை.

அழியும் நிலை

இப்படி இயற்கையன்னை நமக்கு அளித்துள்ள சில அரிய உயிரினங்கள் அடியோடு அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன என்று எண்ணும்போது நமக்கு மன வேதனை அதிகரிக்கிறது. இந்திய சிங்கம் இப்போது பல இடங்களில் அழிந்துபோய், சௌராஷ்டிராவிலுள்ள கிர் காடுகளில் மட்டும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதே மாதிரி அஸ்ஸாம் காண்டா மிருகமும், வங்காளப் புலியினமும் காட்டு ஆடு, மற்றும் சில பிராணிகளும் அழிந்து மடியும் தருவாயில் இருக்கின்றன.

ஒரு காட்டிற்கு விலங்குகள் பொருளாதார, முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. ஏனென்றால் இவற்றின் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது. விஞ்ஞானத் துறையிலும் வன விலங்குகள் பலவகைகளில் பெரிதும் உதவியளிக்கின்றன. வண்ணச் செடிகளும் கொடிகளும், மரங்களும் அடர்ந்த காடுகளுக்கு வன விலங்குகள் ஒரு தனி அழகு தருகின்றன. இயற்கை நிலையை நன்றாக ஊன்று நோக்கினால் ஆண்டவன் படைப்பில் ஒவ்வொரு விலங்கும் ஒரு காரியத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகும். படைப்பில் மனிதனே முதலிடம் வகிக்கிறான். மற்ற உயிரினங்களை விட மனிதனின் உடலமைப்பு மேன்மை வாய்ந்ததாக இருக்கிறது. உயிரினங்களின் அறிவு வியக்கத்தக்கதாகவும், மெச்சும்படியாகவும் இருந்த போதிலும் மனிதனின் அறிவுத்திறன் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கிறது. இதனாலேயே விலங்கினங்களை ஆட்டிப் படைக்கும் நிலையில் மனிதன் உள்ளான். ஆனாலும் இயற்கை நிலைக்கு கேடு செய்யாத வகையில் மனிதன் நடந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். உயிர் வகைகளும் தாவர இனங்களும் சேர்ந்து வாழ்ந்து, மனித வாழ்விற்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டுமென்றே இயற்கை நியதி அமைந்துள்ளது.

மனிதன் தாவர இனங்களையும், பிராணிகளையும் அளவில்லாமல் அழிக்கத் தொடங்கும் போதுதான், வ்ன விலங்குகளால் மனிதனுக்கு ஆபத்துகள் நேரிடுகின்றன.

வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு அரசாங்கம் 1887-ம் ஆண்டிலேயே நடவடிக்கைகள் எடுத்த போதிலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு போதிய அளவு கிடைக்காத காரணத்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. வன விலங்குகளை வேட்டையாடுவது, அதிகரித்துக்கொண்டேயிருந்தது. மோட்டார்கார் மின்சார விளக்குகள், நன்றாக சுடக்கூடிய துப்பாக்கிகள் முதலிய நவீன சாதனங்களைக் கொண்டு வேட்டையாடுவது ஒரு பொழுது போக்காக இருந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்தினால் காடுகள் பெருவாரியாக அழிக்கப்பட்டன. காட்டு நிலங்களை சாகு

படிக்குக் கொண்டு வருவது அதிகரித்தது.

நாடு சுதந்தரம் அடைந்த பிறகு நிலைமை மோசமாகி வருவது தெரியவந்தது. வன விலங்குகளின் பாதுகாப்பு மிக முக்கியமானது என்று ஒப்புக் கொள்ளப்பட்டு 1952-ஆம் ஆண்டு இந்திய வன விலங்குகள் பாதுகாப்பு போர்டு அமைக்கப்பட்டது. 1954 செப்டம்பர் மாதம் ''சென்னை மாநில வன விலங்குகள் பாதுகாப்பு போர்டு'' தோற்றுவிக்கப்பட்டது. வன விலங்குகளைப் பாதுகாக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முதுமலையிலும், வேடந்தாங்கலிலும் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. சில வகைப் பிராணிகளையும், பறவையினங்களையும் சுடக் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. துப்பாக்கி லைசென்சுகள் வழங்கும் விதிமுறைகளும் மிகவும் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன.

காடுகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருவதின் காரணமாக வன விலங்குகள் நசித்து வருகின்றனவென்று மரம் நடு விழா ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. இதல்லாமல் காட்டுப் பகுதிகளை மேலும் சாகுபடிக்குக் கொண்டு வராமல் தடுக்கும் பொருட்டு எல்லா ஆக்கிரமிப்புகளும் தடுக்கப்பட்டு வருகின்றன. வன விலங்குகளைப் பாதுகாக்க ''வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கங்கள்'' ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதனால் விதிகளை அனுசரிக்காமல் விலங்கினங்களைச் சுட்டுத் தள்ளுவது தடுக்கப்பட்டிருக்கிறது. வேட்டையாடுவோர்களைக் கட்டுப்படுத்தவும், வன விலங்குகளைத் திருட்டுத்தனமாக வேட்டையாடப்படுவதைத் தடுக்கவும் அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மீன் வளம், பறவை யினங்களைப் பாதுகாக்கவும் சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

முதுமலையில் வன விலங்குகள் புகலிடம் குறித்து தமிழக மக்கள் பெருமைப்பட இடமிருக்கிறது. இது நீலகிரி மலைத்தொடர்களில் உதகமண்டலம்-மைசூர் சாலையில் இருக்கிறது. இதன் பரப்பு 321 சதுர கிலோ மீட்டர் கார்குடி, தெப்பக்காடு, மசினகுடி ஆகிய இடங்களில் தங்கும் விடுதிகள் இருக்கின்றன. உல்லாசப் பிரயாணிகளின் வரவை அதிகரிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் இங்கு பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யானைக் கூட்டங்கள், காட்டெருமை, கலைமான், மற்ற மான் வகைகள் புல் வெளிகளில் யாதொரு பயமுமின்றி யதேச்சையாக மேய்ந்து திரிவதைப் பார்க்கலாம். வண்ணப் பறவைகள், மலபார் அணில் போன்ற அரிய உயிரினங்கள் பழுப்புக் குரங்கு முதலியவைகளையும் அங்கங்கே காணலாம். அண்மையில் இக்காப்பகம் நல்ல முறையில் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கலில் பறவைகள் சுமார் 200 ஆண்டுகளாக இருந்து வருகிறது. 29.94 எக்டேர் பரப்பில் அமைந்த ஏரியின் மத்தியிலுள்ள கடப்பை மரங்களின் மீது கூடுகள் கட்டவும், முட்டையிட்டுக் குஞ்சுகள் பொறிக்கவும் வசதியாக இருப்பதினால் இங்கு ஆயிரக் கணக்கான நீர்ப் பறவைகள் ஆண்டுதோறும் வந்து அடைகின்றன. இங்கே நாரையினங்கள், கொக்கு, மற்றும் பல ரக நீர்ப் பறவைகளைக் காணலாம். இந்த ஏரியைச் சுற்றி சுமார் 20 மைல்கள் தூரத்திற்கு யாரும் இப்பறவைகளைச் சுடக் கூடாது என்று அரசாங்கம் தடுத்திருக்கிறது.

இரலை என்று சொல்லப்படும் மான் பூண்டோடு அழியாமல் இன்னும் வாழ்ந்து வரும் இரண்டு பகுதிகளில் ஒன்று சென்னையிலுள்ள கிண்டிவனம் மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள கோடிக்காடு பாதுகாக்கப்பட்ட வனம்.



எல்லா உயிரினங்களையும் நாம் போற்ற வேண்டுமென்று எல்லா சமயங்களும் அறிவுறுத்துகின்றன. இயற்கை அன்னையையும் போற்றும் வகையில் நமது பழங்காலப் பண்பாடுகளும் கலைகளும் அமைந்துள்ளன. பின்னர் எழுந்த பொருளாதார பிரச்சினைகளினாலும் பிறநாட்டுத் தொடர்புகளினாலும் நமது காட்டு வளத்தைப் பாதுகாக்கத் தவறிவிட்டோம். வன விலங்குகளினால் நன்மைகள் என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவுக் கண்ணோடு உணர வேண்டியது அவசியம். அவற்றைப் பாதுகாக்க நம்மாலான வழி துறைகளில் முயற்சிக்க வேண்டும். நமது குழந்தைகளுக்கும் இயற்கை அன்னையின் எழிற்காட்சிகளை அனுபவிக்க பழக்கிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் நாம் இன்று எடுத்துக் கொள்ளும் முயற்சிகளின் பலன்களை அவர்கள் பிற்காலத்தில் உணர்ந்து நடப்பார்கள்.

''புத்தரும் காந்தியும் பிறந்த இந்த நாட்டில் பிறந்துவளர்ந்த நான் நமது வனங்களைப் பாதுகாக்கவும் அவைகளில் வசிக்கும் வாயில்லாப் பிராணிகளை வேண்டுமென்றும் அவசியமில்லாமலும் அழிக்கப்படாமல் பாதுகாப்பேனென்றும் மனப் பூர்வமான உறுதிமொழி அளிக்கிறேன்'' என்று உறுதிமொழியைப் புதுப்பித்து அதனைக் கடைப் பிடிப்பது முக்கியமாகும்.

— சி.க.ரா



வனமும் வயலும்

மு. தினகரன்.

வனவளமும் வயல் வளமும் நெருங்கிய தொடர்புடையவை. வனங்களின்றேல் வயல்கள் செழிப்புடனிருக்க முடியாது. மரங்கள் தமிழரது நாகரிகத்துடன் ஒன்றியவை. ஒவ்வொரு கோயிலிலும் 'தலவிருட்சம்' என்று ஒரு மரத்தை வளர்த்து வழிபடுகிறோம். தில்லை மரங்கள் நிறைந்திருந்தமையால் சிதம்பரத்திற்கு தில்லை எனப் பெயர் வந்தது. தமிழர் போற்றி வணங்கும் முருகக் கடவுளுக்குகந்தது கடம்ப மரமாகும். வள்ளலார் இராமலிங்க அடிகள்கூட இறைவனை கோடையிலே இளைப்பாற நிழல்தரும் மரத்திற்கு ஒப்பிட்டுப் பாடுகிறார். போதி மரத்தடியில் புத்தர் ஞானோதயம் பெற்றதை நாம் அறிவோம். தமிழகத்தில் திருமணத்தின்போது அரசாணிக்கால் நடுவது மரபு. இதன் நோக்கம், மணமக்களின் இல்வாழ்வு மரம்போல் தழைத்து ஓங்க வேண்டுமென்பதே. தோப்புகள் இல்லாத கிராமங்கள் தமிழகத்தில் அரிது. இவ்வாறுகப் பல வகையிலும் மரங்கள் நம் வாழ்வோடு, மதத்தோடு, கலாச்சாரத்தோடு இணைந்துவிட்டன.

பழங்காலத்தில் மக்கட்தொகை குறைவு; காடுகளும் நிறைந்திருந்தன. அதனால் பருவமழையும் நன்கு பெய்தது மக்கள் பெருக்கத்தின் விளைவாக. காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டு வயல்களாக மாற்றப்பட்டன. அளவுக்கு மீறி காடுகளை அழித்ததால் பருவமழை தவற ஆரம்பித்தது. மாதம் மும்மாறி பொழிவது கனவாகி வறட்சி பெருகிவிட்டது. மெசபொட்டேமியா, இராக், சஹாரா, ராஜஸ்தான் போன்ற பாலைவனங்கள் காடுகளை அழித்ததால் தோன்றியவை என வரலாறு கூறுகிறது. தொழில் துறையிலும், விவசாயத்திலும் வெகுவாக முன்னேறிய மேலை நாடுகள் கூட காடுகளைப் புறக்கணிக்காமல், பெருமளவில் உண்டாக்கிப் போற்றிப் பாதுகாக்கின்றன. ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு, நிலப்பரப்பின் மூன்றிலொரு பாகத்திலாவது காடுகள் இருக்க வேண்டுமென்பது விஞ்ஞானிகளின் கருத்து. ஆனால் இந்தியாவில் ஐந்திலொரு பாகத்தில் கூட காடுகள் இல்லை. அதிலும் தமிழகத்தில் ஆறிலொரு பாகத்தில் தான் காடுகள் உள்ளன. இது கவலைக்குரிய நிலையாகும்.

மக்களின் நல்வாழ்விற்குக் காடுகள் அளிக்கும் நன்மைகள் பல உண்டு. பருவமழை தவறாது பெய்ய காடுகள் இன்றியமையாதவை. அவை தட்பவெப்ப நிலையை சமப்படுத்துகின்றன. மண்அரிப்பைத் தடுப்பதில் காடுகளுக்குப் பெரும்பங்குண்டு. மழைத்துளிகளின் வேகத்தை மரங்களின் இலைகள் தடுக்கின்றன. வேர்கள் மண்ணைக் கெட்டிப்படுத்துகின்றன. மரங்களின் அடியில் விழுந்துகிடக்கும் முக்கிய இலைகள் பஞ்சுபோல நீரை இழுத்து மழைத்துளிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி மண் அரிப்பைத் தடுக்கின்றன.

வெள்ளங்களைக் கட்டுப்படுத்துவதில் காடுகளுக்கு நிகர் காடுகளே. மலைகள் மொட்டையாக இருந்தால், மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து மண்ணையும், பாறைகளையும் உருட்டி அடித்துச் செல்லும், நிலச் சரிவும் சில சமயங்களில் ஏற்படும். காடுகள் நிறைந்த மலைகளில் நீரோட்டம் நிதானமாக இருக்கும். நாட்டின் பல பாகங்களில், குறிப்பாக வட இந்தியாவில், வெள்ளத்தால் சேதம் ஏற்படக் காரணம் காடுகளை நாம் மனம்போனபடி அழித்ததேயாகும்.

மண் அரிப்பு நீரினால் மட்டும் தான் ஏற்பட வேண்டுமென்பதில்லை. காற்றினாலும் ஏற்படலாம். கடற்கரைக்கு அருகில் வாழும் மக்கள் இதனை நன்கறிவார்கள். காற்றினால் கடத்தப்படும் மணல் விளைநிலங்களில் படிந்து விளைச்சலைக் குறைத்து விடும். சில இடங்களில் வயல்களின் மேற்பரப்பில் உள்ள சத்துள்ள மண்ணை காற்று அடித்துச் சென்றுவிடும். இதனால் வயல் வளம் குன்றிவிடுகிறது. கோடையில் அனல் காற்று வீசுவதால் நீர்நிலைகள் சீக்கிரம் வறண்டு விடுகின்றன. இவற்றையெல்லாம் தடுக்க மரங்கள் வெகுவாக உதவுகின்றன. ஆங்காங்கே காற்றின் திசைக்குக் குறுக்காக பல வரிசைகளில் நெருக்கமாக மரங்களை நடுவதால் காற்றின் வேகத்தையும், மண்அரிப்பையும் குறைக்கலாம்.

நமக்கு வேண்டிய தண்ணீர் மழை மூலமாகக் கிடைத்தாலும், அது ஒரு குறிப்பிட்ட பருவத்தில்தான் கிடைக்கிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் நமக்குக் கிடைக்க காடுகள் வெகுவாக உதவுகின்றன. அவை மழை நீரின் ஒரு பகுதியைச் சேமித்து வைத்து வேண்டியபோது கொடுக்கின்றன. ஊற்றுகளும், ஓடைகளும், ஆறுகளும் காடுகளில் உற்பத்தியாவதை நாம் மறக்கக்கூடாது.

பல கிராமங்களில் குளங்களும் ஏரிகளும் வேகமாகத் தூர்ந்துவருகின்றன. பலஅணைக் கட்டுகளிலும் வண்டல்மண் வெகுவாகப் படிவதால், அவற்றின் நீர்ப்பிடிப்பு குறைந்துவிட்டது. இந்த அவலநிலை காடுகளை ஈவிரக்கமின்றி வெட்டியதால் ஏற்பட்டதாகும். இதைத் தவிர்க்க இப்போது அணைக்கட்டுகளின் மேற்பகுதிகளில், ' மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், வெகுவாக மரங்களை நட்டு வருகிறார்கள்.

நாகரிகம் பெருகிவரும் இந்நாளில், நகரவாசிகள் மண்ணெண்ணெய், காஸ், மின்சாரம் ஆகியவற்றை எரிபொருட்களாக உபயோகிக்கிறார்கள். ஆனால் கிராம மக்கள் இன்னும் விறகைத்தான் நம்பியிருக்கிறார்கள். எரிப்பதற்கு வேண்டிய

விறகும், கரியும், வீடு கட்டத் தேவையான மரமும் மூங்கிலும் காடுகளில்தான் விளைகின்றன. செய்தித்தாளைப் படிப்பவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகி வருகிறது. காகிதம் செய்யத் தேவையான மரங்களையும் மூங்கிலையும் தருவது காடுகளே. ரேயான் எனப் படும் செயற்கைப்பட்டு, மூங்கில், கற்பூரம், சீகைபோன்ற மரங்களிலிருந்தே தயாரிக்கப் படுகிறது.



செயற்கை உரத்தட்டுப் பாடு நிலவி வரும் இந்நாளில் தழையுரத்தின் பெருமையை வலியுறுத்த வேண்டியதில்லை. காடுகள் வயலுக்கு வேண்டிய தழையுரத்தைக் கணிசமான அளவில் தருகின்றன. கால்நடைகள் மேய காடுகள் உதவுகின்றன. இவ்வாறாகக் காடுகள் விவசாயிகளின் அன்றாட வாழ்வோடு ஒன்றி நிற்கின்றன.

வனவளத்தைப் பெருக்க இரண்டு முறைகளைப் பின்பற்றலாம். முதலாவது முறை இப்போதுள்ள இயற்கைக் காடுகளை மேலும் அழிக்காமல் போற்றிப் பாதுகாப்பது. இரண்டாவது முறை மரங்களைப் பெருமளவில் பயிரிட்டு செயற்கைக் காடுகளை உண்டாக்குவது. நம்நாடு இப்போதுள்ள நிலையில், இவ்விரண்டு முறைகளையுமே நாம் பின்பற்ற வேண்டும்.

ஒதுக்குக் காடுகளை (Reserved Forests) வனத்துறை விஞ்ஞான முறையில் பராமரித்து வருகிறது. வனத்துறையினருக்கு மக்களின் ஒத்துழைப்பு இதற்கு மிக அவசியம். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்ட இடங்களில், விஞ்ஞான முறைப்படி மரங்களை வனத்துறை வெட்டி விற்று வருகிறது. வெட்டிய மரங்களுக்குப் பதிலாக மீண்டும் மரங்களைப் பயிரிடுகிறது. ஆனால் காடுகளின் அருகில் வாழும் மக்களில் சிலர் தங்கள் மனம் போன போக்கில் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டி காட்டை நாசப்படுத்தி விடுகிறார்கள். இது தவறான செயல் மட்டுமின்றி குற்றமுமாகும். வெள்ளாடுகள் காட்டின் முதல் விரோதி. வெள்ளாடுகள் மேய்ந்தால் காடு விரைவில் அழிந்து விடும். வெள்ளாடுகளைக் காட்டில் மேய்ப்பது குற்றம். மக்கள் கட்டுப்பாடாக வெள்ளாடுகளைக் காட்டில் மேய்க்காமலிருந்தால் நம் வனவளத்தைப் பாதுகாக்க முடியும். மேய்ச்சலுக்குத் துளிர்ப் புல் வேண்டும் என்பதற்காக சிலர் கோடையில் புல்லுக்குத் தீ வைத்து விடுகிறார்கள். இது பல சமயங்களில் காட்டையே எரித்து சாம்பலாக்கி விடுகிறது. வனக் குற்றங்களைத் தடுக்க வனத்துறை அதிகாரிகள் உள்ளனர். ஆயினும் பரந்து கிடக்கும் காடுகளை எந்நேரமும் சுற்ற முடியாது. மக்கள் ஒத்துழைத்தால் அவர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்ய முடியும்.

இனிச் செயற்கை முறைகளின் மூலம் வனவளத்தைப் பெருக்குவது பற்றி ஆராய்வோம். மரங்களை நிறைய வளர்த்து செயற்கைக் காடுகளை நிறுவுவதின் மூலம் விவசாயத்தை மேம்படுத்த முடியும் என்பதை இஸ்ரேலும், கலிபோர்னியாவும் நிரூபித்துள்ளன. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் ஒரு பாலைவனமாகக் காட்சியளித்தது. விவசாயம் சரியாகச் செய்ய முடியாது. ஆனால் அந்நாட்டு மக்கள் அயராது உழைத்து நிறைய மரங்களை நட்டார்கள். செயற்கையாகக் காடுகளை உற்பத்தி செய்தார்கள். இதனால் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, மண்ணின் வளம் உயர்ந்தது, விவசாயம் இப்போது அங்கு செழித்துள்ளது.

நம் நாட்டிலும் மக்கள் மனம் வைத்தால் வனவளத்தைப் பெருக்கலாம். வளம் குறைந்த ஒதுக்குக் காடுகளை வளமிக்கக் காடுகளாக வனத்துறை மாற்றி வருகிறது. மக்கள் தம் பங்கிற்குக் கிராமங்களில் நிறைய மரங்களை நடலாம். வடஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் செயற்கைக் காடுகளை உண்டாக்குவதற்கென, தனியாக வனத்துறை அதிகாரிகள் உள்ளனர். வன விரிவாக்கக் கோட்டங்களைச் (Extention Forestry Divisions) சார்ந்த இவர்கள் தனியார் நிலங்களில் மரங்களை வளர்ப்பதற்கு உதவுகின்றனர். மர நாற்றுகளை வளர்த்து, குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கொடுத்து வருகின்றனர். வரப்புகளில், வாய்க்கால் ஓரங்களில், களத்துமேடுகளில், கிணற்றுப் பக்கத்தில் மரங்களை நடுவதற்கு விவசாயிகளுக்கு உதவி வருகிறார்கள்.

பயிர்களைப் பாதிக்காத முறையில் சுலபமாக மரங்களை வளர்க்கலாம். தண்ணீரும் அதிகம் தேவையில்லை. கற்பூரம், பொன்னுவாரை, இலவம், தேக்கு, மூங்கில், நெல்லி, புங்கன், வாதநாராயணன் போன்ற மரங்களை வயல்களிலும் வீட்டுக் கொல்லைகளிலும் வளர்க்கலாம். விவசாயிகளுக்கு வேண்டிய தழையுரம் விறகு முதலியன இவற்றின் மூலம் எளிதாகக் கிடைக்கும். ஒரு கன்றின் விலை 15 காசு தான்.

குஜராத் மாநிலத்தில் கற்பூர மரங்களையும் பருத்தியையும் கலந்து பயிரிடுகிறார்கள். வழக்கமாகப் பருத்தியை மட்டுமே பயிரிட்டு வந்த நிலங்களில், கற்பூர மரத்தின் நாற்றுகளை நட்டு, அவற்றிற்கிடையே பருத்தியை விதைக்கிறார்கள். கற்பூர நாற்றுகள் வளர்ந்து 8-10 ஆண்டுகளில் மரமாகின்றன. பின்பு அவற்றை வெட்டி விடுகிறார்கள். இதனால் அவர்களது வருமானம் பெருகுகிறது. ஹரியானா மாநிலத்தில் கற்பூர மரங்களை வயல்களில் சுமார் பத்தடி இடைவெளியில் நட்டு அவற்றிற்கிடையே காய்கறிகளைப் பயிராக்குகிறார்கள். கற்பூர மரங்கள், குளிர் காலத்தில் காய்கறிச் செடிகளைக் கடும்பனியின் கொடுமையிலிருந்து பாதுகாக்கின்றன. வரப்புகளில் மரங்களை வளர்க்காத விவசாயிகள் ஹரியானாவில் மிகக் குறைவு. தங்கள் மாநிலத்தில் காடுகள் மிகக்

குறைவு என்பதை உணர்ந்த அவர்கள் எங்கெங்கு மரங்களை வளர்க்க முடியுமோ அங்கெல்லாம் மரங்களை நட்டு, போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள்.

வனவிரிவாக்கக் கோட்டத்தினர் ஏரிகளில் மரத்தோட்டங்களை உண்டாக்குகிறார்கள். இவை ''கிராம நலக்காடுகள்'' என அழைக்கப்படும். பஞ்சாயத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதன் ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஏரியிலோ அல்லது புறம்போக்கு நிலத்லோ மரத்தோட்டம் உண்டாக்க வனத்துறையினர்க்கு அனுமதி கொடுத்தால் போதும். நிலம் பஞ்சாயத்து வசம்தான் இருக்கும். வனத்துறை தனது செலவில் மரங்களை வளர்த்து சுமார் பத்து ஆண்டுகள் அவற்றைப் பாதுகாக்கும். பின்பு, அம்மரங்களை விற்பதன் மூலம் கிடைக்கும் மொத்த வருமானத்தில் பாதியை பஞ்சாயத்திற்குக் கொடுத்து விடும். தோட்டம் ஏற்படுத்த ஆகும் செலவை வனத்துறையே ஏற்றுக் கொள்கிறது. ஒரு காசு கூட செலவு செய்யாமல் பஞ்சாயத்திற்கு வருமானம் கிடைக்கிறது. ஊராருக்கு வேலை வாய்ப்பு, விறகு, மரம் முதலியன கிடைக்கின்றன. வன வளமும் பெருக்கமடைகிறது. பல பஞ்சாயத்துகள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி தங்கள் வருவாயைப் பெருக்கியுள்ளன.

கால்வாய், ஆற்று ஓரங்களிலும் வனவிரிவுக் கோட்டத்தினர் மரங்களை நட்டு கரைகளைப் பலப்படுத்தி வருகிறார்கள். சாலைகளின் இருமருங்கிலும் நிழல்தரும் மரங்களை நட்டு பயணிகளுக்கு வசதி செய்து தருகிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள ரேயான் காகித ஆலைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களான மூங்கில், கற்பூரம், சீகை, குடைவேலன் போன்ற மரங்களை காடுகளிலிருந்து கொடுக்க வேண்டியிருப்பதால், பொதுமக்களுக்கு இனி இவை முன்பு கிடைத்த அளவில் கிடைக்க வாய்ப்பில்லை. மேலும் விரைவில் நம் நாடு கடுமையான காகிதப் பஞ்சத்தைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதைத் தவிர்ப்பதற்கு, நாம் மூலப் பொருட்களான மரங்களை அதிக அளவில் பயிரிட வேண்டும். அரசாங்கத்தின் வசமுள்ள ஒதுக்குக் காடுகள் இதற்குப் போதவே போதாது. தனியாரும் நிறைய மரங்களை நட்டால்தான் காகிதப் பஞ்சத்தை ஓரளவு சமாளிக்க முடியும். இல்லாவிடில் நம் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும்.

பெட்ரோல், மண்ணெண்ணெய் காஸ் முதலியவற்றை நாம் சிக்கனமாக உபயோகிக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இவற்றின் விலையும் வெகுவாக உயர்ந்துவிட்டது. இதனால் பெரும்பான்மையான மக்கள் இனி விறகை நம்ப வேண்டிய நிலை வந்து விடும். ஆகவே நாம் மரங்களை ஏராளமாக வளர்க்க வேண்டும்.

தொழிற்சாலைகளும், வாகனங்களும் நம் நாட்டில் பெருகி விட்டன. இவை வெளிவிடும் புகை காற்று மண்டலத்தை அசுத்தப்படுத்துகிறது. நிறைய மரங்களை நட்டால் அவை காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளிவிடும். இதனால் காற்று ஓரளவு சுத்தமடைகிறது. ஆகவே தொழிற்சாலைகளைச் சுற்றிலும், நகர்ப்புறங்களிலும் நிறைய மரங்களை வளர்க்க வேண்டும்.

தமிழ் நாட்டில் சுமார் 90 இலட்சம் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு இரண்டு மரங்கள் வீதம் நட்டுப் பாதுகாத்தால், இன்னும் ஐந்து ஆண்டுகளில் சுமார் ஒன்பது கோடி மரங்கள் தமிழ் நாட்டில் இருக்கும். பல ஆக்கப் பணிகளில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு ஏன் மரம் வளர்ப்பதிலும் முதலிடம் வகிக்கக் கூடாது? மரம் வளர்க்க உதவி தேவைப்பட்டால், உங்கள் மாவட்ட வன அதிகாரிக்கோ அல்லது வனப்பண்ணை சரக அலுவலருக்கோ எழுதவும். வட ஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

வட ஆர்க்காடு: கோட்ட வன அலுவலர், வனவிரிவாக்கக் கோட்டம், கிருஷ்ணா நகர், வேலூர்-1.

சேலம்—கோட்ட வன அலுவலர், வனவிரிவாக்கக்கோட்டம், சுவர்ணபுரி, சேலம்-4.

வனவிரிவாக்கக் கோட்டம் காஜாமலை, திருச்சி-20.

நாடு நலம்பெற, விவசாயம் செழித்தோங்க, காற்று சுத்தமாகயிருக்க, தொழில் வளம் பெருக, பருவமழை தவறாது பொழிய நாம் எல்லாரும் ஒரு மனதாக உழைத்து மரங்களை ஏராளமாக வளர்க்க வேண்டும். வனவளம் குன்றின் வயல்வளம் குன்றும். காடு வரை கழனி செழிக்கும்.



மூண்டிருந்த காரிருளை முடிவு கட்ட முனையிலா ஞாயிறு கீழ் வானத்தில் தன் பொன்னிறக் கதிர்வீசிப் புறப்பட்டான். பிறந்த வீட்டிற்குச் செல்லும் பிரிய நினைவுகளோடு பரபரப்பாகத் தன் பணிகளை முடித்துக் கொண்டிருந்த வள்ளிநாயகி, கூடத்தில் அமர்ந்துகொண்டு அன்றைய நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்த மணவாளருக்குக் காப்பியைக் கொடுத்துவிட்டு அடுத்த அறையை எட்டிப்பார்த்து, தன் மகள் அன்புமணியைத் துரிதப்படுத்தும் முறையில் 'அன்பு, நாழிகை ஆகலையா' என்று குரல் கொடுத்தாள். காலிக் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தவள் தன் மகளின் அழகுக் கோலத்தைச் சுவைக்காமல் இருக்க முடியவில்லை.

முத்துப்பல் காட்டி முறுவலித்துக் கொண்டு 'அம்மா நான் தயார்' என்ருள் அன்புமணி.

''தாயைப்போல பிள்ளை என்பார்களே அது அன்புமணி தான் போங்கள்''-என்று ஊரார் கூறுவது நாயகிக்கு நினைவு வந்தது. 'நான் இளமையாக இருந்தபோது இப்படித்தான் இருந்தேன்'-என்று மனத்திற்குள் எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டு

''அன்பு, இப்படி வா!'' என்று அழைத்து அவள் மாம்பழக் கன்னத்தில் மையால் ஒரு புள்ளியிட்டாள்.

எத்தனை முறை சொல்வது, வெளியே புறப்பட்டால் இதை வைத்துக் கொள்ளென்று 'ஒருவர் கண்போல் இருக்குமா' என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

அன்பு மணிக்கு இவற்றிலெல்லாம் நம்பிக்கை இல்லாவிட்டாலும் தாயின் மனம் நிறைவுபெற இதையவள் எண்ணத்திற்கு விட்டு விடுவது வழக்கம்.

'என்னம்மா! புடவை கட்டுவது என் வேலை, புள்ளிவைப்பது உங்கள் வேலையா?' — என்று தன் செங்கனி வாய் திறந்து சிந்தி வைத்தாள் செந்தமிழை.

'புள்ளி வைப்பது அம்மா வேலை' பூச்சூடுவது யார் வேலையோ?'' என்று புன்சிரிப்புடன் உள்ளே நுழைந்தாள் அன்புவின் தோழி பங்கஜம். பரவாயில்லை. இந்த டாலரையாவது உன் சங்கிலியில் சூடிக் கொள் என்று தன் கழுத்து டாலரை அன்பு மணிக்கு அணிவித்துவிட்டு, செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டிஞள் பங்கஜம். அம்மா அங்கிருந்து அகன்று விட்டாள் என்றதும் வாடிக்கையான குறும்பை வார்த்தைகளாக்கி வேடிக்கையாக

''பூமுடிப்பதும் பொட்டும் வைப்பதும் யாருக்காக புரிந்து கொண்டால் போதுமிதை...என்று பாடிய பங்கஜத்தின் வாயைத் தன் மலர்க் கையால் மூடி,

'என்னடியிது ! அப்பா பக்கத்தில் அவர் அமர்ந்திருக்கிருர் என்பதைக்கூட மறந்துவிட்டாயா?'. என்று கடிந்து கொள்பவளைப்போல் நடித்தாள் அன்பு. தன் அத்தான் அறிவொளியின் நினைவு மேலிட்டது.

அறிவொளி-ஆம், இவன் தான் அன்பு மணியின் அத்தை மகன். கல்லூரியொன்றில் தமிழ் உதவிப் பேராசிரியாகப் பணியாற்றும் இவன் கோடை விடுமுறையில் இங்கு வந்துள்ளான்-இன்று அன்பு, அவளுடைய அம்மா, அறிவொளி ஆக மூவரும் அறிவொளியின் ஊர் செல்லவிருக்கின்றனர்.

இளம் பருவத்தில் ஒன்ருக இணைந்து விளையாடியபோதில்லாத வெட்கமும், அச்சமும் பருவமுத்திரை பதிக்கப்பெற்றபின் இனந்தெரியாமல் இழையோடி வருவதை எண்ணிக் கொண்டாள் அன்பு. தன் அத்தானுக்குக்காலைச் சிற்றுண்டி பரிமாறியபோது ஓரக்கண்ணுல் ஒரு நூறு கதை வடித்ததையும், காப்பிக்குப் பதிலாகத் தன் தந்தைக்குப் போட்டு வைத்த கசாயத்தை ஊற்றிக் கொடுத்ததையும், தன் குழம்பிய மனநிலையைக் கோபித்துக் கொள்ளாமல் - புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டு நன்றி! என்று கூறிஞன்.

எத்தனையோ விசயங்களை அவன் முன்னர் பேசியிருக்கின்றாள். அவன் கருத்தை எதிர்த்து அதற்குத் திருத்தப் பிரேரணை கூடக் கொண்டு வந்து இருக்கின்றாள்-ஆனால் இன்றோ பேச நாவெழாதவளாக சர்க்கரையை எடுத்து வந்து 'கொஞ்சம் கலந்து கொள்ளுங்கள்''— என்று கூறிவிட்டு ஒதுங்கி நின்றாள்.

'சர்க்கரையின் இனிப்பை விட நீ காட்டும் அக்கறை அவருக்கு அதிகம் இனிக்குமடி அன்பு'-என்று கேலி செய்தாள் பங்கஜம். நாணத்தால் முகம் சிவக்க, நறுக்கென்று பங்கஜத்தைக் கிள்ளி விட்டாள் அன்பு.

பங்கஜம் அந்த ஊரில்-அதாவது செம்பட்டுக்கிராமத்தில் பணிபுரிந்து வரும் மருத்துவத்தாதி-ஆனால் தாழ்ந்த ஜாதி. அந்த ஊருக்கு வந்தது முதல் அன்பும் அவளும் உணர்ச்சியொத்த தோழிகளாக உலவி வந்தனர்.

நிலையப் பொறுப்பாளராகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்.அதிகாரிகளைக் காட்டிலும் மனச்சாட்சிக்கே முதலிடம் கொடுப்பவர். ஊர் வம்புகளுக்குச் செல்லாதவர் எனினும் ஊதாரிக் கொள்கைகளை ஒத்துக் கொள்ளாத மனம் படைத்தவர். பங்கஜம் தன் வீட்டில் பழகுவதைப் பொறுத்துக் கொள்ளாத மனம் படைத்தோர் குருட்டுப் பேச்சுக்குக் கோல் கொடுக்காதவர். அன்றையத் தபால்களைப் பார்த்துக் கொடுத்துவிட்டு,சாவிக் கொத்தைக் கையில் எடுத்துப் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தடிப்பயல் சாம்பசிவம் தன் முறுக்கு மீசையைத் தடவிக் கொண்டே,

''என்ன! வாத்தியாரே. தபால் ஏதாவதும் வந்ததா!'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தான். பழைய காலப் பாகவதர் தலைமுடியும், பார்த்தவர் ஒதுங்கிச் செல்லும் முறுக்கு மீசையும் 'கைலி'

'எதையும் வைக்கிற இடத்தில் வைக்க வேண்டும்-அதற்கு சொன்னேன். இதோ பாருங்க! ஆஸ்பத்திரியோடு நின்று கொள்ளட்டும்-அதை யார் கூறுவா? என்னதான் இருந்தாலும் ஒழுங்கு கெட்ட ஊரென்று இந்த ஊருக்கு ஏற்படக் கூடாதல்லவா?-என்றான். என்னவோ ஊரின் முன்னேற்றத்தை உயிராகக் கருதுபவன் போல மெல்லத் தன் மீசையை முறுக்கிக் கொண்டு நின்றான். செம்பட்டுக் கிராமத்தின் கொம்பு சீவப்பட்ட முரட்டு மாடு. மூக்கணாங்கயிறு போடுவதற்குப் பெரியோர்கள் முன் வராததால் காவலில்லாக் கன்னியர்களைக் — கரும்பைச் சுவைத்து வரும் காமுகன் சாம்பசிவன்.

ஆமா, அந்தப் பெண் நோயாளிகளுக்கு உதவியும் நொடிந்து போன குடும்பத்திற்குக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் விதத்தையும் தாய்

தங்கமே தங்கம்

'சுவிதா'

வார்த்தெடுத்த வார்ச்சிலையாக அழகு பெற்றிருந்தாலும் சம்பாதிக்காத பெண்களைச் சட்டை செய்யாத மனநிலை மெல்லத்தலையெடுக்கும் இந்தக் காலத்தில் பள்ளியிறுதி வகுப்பே போதும் என்று கூறி தங்கள் உறவு முறைப்பெண்ணை உள்ளன்போடு கட்டிக்கொள்ள முன் வந்திருக்கும் அறிவொளியவர்களின் குடும்பத்தினரின் குண நலன்களைப் பாராட்டி தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்போல தெளிவுபடுத்திக் கொண்டு இருந்தாள் பங்கஜம்.

தன் மனைவியும், மகளும் ஊர் சென்ற சில நாட்களாகப் பொழுது போவது மிகவும் சிரமமாக இருந்தது. தன்மகள் அன்புவின் அழகு முகத்தையும் அவள் தோழி பங்கஜத்தின் பால்போன்ற குணத்தையும் எண்ணிக் கொண்டே பொடி நடையாக அஞ்சல் நிலையத்திற்குச் சென்றார் மணவாளன். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றும் அஞ்சல்

என்ற பெயரில் சேலையைக் கட்டிக் கொண்டு காலித்தனத்தின் மொத்த வியாபாரியாக அந்த ஊரில் உலவி வருபவன்.

'தபால் ஒன்றுமில்லை, இன்றைக்கு நம்ம ஆபீசுக்கு மொத்தமே ஏழு தபால்கள் தான் இருந்தன''- என்று கூறிக் கொண்டே படியிலிறங்கினார்.

''ஆமாங்க, அந்த ஆஸ்பத்திரி அடிக்கடி உங்கள் வீட்டில் தலைகாட்டுகிறதே என்று கூறியவன் கண்களில் கொஞ்சம் குறும்பு தென்பட்டது.

ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருக்குக் குறிப்பறியும் திறன் குறைந்தா இருக்கும்? எனவே, 'வாலைக் காட்டுகிறவர்கள் வாழும் இடத்திலே தலையைக் காட்டுவது தப்பென்று தெரியாத உள்ளம் இருப்பதால்!' என்று சற்றுக் குத்தலாகவே பதில் சொன்னார் மணவாளன்.

மார்கள் தங்கள் உடலை ஓம்பினால்தான் திடகாத்திரமான குழந்தைகளை நாட்டிற்குத் தந்துதவ முடியும் என்கின்ற நல்ல சேவையைத் தேவையான இடத்தில் விதைத்துக்கொண்டு இருக்கின்றாள். கடமை தவறாத பங்கஜத்திற்கு உன்போன்றவர்கள் உபதேசம் தேவையில்லை— என்று சற்று சூடாகவே பதில் தந்தார் மணவாளர்.

'அப்படியா! சரி, இருக்கட்டும்' என்று கூறியவன் ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு வேகமாக அந்த இடத்தை விட்டுச் சென்றான் சூடுபட்ட பூனையைப் போல.

அத்தை வீட்டு விருந்து பலமாக இருக்கிறது போலும்— நான் ஒருவன் இங்கு இருக்கிறேன் என்பதை நினைக்கிறார்களா?-வெளியூர் சென்றால் வீடு திரும்புவதற்கு இந்தப் பெண்களுக்கு மனதே வருவதில்லை— என்ன பெண்களப்பா?'' —

என்று மனத்தில் எண்ணியதை வாய்விட்டே கூறிக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.

'அதென்னங்க அப்படிச் சொல்லீட்டீங்க' போன இடத்தில் கொஞ்சம் ஏறத்தாழ இருப்பது சகஜந்தானே! என்று கூறிக்கொண்டு உள்ளே வந்த பங்கஜம், மதிய உணவை மணவாளருக்கு எடுத்து வைப்பதில் ஈடுபட்டாள்.

'அதற்கில்லையம்மா! காலொடிந்த பந்தயக்குதிரை போல சம்பாதனை இல்லாத நேரத்தில்-வீண்செலவும், சிரமமும் எதற்காக என்றேன்''— என்று கூறியபடியே உணவை உண்டு கொண்டு இருந்தார்.

காலை கண்விழித்துத் தன் கடமைக்குச் செல்லும் முன்பு மணவாளரின் வீட்டிற்கு வந்து அவருக்கு வேண்டியவற்றைக் கவனித்து முடித்தே தன் வேலைக்குச் செல்லும் பங்கஜத்தின் அன்பான மனநிலையை எண்ணி உருகிற்று அவர் மனம்.

தன் வீட்டிலேயே அன்புமணியும், அவள் தாயும் வரும்வரை உணவருந்தும்படி மணவாளரிடம் கேட்டுக் கொண்டும் அவர் ஏதேதோ சாக்குகள் கூறித் தட்டிக் கழிக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட பங்கஜம் தன் வீட்டு வேலைகளைத் தாயைக் கவனித்துக் கொள்ளத், தான் மட்டும் வந்து இவருடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு இருந்தாள். தனக்கு ஒரு பிள்ளை இல்லாத இந்த நேரத்தில், தன் 'மகள் அன்புமொழிக்காவது ஒரு சகோதரி இல்லையென்ற குறையைப் போக்கி விட்டாள் என்று பங்கஜத்தின் மீது மணவாருக்கு மதிப்பு உயர்ந்தது.

எங்கெங்கு தேடினும் சாதியில்லை. மக்கள் இருள் மனத்துள் இருந்து நாறும் இருட்டுக் கொள்கை, அது இருபதாம் நூற்றாண்டிலும் இந்தக் குருடுகளை இந்த நாடு தாங்கிக் கொண்டு இருக்கிறதே என்று எண்ணி மனம் வெதும்பினார். ஆரம்பக்காலத்தில் மணவாளருக்கு ஆசிரியப் பணியின்போது அறிவுப்பணிக்கிடையே சமுதாயப் புரட்சிக்கான கருத்து விதைகளை இளம் உள்ளங்களில் ஊன்றினார்.'

சாதிகள் இல்லையடி பாப்பா-குலம் தாழ்த்தி உயர்த்திச் சொலல் பாவம்'-என்ற பாரதியின் பாடலை சின்னஞ்சிறு குழந்தைகட்குப் புகட்டும்போது, பாரதியின் உள்ளுணர்வின் பிம்பமாகவே மணவாளர் விளங்கினார்.

முன்னிரவு நேரம். ஊர் நடுவே இருந்த பள்ளிக்கூடத்தின் திறந்தவெளியில் மின் விளக்கு ஒளிதன்னில் விவசாயிகள் குழுமியிருக்க, அவர்களின் மத்தியில் அமர்ந்து கொண்டு கேட்கின்ற கேள்விகட்கெல்லாம் தகுந்த விடையளித்துக் கொண்டு இருந்தான் - இருபத்தைந்து வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த சமரசம். செம்பட்டுக் கிராமத்தின் மிகப் பெரிய பண்ணையாரின் ஒரே செல்ல மகன். விவசாயத்தில் B. Sc., பட்டதாரி. சிறந்த பொது நலமும், முற்போக்கு எண்ணமும் உடையவன். ஏழை விவசாயிகட்குப் பணிபுரிவதே தன் படிப்பின் குறிக்கோள் என்று கூறிக்கொண்டு, புதிய விவசாய முறைகளை அவர்களிடம் அறிமுகப்படுத்தி புதிய விவசாயசமுதாயத்தைப் படைக்க முனைந்து கொண்டு வருபவன். ஆசிரியர் மணவாளரின் மாணவன். எனவே சமரசத்தின் மனத்துணிவையும், சேவையையும், சற்று தூரத்தில் நின்றுகவனித்துக்கொண்டு இருந்தார். அன்று தன் மனைவி நாயகியும் மகள் அன்புமணியும் கடைசி வண்டியில் பட்டணத்திலிருந்து வருவதாகக் கடிதம் வந்திருந்ததால், அழைத்துச் செல்வதற்கென பஸ் நிற்குமிடத்திற்கு வந்தவர் இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். விவசாயிகளின் சரமாரியான கேள்விகட்குத் தக்க பதிலை அமைதியாகப் புன்முறுவலுடன் கூறிக் கொண்டிருந்தான்.

"அயல் நாட்டு இலக்கியங்கள் கொண்ட சோவியத் அரசு நூல் நிலையம்" என்ற நூல் நிலையத்தில் 132 மொழிகளில் 40 இலட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் உள்ளன. இதில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அலமாரிகளின் மொத்த நீளம் 90 கிலோ மீட்டராகும். உலகின் பல நாடுகளில் இருந்து வெளியாகும் 5,500 செய்தித் தாள்களும், இதழ்களும் இங்கு வருகின்றன.

''நிலக்கடலைச் செடிகளில் தோன்றும் சுருள்பூச்சிகளையும், அசுவினிப் பூச்சிகளையும்போக்க என்ன செய்யலாம் என்பதைச் சொல்லுங்க தம்பி!''—செம்பட்டுக் கிராமத்தின் தீவிர விவசாயி சுப்புக்குட்டியின் கேள்வி இது.

'என்டிரின் இருநூறு மில்லி, அல்லது பாரத்தியான் நூறு மில்லியை இருநூறு மில்லி தண்ணீரில் கலந்து மூன்று முறை தெளித்தால் நோய் நீங்கும். இப்படிச் செய்யுங்க.

''கோழிப்பண்ணை ஒன்று வைக்க உத்தேசித்திருக்கிறேன். அதற்கு அரசு கடன் வழங்குமா? கொஞ்சம் சொல்லுங்கையா!'- வாழ்க்கையில் நொடிந்து போன முத்தையன் முன்வந்து கேட்டார்.

''கோழிப் பண்ணை வைக்க அரசு நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை. நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்குகள் அல்லது நிலவள வங்கிகள் மூலம் கடன் பெறலாம். விண்ணப்பம் செய்யலாம்-சமரசத்தின் ஆறுதலான பதில்.

''நான் பூண்டு பயிர் செய்யலாம் என்று நினைக்கிறேன்—உங்கள் யோசனை என்னங்க தம்பி!-சற்று பசையுள்ள பழனிசாமி பரிவோடு கேட்டான்.

பூண்டு சாகுபடி முறைபற்றி 16-3-74 தேதிய தமிழரசு இதழில் இருபத்தைந்தாம் பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்' - உங்களுக்குத் தான் எழுதப் படிக்கத் தெரியுமே!-இதமாகப் பதில் கூறினான் சமரசம்.

''சின்ன அம்மாவுக்கு பிரசவ வலி கண்டிருக்கு-உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னார் பெரிய எஜமான்''-கந்தன் சின்னம்மா என்றது சமரசத்தின் தமக்கை அல்லியைத்தான்.

சமரசம், ''அடுத்த ஞாயிறு மீண்டும் கூட்டம் நடைபெறும் என்று கூறிவிட்டு கந்தனோடு காற்றெனப் பறந்தான்.

அன்புமணியின் சங்கிலியில் மின்னிக் கொண்டிருந்த டாலரைவிட அவள் அம்மாவின் முகத்தில் களை பொலிவாக

இருந்ததை அறிந்து கொண்டார் மணவாளர். மகளின் திருமணம் மிக விரைவில் நடைபெறும் என்பதை யூகத்தினல் அறிந்தாலும் அவளுக்கு ஒரு டாலர் போட்டு விட வேண்டும், இரவல் நகையை அணிந்து வந்திருந்தாள் என்ற பேச்சுக்கு இடம் வைக்கப்படுவது தவறு-திருமணச் செலவுகளைத் தன் பையன்கள் கவனித்துக் கொள்வார்கள்-என்ருலும் தம்மால் இயன்றதையாவது செய்து விட வேண்டும் என்ற வழியை ஆராய்ந்து கொண்டு இருந்தார்.

உடைகளை மாற்றிக்கொண்டு சமையல் அறையை நோக்கிச் சென்ருள் நாயகி. ''அப்பா, பங்கஜம் பரந்தோடி வருவாளே, இன்னும் காணேமே! வேறு ஊருக்குப்போய் இருக்கிருளாப்பா!''-அன்பு இவ்வாறு விசாரித்துக் கொண்டு மேசை மேல் சிதரிக்கிடந்த புத்தகங்களை அடுக்கி வைப்பதில் முனைந்தாள்.

'ஐயா!' என்ற குரலைத் தொடர்ந்து கதவு தட்டப்படும் சத்தமும் கேட்டது. ஓடிவந்து கதவைத் திறந்த அன்பு, வாங்கம்மா! வாங்க உட்காருங்க என்று வரவேற்ருள். வந்திருந்த பங்கஜத்தின் தாயார் பழனியம்மாளின் முகத்தில் ஏதோவொரு கலக்கம் இருந்ததைக் கவனித்தார் மணவாளன்.

''என்னம்மா! பங்கஜத்தின் உடம்பிற்கு ஏதாவதும்?''— என்று கேட்டு முடிப்பதற்குள். 'அதொன்றும் இல்லை.' நீங்கள் வந்தது தெரிந்திருந்தால் வரவேற்க அவளல்லவா வந்திருப்பாள்!-என்று ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் கூறினுள் பங்கஜத்தின் தாய்.

''ஏம்மா! ஒரு மாதிரி பேசறீங்க, பங்கஜம் இப்பொழுது எங்கே?'' அன்புவின் அவசரம் அவள் கேள்வியில் தொனித்தது.

''பங்கஜம் இன்னும் வீடு வரவில்லை. வழக்கமாக அவள் இருக்கும் மாதர்சங்கத்திலும் காணவில்லை. இன்று மதியத்திற்குப் பிறகு இன்னும் வரவில்லை. அவள் வராமே என் மனம் நிம்மதியில்லை. ஒருவேளை இங்கு வந்திருப்பாளோ என்று வந்தேன் இங்கும் காணவில்லை' என்று ஏக்கங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்.

''கவலையை விடுங்கள்அம்மா! பங்கஜம் நல்ல புத்திபடைத்தவள். அவளுக்கு எதுவும் நேராது!''-இப்படி வெளியில் ஆறுதலாகக் கூறினுலும் மணவாளரின் உள்ளத்தில் அன்று அஞ்சல் அலுவலகத்தில் தடியன் சாம்பசிவம் கருவிக்கொண்டு சென்றது அவர் நினைவில் இடிபோல் விழுந்தது. தன் மனநிலையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் விரைவில் அழைத்து வருகிறேன் என்று கூறிவிட்டு விரைந்தார்.

விரைந்து செல்லும் அவர் கால்களைவிட, அவர் மனம் மிகவும் விரைவாகச் சென்றது. தவருன செயல்கள் நடப்பதை போல் மனத்திரை காட்டியது. ''சாம்பசிவத்தின் எண்ணத்திற்குப் பலியாகி விட்டாளோ? ''சேச்சே! என்ன நினைத்துவிட்டேன்?'' அது நடக்காது. நடக்கவும் கூடாது என்று புலம்பிக் கொண்டே சென்றவர்க்கு வீதியருகே கொல்லன் பட்டறையின் முன்னுல் ஒரு கடப்பாரைத்துண்டு கிடப்பதைக் கண்டார். அது முனைபிடிக்க அங்கு காத்திருப்பது, தமக்காகவே காத்திருப்பது போல் மகிழ்வோடு அதை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டார்.

பால் நிலவின் ஒளியில் அதன் முனை பளிச்சிட்டு மின்னியது. காமாந்தகாரர்களின் களியாட்டத்திற்குக் கடப்பரைப் பூசை போதாது. எனினும் அவசரத் தேவையை நிறைவேற்ற இது போதுமானது என்று நினைத்தவர் அதை எடுத்து ஓங்கிக் குத்துவதுபோல் ஒரு முறை ஒத்திகை பார்த்துக் கொண்டார்.

காலிகள் உண்டுவிட்டு உறங்கிக்கிடக்கும் இடத்தை நோக்கி விரைந்த அவரது கால்கள் திடீரென நின்று கொண்டன. ஒரு பெரிய வீட்டில், தென்னங்கீற்றுக்களின் சலசலப்புக்களினூடே ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்டது.

''அய்யோ, அம்மா!'' என்று பீரிட்டு ஒலித்த சத்தம் அவரது நெஞ்சினுள் புகுந்து என்னவோ செய்தது. கண்கள் இருண்டன. காதுகளைத் தாமாகவே கைகள் மூடின-ஒரு விஞடிதான்-உயிர் பெற்ற மணவாளர் ஓலக்குரல் வந்த திசையை நோக்கினர். 'கனக விலாஸ்'-ஆம் அது கனகசபையின் வீடுதான். அந்த ஊரிலேயே பெரிய மனிதர். ஏழைகளும், இயலாதவர்களும் நியாயம் தேடி ஓடி வரும் இடம். ஆனல் நீதி கிடைப்பது அவரவர்களின் விதியைப் பொறுத்தது. மகன் சமரசம் பொதுச் சேவை செய்ய, தந்தை ஊருறங்கும் நேரத்தில் உள்ளங் கவரும் மாளிகையில், தன் காமப்பசிக்குக் கன்னியர்களைக் காவு கொள்ளுதல் வேடிக்கை! விநோதம்! வேதனை வேலியே பயிரை மேய்ந்தால்... இத்தகைய உணர்வு மேலீட்டால் அசைவற்று நின்ருர் மணவாளர்.

''அம்மா!..என்னைக் காப்பாற்றுங்களே, என் உயிர் போய்க் கொண்டிருக்கிறதே!'' என்ற அலறல் கனத்து, மிகவும் துல்லியமாகக் கேட்டது.

தன் வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு மாளிகையின் வாசலில் நுழைந்தார். ஆழ்ந்த யோசனையில் அமர்ந்து கொண்டிருந்த கனகசபையை நோக்கிவிட்டு, கடப்பாரைத் துண்டை சுவற்றின் ஓரமாக வைத்தார்.

மணவாளருக்கு ஆத்திரம் மேலிட்டு வந்தது. சற்றுசிரமத்துடன் அடக்கிக் கொண்டு கடுமையான பார்வையொன்றைக் கனகசபையின் மேல் வீசினுர்.

கண்விழித்த கனகசபை ஆசிரியரை அருகில் வரும்படி அமைதியாகச் சைகை மூலம் அழைப்பு விடுத்தார். வேண்டாவெறுப்புடன் அருகில் வரலானுர் ஆசிரியர்.

''ஐயா! ஆந்திராவுக்குக் கொடுத்த எனது பெண் அல்லிக்குப் பேறுகாலம். தலைப் பிரசவமாக இருப்பதால் தாய் வீட்டில்தானே நடக்க வேண்டும். தாயில்லாத இந்த நேரத்திலும் அவளை அழைத்து வந்து விட்டேன். உள்ளே மிகவும் துன்பத்துடன் போராட்டிக் கொண்டு இருக்கின்ருள். இதைக் கேட்டதும் மணவாளரின் எண்ணமெல்லாம் தவிடு பொடியாய்விட்டது. ''சே சே, என்னவெல்லாமோ எண்ணிவிட்டோமே!' நல்லவேளையாக அவசரப்பட்டு எதுவும் கூறிவிடவில்லை''-என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார். சற்று மன ஆறுதலடைந்து மெதுவாகப் பேசலானுர்.

'உதவிக்கு ஒருவரும் இல்லீங்களா-பண்ணையாரே' என்று சற்று இதமாகக் கேட்டார்.

அடுத்த இதழில் முடியும்

அறிவாலயம்

பெரியார் பகுத்தறிவு நூலகம்-ஆய்வகம்



"தோண்டு செய்து
பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை
உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை
எழும்"—என்று

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் புகழப்பட்ட தன்மான இயக்கத்தின் தந்தை பெரியார் அவர்கள், இந்த நூற்றுண்டில், வாழ்ந்த பகுத்தறிவுப் பேரொளி ஆவார்கள். பெரியார் அவர்களின் எழுத்தும் பேச்சும் புதிய சிந்தனைகளையும் உணர்வுகளையும் உருவாக்கி, மகத்தான சீர்திருத்தப் புரட்சிக்கு அடித்தளமாக விளங்கி வெற்றிக் கண்டிருப்பதை தமிழ்மக்கள் அனைவரும் அறிவார்கள்.

அத்தகு பெருமைக்குரிய பெரியார் அவர்களின் நினைவிடம் சென்னை எழும்பூரிலுள்ள பெரியார் திடலில் அமைந்துள்ளது.

அங்கே—

பெரியார் அவர்கள் வாழ்ந்த அறை-பயன்படுத்திய பொருட்கள். உடையிலிருந்து படுக்கை வரை, கண்ணாடியிலிருந்து கைத்தடி வரை காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளன.

இதன் அருகே அமைந்துள்ளது பெரியார் பகுத்தறிவு நூலகம்-ஆய்வகம்.

பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் என்ற டிரஸ்ட் மூலம் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் பெயரில் நிறுவப்பட்டுச் சென்னைப் பல்லாவரத்தில் அமைந்துள்ள மறைமலை அடிகளார் நூலகம் போன்று, அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், நூல்கள், எழுதியவை முதலியன எல்லாம் இந்நூலகத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

1923 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரை பெரியார் அவர்கள் எழுதிய எழுத்துக்கள் அனைத்தும் இங்கே புத்தகங்களாக உள்ளன.

பெரியார் அவர்களின் குடியரசு இதழ்கள்-25 ஆண்டுகால வால்யூம்கள் அனைத்தும் மைக்ரோ பிலிம் மூலம் சுருளாக எடுக்கப்பட்டு இங்கே வைக்கப்பட்டுள்ளன.

பத்து ஆண்டு காலத்துக்கு முன்னுல் பெரியார் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் 'டேப்'பில் பதிவு செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

இவைகள் சாதாரண மானவை அல்ல - பல்வேறு ஆராய்ச்சி மாணவர்களுக்கும் ஆராய்ச்சி அறிஞருக்கும் கருப்பொருளாகப் பயன்படுபவை.

மலேயாப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஈ. சா. விசுவநாதன் ஆஸ்திரேலியா பல்கலைக்கழகத்தில் E. V. Rama-

sami : A study of Brahman and non Brahman Conflict and the Emergence of Self Respect Movement : *1920-1933*'' என்ற பொருளில் ஆராய்ச்சிசெய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

''தமிழகத்தில் தீண்டாமை' என்ற பொருளில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார் வரலாற்றுப் பேராசிரியர் கி.ர. அநுமந்தன் அவர்கள்.

பெரியாரும் சுயமரியாதை இயக்கமும், பெரியாரின் பொருளாதாரக் கொள்கைகள் என்ற பொருட்களில் எம்.லிட். பட்டத்துக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இவை அனைத்துக்கும் தேவையான ஆதாரங்களை வழங்கும் கருவூலமாக விளங்குகிறது. பெரியார் பகுத்தறிவு நூலகம் ஆய்வகம்.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த அனிதா டீல் என்பவர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பகுத்தறிவு இயக்கம்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். இது போன்றவர்களுக்கு பெரிதும் பயன்படும் வகையில் இந் நூலகம் அமைத்துள்ளது.

உலகப் பகுத்தறிவாளர்கள் உரைகள் - எழுத்தோவியங்கள் முதலியன இந்நூலகத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

நூலகத்தில் 1,500 வால்யூம்கள் திராவிட நாடு-திராவிடன் ரிவோல்ட் முதலியவை ஏராளமாக உள்ளன.

இந்நூலகத்தில் பெரும்பாலான அரிய நூல்கள் பலரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவையாகும்.

பெரியார் பகுத்தறிவு நூலகம்-ஆய்வகம் அமைந்துள்ள கட்டடம் மூன்று அடுக்கு மாளிகையாகும்.

நூலகத்தின் மேல் பகுதிகளில் கருத்தரங்கம், வாசகர் வட்டம் போன்ற நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்கும் வாய்ப்பு உள்ளது. நாளுக்கு நாள் வளருவதற்குரிய எல்லா வாய்ப்புகளையும் இந்த நூலகம் பெற்றுள்ளது.

பெரியார் அவர்களின் சிந்தனைகளையும் பகுத்தறிவுக் கருத்துக்களையும் ஆங்கிலத்தில் வெளியிடவும், இந்தியாவிலுள்ள பகுத்தறிவாளர்களுடனும் உலக அரங்கிலுள்ள பகுத்தறிவாளர்களுடனும் தொடர்பு கொண்டு கருத்துக்களை பரப்பவும் சேகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது !

நூலக அறிவியல் கற்றுத் தேர்ந்தவர்களே இங்கு பணியாற்றுகின்றனர்.

இந்த நூலகத்திலிருந்து எந்தப் புத்தகத்தையும் வெளியே கொண்டு செல்ல அனுமதிப்பதில்லை. ஆனால் இங்கே வந்து படித்துப் பயன் பெறலாம். குறிப்புகள் எழுதிச் செல்லலாம்.

பெரியார் பகுத்தறிவு நூலகம் சாதாரண நூலகமல்ல—பகுத்தறிவு ஆய்வகம் என்பதை அங்கு தவழும் அமைதியும் ஒழுங்கும் நிலை நிறுத்துகின்றன.

நாள்தோறும் 75 முதல் 100 பேர் வரை இந்த நூலகத்திற்கு வந்து படித்துப் பயன் பெறுகின்றனர். நூலகத்தில் உறுப்பினராக விரும்புபவர்களிடம் மட்டும் முதலில் ரூ. ஒன்று மட்டும் கட்டணம் பெறுகிறார்கள். பிறகு எதுவுமே தேவையில்லை.

பெரியார் பகுத்தறிவு நூலகம் ஆய்வகம்-ஆலோசனைக்குழுவில், பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ.து. சுந்தர வடிவேலு நூலக இயக்குநர் திரு. தில்லைநாயகம் தொழில் நுட்ப கல்வி இயக்குநர் திரு குழந்தைசாமி, உணவுத்துறைச் செயலாளர் திரு. திரவியம் ஐ.ஏ.எஸ். முதலியோரும் இடம் பெற்றுள்ளனர்.

பெரியார் சுயமரியாதை பிரச்சார ஸ்தாபனத்தின் செயலாளர் வழக்கறிஞர் திரு. கி. வீரமணி அவர்களிடம் இந்த நூலகம் அமைக்கும் எண்ணம் எப்படி ஏற்பட்டது என்று வினவுகின்றோம்.

''கல்வியறிவு - பகுத்தறிவு எல்லா மக்களிடமும் பரவ வேண்டும் என்பது ஐயா அவர்களின் ஆசை. அந்த வகையில் ஐயா அவர்களின் எண்ணத்தைச் செயலாக்கவே இந்தப் பகுத்தறிவு நூலகத்தை அமைத்துள்ளோம்''— என்கிறார் வீரமணி.

''பெரியார் அவர்களின் நினைவிடத்திலேயே இந்த நூலகத்தை ஏன் அமைக்க வேண்டும் ?''—நமது கேள்வி.

''குறிப்பிட்ட இலட்சியத்திற்காக பாடுபட்டவர்கள் — வரலாற்றுச் செய்திகளை வழங்கிய சிந்தனையாளர்களின் நினைவிடம் அமைந்துள்ள இடத்தைக் கண்ணுற்று உணர்ச்சி வயப்படுகிறவர்கள், அறிவு வயப்படவும் வேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கே இந்த நூலகத்தைஅமைத்துள்ளோம். மாவட்ட அளவில் இதுபோன்ற நூலகங்களை அமைக்க முடியாவிட்டாலும் படிப்பகங்களை நிறுவவும் பெரியார் சுயமரியாதை பிரச்சார டிரஸ்ட் பணியாற்றும். ஐயா அவர்கள் நினைத்ததை எவ்வளவு செய





லாக்க முடியுமோ அவைகளை அந்த அளவுக்குச் செயலாற்றி வருகிறோம் என்று உறுதியுடன் தெரிவிக்கின்றார் வீரமணி.

உண்மைதானே! மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது இந்த நூலகம். பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள ஒருவர் தம் வாழ்நாளில் ஆற்றிய தொண்டுகளை விளக்கிக் காட்டும் அறிவாலயம்தான் இந்த நூலகம்.

ஆராய்ச்சி மாணுக்கர்களுக்குக் கருப் பொருளை வாரி வழங்கும் கருவூலமான இந்த நூலகத்தை அமைத்துள்ள அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வைத்துள்ளது போல அமைந்துள்ள இந்த நூலகத்தை இந்தத் தலைமுறையினர் மட்டுமல்ல எதிர்காலத் தலைமுறையினரும் பாராட்டிப் போற்றுவார்கள் என்பது உறுதி!

—மாமூலன்.



காரணம் கேட்கின்....

1876ஆம் ஆண்டில் மிகப் பெரிய வறட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. அப்போது சென்னை மாநிலத்தை வெள்ளையர் ஆண்டார்கள். வெள்ளை வைஸ்ராய் டெல்லியிலிருந்து ஆட்சி செய்தார்; சென்னையில் ஆட்சி செய்த வெள்ளை கவர்னர் டெல்லியிலிருந்து வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதுகிறார். "சென்னை மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சியைச் சமாளிக்க 47 ஆயிரம் ரூபாய் நிதி உதவி செய்யுங்கள்" என்று. அப்போது, சென்னை மாகாணம் என்பது கர்நாடகம், ஆந்திரம், கேரளத்தின் பகுதிகள் ஆகியவை அடங்கிய மாநிலம். அதற்குத் தேவை 47 ஆயிர ரூபாயைத் தருவதற்கே அந்த வைஸ்ராய் மறுத்திருக்கிறார். இன்று நூறுண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள இந்த வறட்சியைச் சமாளிக்க 47 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுறது. இதற்குக் காரணம் என்ன?

மக்கள் உற்பத்தி அதிகம் என்பதுதான்!

பணத்தின் மதிப்பு குறைந்துவிட்டது. அதனுல்தான் 47 கோடி ரூபாய் என்பது சாதாரணமாகத் தெரிகிறது என்பது ஓரளவு உண்மை என்றாலும், மக்கள் பெருக்கம் ஏற்பட்டுவிட்டதும் முக்கியமான காரணம் என்பதை நாம் மறக்கக்கூடாது. கரன்சிகளை அதிகம் உற்பத்தி செய்யச் செய்ய—பணப் பெருக்கம் அதிகம் ஆக ஆக—நூறு ரூபாய் நோட்டு, பத்து ரூபாய் நோட்டு போல் கருதப்படுகிறதே, அதுபோல, மக்கள் பெருக்கம் அதிகம் ஆக ஆக மக்களின் மதிப்பும் குறைந்துவிடுகிறது. எனவே, ஒன்றிரண்டு குழந்தைகள் இருந்தால் அவர்கள் மதிக்கப்படுவதும், அளவு மீறிப் பிறந்தால் அவர்கள் மதிப்பிழப்பதும் வாடிக்கையாகிவிட்டது. எனவே குழந்தைகள் மதிக்கப்பட வேண்டுமானல் நாம் குடும்பநலத் திட்டத்தை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தன்னலம் கருதுதல் தேவை—இந்தத் தன்னலத்தில்தான் தாய்நாட்டின் பொதுநலமே அடங்கியுள்ளது.

—முதல்வர் கலைஞர்.

(போரூரில் ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழாவில்)

பத்து கிராமங்களுக்கு ஒரு தொழிற்சாலை!

"பத்து கிராமங்களுக்கு ஒரு தொழிற்சாலை தொடங்குங்கள்" என்று நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்-கடந்த மே திங்கள் முதல் நாள் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் நரசிங்கம்பட்டி என்ற கிராமத்தில் "பாண்டியன் கெமிக்கல் கம்பெனி" என்கிற நிறுவனத்தின் கால்கோள் விழாவில் — தொழிலதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோள் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் விடுக்கப்பட்ட அழைப்பாக இருந்தது. அவரது வேண்டுகோள், இந்த மாநிலத்து மக்களின்-குறிப்பாக கிராமப்புற மக்களின் - பொருளாதார வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள எல்லாரையும் சிந்திக்க வைக்கக்கூடியதாகும்! தமிழகத்தில் பரவிக் கிடக்கும் கிராமப்புற மக்களின் பொருளாதாரமும், வாழ்க்கைத்தரமும் உயர வேண்டுமானால் இதைத் தவிர, வேறு சிறந்த வழியொன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. இது முற்றிலும் சாத்தியமானதே. ஆனால் இதில் தீவிரமாக சிந்திக்க வேண்டியது, எந்த வகையான தொழிற்சாலை நமது கிராமப் புறங்களுக்கு மிகவும் பொருந்துவதாக இருக்குமென்பதே. கிராமப்புறங்களுக்கு என்றே தோன்றியது என்று சொல்லக்கூடிய ஒரு தொழிற்சாலை வேண்டுமானால், நமது கிராமங்களைப் பற்றியும், பல்வேறு தொழிற்சாலைகள், பற்றியும் சிறிதளவு தெரிந்தவர்களுக்கும் கூட முதலில் நினைவுக்கு வரக்கூடியது சர்க்கரைத் தொழிற்சாலைகளேயாகும்.

நமது மாநிலம் பெரும்பாலும் கிராமப்பகுதிகளையே அதிக அளவில் கொண்டது. பெரும்பான்மையான மக்கள் வேளாண்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே, கிராமப்பகுதிகளில் ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் விவசாயப் பொருள்களை மூலப் பொருளாகக் கொண்டவைகளாக இருக்க வேண்டியது அவசியம். இது இரண்டு வகையில் நன்மை பயக்கக் கூடிய தொன்றாகும். முதலாவது, விவசாயப் பொருள்களை விற்பனை செய்வது, உழவர் பெருமக்களுக்கு ஒரு பிரச்சினையாக இராது. இரண்டாவதாக, தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைப்பதில் சிரமமிருக்காது.

நமது மாநிலத்தில் விவசாயப் பொருள்களை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகளில் பருத்தி ஆலைகளுக்கும், உணவுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும், அடுத்தபடியாக ஒரு சிறந்த இடத்தை வகிக்கக் கூடியது சர்க்கரைத் தொழிற்சாலைகளேயாகும். இந்த ஆலைகள் ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 89,000 விவசாயிகளுக்கு ஏறத்தாழ 40 கோடி ரூபாய்களைக் கரும்புக்கு விலையாக கொடுக்கின்றன. மேலும் இந்த ஆலைகள் கரும்பு பயிரிடுதல், அதை வெட்டி ஆலைகளுக்கு அனுப்புதல் மற்றும் அதன் தொடர்புடைய வேலைகளில் 10 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கின்றன; ஏறத்தாழ 14,000 பேர்களுக்கு ஆலைகளிலேயே நேரடியாக வேலை வாய்ப்புகள் அளித்துள்ளன.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் எந்த அறைவை திறன் கொண்ட சர்க்கரை ஆலைகளை அமைக்க வேண்டுமென்பது சிந்தனைக்குரியது. பலப்பல காலக்கட்டங்களில் சர்க்கரை ஆலைகளின் அறைவைத்திறன் குறித்துப் பல கருத்துக்கள் கூறப்பட்டன. கால மாறுபட்டிற்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் கருத்துக்கள் மாறுபடுகின்றன. 1951-ஆம் ஆண்டு 'நாயுடு கமிட்டி' என்ற குழு, நாள் ஒன்றுக்கு 600 டன்னிகளுக்கு குறைந்த அளவில் கரும்பு அறைக்கும் திறனுள்ள

எஸ். டி. வைத்திலிங்கம்
எம். ஏ. எம். லிட்.
இணை இயக்குநர் சர்க்கரை
(திட்டங்கள்)

ஆலைகள் இலாபகரமாக் இயங்க முடியாது என்ற கருத்தைக் கூறியது. சர்க்கரை ஆலைகளுக்கான முதலாவது ஊதியக்குழு (1957-60), 'நாள் ஒன்றுக்கு 800 முதல் 1,000 டன்களுக்குக் குறைந்த அறைவைத்திறன் கொண்ட ஆலைகள் இலாபகரமாக இயங்காது' என்ற கருத்தை வெளியிட்டது. 1963-ஆம் ஆண்டு ''குண்டுராவ் கமிட்டி'' 'நாளொன்றுக்கு 1,500 டன்னிகள் அறைவைத்திறன் கொண்ட ஆலைகள் சிறந்த முறையில் இயங்க முடியும்' என்ற கருத்தை வெளியிட்டது. மேற்கண்ட கருத்தை, 1965-ஆம் ஆண்டில் சர்க்கரைத்தொழில் ஆய்வுக் கமிஷன் (சென் கமிஷன்) ஏற்றுக்கொள்ளவில்லை.

சர்க்கரை ஆலைகளுக்கான இரண்டாவது ஊதியக்குழுவின் (1970) கருத்து ஆழ்ந்து நோக்கற்பாலது.' அறைவைத்திறன் ஒன்றைமட்டுமே, ஒரு ஆலை இலாபகரமாக இயங்குமா இயங்காதா என்பதை நிர்ணயிக்கும் அளவுகோலாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு ஆலை இலாபகரமாக இயங்குவது, அதனை நிர்வகிப்போரின் திறமை, மூலப்பொருள்கள் கிடைப்பது, இயந்திரத்தின் விலை, உற்பத்திச் செய்யும் பொருள்களின் மதிப்பு, ஆகியவற்றைப் பொறுத்தே உள்ளது என்ற சிறந்த ஒரு கருத்தினை அக்குழுவினர் வெளியிட்டனர். எனவே, பல அம்சங்களையும் பொருத்து இலாபகரமாக இயங்கும் என்று கருதக்கூடிய தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் மாறுபடக்கூடிய ஒன்றே. எல்லா காலத்திற்கும் பொருந்தக்கூடியதான உற்பத்தித் திறன் இதுதான் என்று அறுதியிட்டுக் கூற இயலாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் இம் மாநிலத்து கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்திலும், பொருளாதாரத்திலும், முன்னேற்றம்காண வேண்டுமானால், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டிய விதத்தில் தொடக்கத்தில் 'பத்து கிராமங்களுக்கு ஒன்று' என்கிற அளவில் இல்லாவிட்டாலும், வட்டத்திற்கு ஒன்று என்ற அளவிலாவது சிறிய அளவு அறைவைத்திறன் கொண்ட சர்க்கரை ஆலைகளை நிறுவலாம்.

பெரிய சர்க்கரை ஆலைகளில் உள்ள பிரச்சனைகள்

சிறிய அளவில் அறைவைத் திறன் என்றால், நாள் ஒன்றுக்கு எத்தனை டன்னிகள் கரும்பு அறைக்கும் திறன் உள்ள ஆலை என்ற கேள்வி வரும். தற்போது நாள் ஒன்றுக்கு 1,250 டன்னிகள் கரும்பு அறைக்கும் ஆலைகள் இலாபகரமாக இயங்கக்கூடியவை என்ற கருத்து மிகவும் பரவலாக எல்லா மட்டங்களிலும் இருந்து வருகிறது. இத்தகைய ஆலை ஆண்டு ஒன்றுக்கு 210 நாட்கள் அறைவை செய்தால் இலாபகரமாக இயங்க சிறந்த வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய ஆலை நிறுவிட வேண்டுமானால், அதற்கு கீழ்க்கண்டவைகள் தவிர்க்க இயலாத தேவைகளாகும்.

1. ஏக்டேர் ஒன்றுக்கு 75 டன்னிகள் கரும்பு விளையும் என்கிற அடிப்படையில் 5,000 முதல் 6,600 ஏக்டேர்கள் வரை கரும்பு பயிரிட வசதிகள் உள்ள நிலம்.

2. நாள் ஒன்றுக்கு 36 இலட்சம் முதல் 45 இலட்சம் லிட்டர்கள் வரை ஆலையின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நீர்வசதி.

3. உயர் அழுத்த மின் சக்தி.

4. குறைந்தது 40 ஏக்டேர் நிலம். அந்நிலம் தண்ணீர் தேங்காத மேட்டுப்பாங்கானதும், கட்டிடங்கள், கடைக்கால்கள் அமைத்திடவும் ஏற்றதாக இருக்க வேண்டும்.

5. சுமார் 625 இலட்சம் ரூபாய் மூலதனம்.

6. கடந்த கால அனுபவத்தை வைத்துப் பார்க்கும் போது, ஐந்து முதல் ஆறு ஆண்டு காலம்.

பங்கு மூலதனம்: 1:1.7 என்ற விகிதத்தில். இதில் ரூபாய் 235 இலட்சம் பங்கு மூலதனமாயும், பாக்கித் தொகை கடனாகவும் இருக்கும். ஆரம்ப கட்டத்தில் அரசின் பங்கு மூலதனம் மிகவும் கணிசமான அளவுக்கு அதாவது கிட்டத்தட்ட ரூபாய் 210 இலட்சம் வரையில் இருக்க வேண்டும். ஆலை அறைவைத் தொடங்கிய பின்னர் விவசாயிகளிடம் பங்கு மூலதனம் கரும்புக் கிரயத்தில் பிடித்தம் செய்வதின் மூலம் வசூலித்து, அரசு முதலீடு செய்துள்ள தொகையில் பெரும் பகுதியை அதாவது ரூபாய் 110 இலட்சம் வரையில் சில ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம். பாக்கித்தொகை அரசின் பங்கு மூலதனமாக தொடர்ந்து இருந்து வரலாம். இத்தனை குறைந்த பட்ச தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வசதிகள் உள்ள இடங்கள் தமிழ் நாட்டில் எத்தனை இருக்கின்றன? மிகவும் அதிக பட்சமாக பதினைந்திற்கு மேல் இருக்க சாத்தியமிருப்பதாகத் தெரியவில்லை.



இத்தகைய பெரிய ஆலைகள் திறம்பட செயல்படச் செய்ய வேண்டுமானால் அதிகப்பட்சம் 40 கிலோ மீட்டர்கள் வட்டத்திற்குள் கரும்பு பயிரிடக்கூடிய நிலங்கள் இருக்க வேண்டும். இத்தகைய இடங்கள் தமிழ் நாட்டில் மிகக்குறைந்த அளவில்தான் தற்போது உள்ளன. தற்போது இயங்கி வருகின்ற பெரிய ஆலைகள் 80 கிலோ மீட்டர்கள் தூரத்திலிருந்துகூட, கரும்பு கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் உள்ளன என்பது கவனத்திற்குரியது. ஆலைக்கு வேண்டிய கரும்பு கொண்டு வர குறைந்தது 60 முதல் 70 சுமையுந்துகள் (லாரிகள்) வேண்டும். தற்போது 'டீஸல்' எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், 40 கிலோ மீட்டர்கள் தூரத்திலிருந்து கரும்பு கொண்டு வர, டன்னி ஒன்றுக்கு கிட்டத்தட்ட பதினொன்று முதல் பதினைந்து ரூபாய்கள் வரை சுமையுந்து வாடகையாக கரும்பு விவசாயிகள் செலவு செய்ய வேண்டியுள்ளது. இதைவிட அதிக தூரங்களிலுள்ள விவசாயிகள், இன்னும் அதிகமான அளவில் செலவு செய்ய வேண்டும். 'டீஸல்' எண்ணெய் கிடைப்பதில் இன்றைய தட்டுப்பாடு நிலை நீடித்துக்கொண்டே போனால், இன்னும் சில ஆண்டுகளில் சுமையுந்து வாடகைக்காக, கரும்பு விலையில் பாதி அளவுக்கு மேல் கொடுக்க வேண்டி வந்தாலும் வியப்படைய வேண்டியதில்லை. மேலும் சுமைந்துத்துக்கு வேண்டிய 'டீஸல்' எண்ணெய் நிச்சயம் வேண்டிய அளவுக்கு கிடைக்குமா வென்பதும் ஐயப்பாட்டிற்குரியதே. அப்படியே அதிக விலையில் கிடைக்குமென்றாலும், இவ்வளவு அத்தியாவசியமான ஒரு பொருளை ஆலைகளுக்குக் கரும்பு கொண்டு வருவதற்காக பயன்படுத்தத்தான் வேண்டுமா என்பதும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தொன்றாகும். எந்த காரணத்தினாலோ சுமையுந்துகளுக்கு வேண்டிய 'டீஸல்' எண்ணெய் கிடைக்க வழியில்லாது போனால், சுமையுந்துகளில் பெருமளவு கரும்பு கொண்டு வர வேண்டிய நிர்பந்த நிலையிலுள்ள இன்றைய பெரிய அறைவைத்திறன் கொண்ட ஆலைகள் இயங்க முடியுமா என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், நிலைமை ஆழ்ந்த கவலைக்கிடமளிப்பதாக உள்ளது. இந்த



ஆண்டுகூட பல ஆலைகள் இந்த நெருக்கடியான நிலைமையை அனுபவித்துள்ளன என்பதும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தொன்றாகும்.

இத்தகைய பெரிய ஆலைகள் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு வேண்டிய உரங்கள் வழங்கும் பொறுப்பை தாங்களே ஏற்றுக் கொண்டால் தான், விவசாயிகளுக்கு தேவைபடும் நேரத்தில் அவற்றை வழங்க முடியும். எவ்வளவு முயற்சிகள் செய்தாலும் தேவைப்படும் நேரங்களில் நாலாயிரம், ஆறாயிரம் எக்டேருக்கு ஆலைகள் உரங்கள் வழங்க முடிகிறதாவென்பதும் ஒரு கேள்விக்குறியாகவே நம் முன் நிற்கிறது. இவ்வளவு பரந்த நிலப்பரப்பில் கரும்பு விவசாயம் செய்வதற்கு சுமார் ரூபாய் 100 இலட்சம் முதல் ரூபாய் 150 இலட்சம் வரை கடன் வசதிகள் தேவைப்படும். குறிப்பிட்ட நேரங்களில் இந்த அளவுகடன்வசதிகளைச் செய்து தர முடிகிறதாவென்பதும் மற்றொரு கேள்விக்குறியாகவே நிற்கிறது. உரங்களும், கடன் வசதியும் போதிய அளவில் கிடைக்க சாத்தியமிருப்பதாக வைத்துக் கொண்டாலும், தேவைப்படக்கூடிய சமயங்களில் இவற்றை ஆறாயிரம், ஏழாயிரம் விவசாயிகளுக்குக் கிடைக்கச்செய்வதிலும், இவை ஒழுங்காகக் கிடைத்து சரிவரப் பயன்படுத்தப் படுகின்றனவா வென்பதைத் கண்காணிப்பதிலும் பல சிரமங்கள் உள்ளன.

இத்தகைய பெரிய ஆலைகளில் பணிபுரிவோர் கிட்டத்தட்ட 600 முதல் 700 பேர்கள் வரை இருப்பார்கள். பொதுவாக கிராமப்புறங்களிலேயே சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட வேண்டியிருப்பதால் இவ்வளவு பேருக்கும் வீட்டு வசதிகளும், இதர வசதிகளும் செய்து தருவதும் சிரமமான காரியமாக உள்ளது.

இவ்வளவு சிரமங்களையும் சமாளித்து ஒரு இடத்தில் ஒரு ஆலை இயங்கினால், அது அந்த ஆலையைச் சுற்றியுள்ள ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்கே பயன்படுகிறது. அந்த பகுதியினருக்கே வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன.

இதற்கு மாறாக, சிறிய அளவு அறைவைத் திறனுள்ள ஆலைகள், அதாவது நாள் ஒன்றுக்கு 350 டன்னிகள் கரும்பு அறைக்கக்கூடிய திறனுள்ள ஆலைகள் அமைப்பதால் பல நன்மைகள் எதிர்பார்க்க முடியும்.

சிறிய சர்க்கரை ஆலைகள்

சிறிய ஆலைகளுக்கு வேண்டிய கரும்பை உற்பத்தி செய்து கொடுக்க (210 நாட்கள் வேலை செய்யும் என்ற அடிப்படையிலும் எக்டேர் ஒன்றுக்கு 75 டன்னிகள் விளையும் என்ற கணக்கிலும்) 1,400 முதல் 1,800 எக்டேர்கள் கரும்பு விளைவிக்கக்கூடிய நிலம் இருந்தால் போதுமானது. தமிழ் நாட்டில் பெரும்பான்மையான பகுதியில் இத்தகைய பல இடங்களை சுலபமாக தேர்ந்தெடுக்க முடியும். இந்த ஆலைக்கு வேண்டிய தண்ணீர் தேவையும் சுமார் 9 இலட்சம் முதல் 13.5 இலட்சம் லிட்டர்களே இருக்கும். இந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களும் தமிழ்நாட்டில் பல இருக்க முடியும். ஆலைக்கு வேண்டிய கரும்பை உற்பத்தி செய்து கொடுக்க விவசாயிகளுக்கு தேவைப்படும் உரங்களை

விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

DSIC/1813TMA

இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

ஆலையே ஏற்றுக்கொண்டு எளிதில் வழங்கிட இயலும். சுமார் ஆயிரத்தைந்நூறு விவசாயிகளுக்கே இவற்றை வழங்கினால் போதுமானதாயிருக்குமாதலால், இவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்வதும், கண்காணிப்பதும் சுலபமாயிருக்கும். ஆலைக்கு வேண்டிய கரும்பை ஆலையிலிருந்து எட்டு அல்லது பத்து கிலோமீட்டர் சுற்றளவுள்ள பகுதியிலிருந்தே பெற முடியும். இதில் மிகவும் முக்கியமாகப் பார்க்க வேண்டியது கரும்பு முழுவதும் மாட்டு வண்டிகளிலேயே கொண்டு வந்துவிட முடியும். இதனால் கரும்பு வெட்டி உடனுக்குடன் ஆலைக்கு கொண்டு வர சாத்தியக்கூறுகள் இருப்பதால், ஆலையின் சர்க்கரைக் கட்டுமானமும் மிகவும் நன்றாக இருக்கும். சுமையுந்துகளுக்கு வேண்டிய 'டீஸல்' எண்ணெய் கிடைப்பதில் ஒரு நிச்சயமற்ற நிலை இருப்பதாலும், கிடைத்தாலும் அதிக விலை கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதாலும், சுமையுந்துகளை நம்பி பெரும் அளவு கரும்பு கொண்டு வரக்கூடிய நிலையில்லாத சிறிய ஆலைகளை நிறுவுவது எதிர்காலத்தில் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக இருந்தாலும் வியப்படைய வேண்டியதில்லை.

இத்தகைய சிறிய சர்க்கரை ஆலைகளை நிறுவனம் செய்ய 8 முதல் 12 எக்டேர்கள் வரை நிலப்பரப்பு இருந்தால் பொதுமானதாக இருக்கும். ஆலையில் பணிபுரிய சுமார் 250 பேர்கள் இருந்தால் போதுமானது. இவர்களுக்கு வீட்டு வசதி, இதர வசதிகள் செய்து கொடுப்பதும் எளிதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக 1,250 டன்னிகள் அறைவைத்திறன் கொண்ட ஒரு ஆலையை ஒரு இடத்தில் நிறுவி, அந்த ஒரு பகுதி மக்கள் மட்டும் பொருளாதார முன்னேற்றம் காண வழி வகுத்துக் கொடுப்பதைவிட, 350 டன்னிகள் அறைவைத்திறன் கொண்ட நான்கு ஆலைகளை, நான்கு இடங்களில் நிறுவி, நான்கு பகுதி மக்கள் பொருளாதார முன்னேற்றம் காண வழிவகைகள் செய்து கொடுப்பதே நம் கிராமப்புற மக்கள் விரைவில் பொருளாதார முன்னேற்றம் காண வழி வகுத்துக் கொடுப்பதாகும். மேலும் வேலை வாய்ப்பு ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே கிடைப்பதற்குப் பதிலாக, நான்கு பகுதி மக்களுக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக்



கொடுத்ததாகும். இன்றைய நிலையில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தர, இதைவிட சிறந்த வழி இருக்க முடியுமாவென்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிறிய ஆலைகளை நிறுவனம் செய்ய எவ்வளவு மூலதனம் தேவைப்படும் என்பதற்குச் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. ஆனால் சுமார் 190 இலட்சம் ரூபாய்கள் தேவைப்படலாமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவைகளை அரசுத்துறையில் நிறுவனம் செய்ய வேண்டும். ஏனெனில், கடந்த காலத்தில் ஒரு ஆலையை நிறுவனம் செய்து, உற்பத்தி தொடங்க ஐந்து முதல் ஆறு ஆண்டுகள் வரை ஆகியுள்ளது. குறிப்பாக பங்கு மூலதனம் வசூல் செய்வது, இயந்திர சாதனங்களைப் பெறுவது போன்ற காரியங்களில் ஏற்பட்ட கால தாமதத்தினால் ஆலை நிறுவி உற்பத்தி தொடங்க பல ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அரசுத்துறையில் புதிய ஆலைகளை நிறுவனம் செய்வதின் மூலம், இந்த நீண்ட கால தாமதத்தை தவிர்க்க முடியும். வேண்டிய மொத்த மூலதனத்தில் பங்கு மூலதனம்: கடன் = 1: 1:7 என்ற விகிதத்தில் ரூபாய் 70 இலட்சம் பங்கு மூலதனமாகவும், பாக்கித் தொகை கடனாகவும் இருக்கும். ஆரம்ப கட்டத்தில் அரசின் பங்கு மூலதனம் மிகவும் கணிசமான அளவுக்கு -கிட்டத்தட்ட ரூபாய் 65 இலட்சம் வரை—இருக்க வேண்டும். ஆலை அறைவைத் தொடங்கிய பின்னர் விவசாயிகளிடத்திலிருந்து கரும்புக் கிரயத்தில் பிடித்தம் செய்வதின் மூலம் பங்கு மூலதனம் வசூலித்து அரசு முதலீட்டில் பெரும் பகுதியை அதாவது ரூபாய் 40 இலட்சம் வரை சில ஆண்டுகளில் திரும்பச் செலுத்தலாம். பாக்கித் தொகை, அரசு பங்கு முதலீடாக தொடர்ந்து இருந்து வரலாம்.

இவ்வளவு நன்மைகள் இருந்தாலும் இத்தகைய சிறிய ஆலைகளை நிறுவ வேண்டியது அவசியம்தானா? இவற்றை நிறுவுவது சாத்தியமா என்ற ஐயப்பாடுகள் எழுவது இயற்கை. இன்றைய நிலையில் சர்க்கரை ஆலைக்கு வேண்டிய இயந்திரங்களை உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்கள் நம் நாட்டில் ஏழு உள்ளன. இவைகள் அனைத்தும் பெரிய ஆலைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களைச் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளன. இவற்றால் நமது நாட்டின் சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை வேண்டிய அளவில், வேண்டிய காலங்களில் உற்பத்தி செய்து தர இயலுவதில்லை. இத்தகைய நிறுவனங்கள் குறைந்த எண்ணிக்கையிலுள்ளதால் இயந்திர சாதனங்களுக்கு அவைகள் வைத்ததுதான் விலையாக உள்ள நிலைமை இருக்கிறது. இதனால் இயந்திரங்களின் விலைகள் மிக மிக உயர்ந்துள்ளன. உதாரணமாக 1966-67-ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்கிய-நாள் ஒன்றுக்கு 1,000 டன்னிகள் கரும்பு அறைக்கக்கூடிய-ஆலையின் இயந்திரங்கள் விலை ரூபாய் 84 இலட்சங்களாக இருந்தது. 1971-72-ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்கிய - நாள் ஒன்றுக்கு 1,250 டன்னிகள் கரும்பு அறைக்கும் திறனுள்ள-ஆலையின் இயந்திரங்களின் விலை ரூபாய் 120 இலட்சங்களாக உயர்ந்தது. தற்போது இதே இயந்திரங்களின் விலை இரண்டு ஆண்டுகள் இடைவெளியில் சுமார் 384 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ள நிலையினைப் பார்க்கிறோம். எனவே, சிறிய ஆலைகளுக்கான இயந்திர சாதனங்களைத் தற்போதுள்ள இயந்திர சாதன உற்பத்தியாளர்கள் செய்து தர முன் வருவார்களாவென்பது ஐயப்பாட்டிற்குரியதே!

எனினும் சிறிய ஆலைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களில் மிகப் பெரும் பகுதியை தமிழ் நாட்டிலேயே அரசுத் துறையிலுள்ள நிறுவனங்கள் நிச்சயமாக உற்பத்தி செய்து தர முடியும்! பெரும்பாலும் குழாய்களும், தொட்டிகளும், கரும்புச் சாற்றினை கொதிக்க

வைக்கும் பெரிய பாத்திரங்களுமே கொண்ட சர்க்கரை ஆலைகளுக்கான சாதனங்களை செய்வது எளிதான காரியமே. இவற்றுக்கு வேண்டிய மின்சார இயக்கிகள் (மோட்டார்கள்), இதர மின்சார கருவிகள் மின் விசை உற்பத்தி சாதனங்கள், கொதிகலங்கள் (Boilers) போன்றவற்றை தற்போது பெரிய ஆலைகளுக்கான இயந்திரங்களை உற்பத்தி செய்வோரில் பலர் தாங்களே செய்வதில்லை; இவற்றை செய்து தருகிற நிறுவனங்களிலிருந்தே அவர்களும் வாங்குகிறார்கள். எனவே, குறிப்பிட்ட ஒன்றிரண்டு சாதனங்கள், அதாவது கொதிகலம் (Boilers), மின் விசை உற்பத்தி சாதனம் (Turbo-alternators), சுழற் சல்லடைகள் (Centrifugal machines), நீராவியால் இயங்கும் 'டர்பைன்கள்' போன்றவற்றைத் தற்போது பெரிய ஆலைகளுக்குச் செய்து தருகின்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கொதி கலங்கள் (Boilers) செய்யும் தொழிற்சாலை தமிழ் நாட்டிலேயே திருச்சிராப்பள்ளிக்கருகில் இயங்கி வருகிறது. சிறிய ஆலைகளுக்கான சாதனங்களை இந்த நிறுவனத்தின் மூலம் செய்து பெற்றுக் கொள்ள முயற்சி செய்யலாம். சுழற் சல்லடைகளை பெரிய ஆலைகளுக்கு செய்து தருகிற நிறுவனம் சென்னையிலேயே இயங்கி வருகிறது. அந்த நிறுவனத்தின் மூலம் சிறிய ஆலைகளுக்கான சுழற் சல்லடைகளை செய்து கொள்ள முயற்சி செய்யலாம். மின்விசை உற்பத்தி சாதனம், நீராவியால் இயங்கும் 'டர்பைன்கள்' மட்டுமே வெளி மாநிலங்களிலிருந்து நாம் பெற வேண்டியிருக்கும். இந்த சாதனங்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற் சாலைகளையும் கூட பிறகு தேவைப்பட்டால் தமிழ் நாட்டில் தொடங்க முயற்சி எடுக்கலாம்.

தற்போது பெரிய அறைவைத் திறனுள்ள ஆலைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை வாங்குவதற்கு குறைந்த எண்ணிக்கையிலுள்ள பெரிய இயந்திர உற்பத்தி நிறுவனங்களிடம் மிக அதிக விலைகளில் ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர், அவைகள் எப்போது கிடைக்குமோவென்று காத்திருப்பதை விட, சிறிய திறனுள்ள ஆலைகளை நாமே உற்பத்தி செய்து நிறுவுவது சிறந்ததாயிருக்கும். இப்படிச் செய்யாவிட்டால், சர்க்கரை உற்பத்தி பெருக்கமும், கிராமப்புற மக்களின் பொருளாதார முன்னேற்றமும் நாம் நினைக்கிற அளவுக்கு குறுகிய காலத்தில் ஏற்பட முடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

சிறிய ஆலைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை தயாரித்து அளிக்க தற்போது ஒரு நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

எங்கள் அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையன்பர்களுக்கும்

“சிந்தாமணியின்” வாழ்த்துக்கள்!!

தரமான சரக்கு ! சரியான எடை !! குறைந்த விலை !!!

குடும்பத் தேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற சிறந்த இடம்

சிந்தாமணி

கூட்டுறவு சிறப்பு அங்காடி, திருச்சி.

(திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் அங்கம்)

தலைமையகம் :
தொலைபேசி :
புத்தூர் : 3311, 3355

கிளைகள் :
தொலைபேசி :
தெப்பக்குளம் : 5519
பெல் (கைலாசபுரம்) : 280

எமது சேவை நிலையங்கள் :

* தையல் நிலையம் ** கடிகாரம் பழுதுபார்க்கும் நிலையம் *** ரேடியோ மற்றும் மின்சார சாதனங்கள் பழுதுபார்க்கும் நிலையம்

வன வளர்ச்சியும் விளம்பரத் திட்டமும்

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு மாத்திரம் இல்லாமல் நாகரிக அடிப்படைக்கே வனம் ஒரு முக்கிய காரணமாகும்.

''காடு இல்லையேல் நாடு இல்லை'' என்பது முதுமொழி.

மனிதன் தன் வாழ்நாளில் ஏதாவது ஒரு பயன் தரு மரத்தை வைத்துப் பயிர் செய்ய வேண்டும்.

அந்தக் கடமையை கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நிறைவேற்ற வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய பாதையில் வீறு நடைபோடும் நம் தமிழக அரசு, வனத்துறையின் மூலம், வனங்களின் செழிப்பையும், அவற்றைப் போற்றிப் பேண வேண்டிய அவசியத்தைப் பற்றியும், வன விலங்குகளையும் அவற்றின் அழிவினைத் தடுக்க வேண்டிய நிலைதனை, மக்களிடையே உணர்த்த ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டம்தான் 1969-ல் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள ''வன விளம்பரத் திட்டம்''. இதன் மூலம் தற்போது விளம்பரப் பலகைகள், திரைப்படங்கள், வண்ண ஓவியங்கள், புகைப்படங்கள், சொற்பொழிவுகள் மூலமாகவும் வனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி வனத்துறை வலியுறுத்தி வருகிறது. இப்பிரசாரம் இதுவரை முக்கிய நகரங்களில் மட்டுமே செய்து வரப்பட்டது. இவ்வாண்டு வனத்தின் முக்கியத்துவம், வன விலங்குகள் பேணிப் போற்றப்பட வேண்டிய அவசியம் பற்றி பிரச்சாரம் செய்ய ஒரு ''விளம்பர ஊர்தி'' யும் தமிழ்நாடு அரசு தந்திருக்கிறது. இதுவே நாம் செல்லும் முன்னேற்றப் பாதையின் முதல் படியாகும்.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இம்மூன்றும் வனத்தின்பால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சார்ந்திருக்கிறது என்பது நம்மில் பலருக்கு இன்னமும் தெரியாது.

மனிதனாலும், மனிதனால் உண்டாக்கப்பட்ட தொழிற்சாலைகளால் ஏற்படும் நச்சுக் காற்றை (கரியமில வாயு) யெல்லாம் உண்டு மனிதனுக்குத் தேவையான நல்ல காற்றை (பிராண வாயுவை) தினம் தினம் தருவதுதான் மரம், செடி, கொடிகளாகும். மனித இனத்தினுடைய சரித்திரமே அடர்ந்த வனத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது. இந்த பூமியின் நிலப்பரப்பில் எங்கு பார்த்தாலும் காடுகள்தான் இருந்தன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இயற்கையின் இடிபாடுகளிலே சிக்கிப் புதையுண்டு போன காடுகள் இன்று நிலக்கரியாகத் தோண்டி எடுக்கப்படுகின்றன. விஞ்ஞான அடிப்படையில் இயங்கும் பல நவீன சாதனங்களுக்கு அந்த நிலக்கரி பயன்படுகிறது.

காடுகள் இல்லையேல் மனித வாழ்க்கை இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு இந்தியாவில் ராஜஸ்தானில் உள்ள ''தார்'' பாலைவனமும், ஆப்பிரிக்காவில் உள்ள ''சஹாரா'' பாலைவனமும் ஆகும். நமது நாடு விவசாயத்தை நம்பி இருக்கும் நாடு. நாட்டின் பெரும்பாலான மக்கள் தொகை கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். இதனால்தான் மகாத்மா காந்தியடிகள் நம் தேசத்திற்குத் தீட்டப்படும் திட்டங்கள் யாவும் கிராமத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திருக்கிறார். நிலவளத்திற்கு நீர் வளம் முக்கியம். நீர் வளத்திற்கு இன்னும் நாம் பருவ மழையைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். வனங்கள் அழிந்ததாலேயே நம் நாட்டில் ஓர் இடத்தில் வறட்சியும் மற்ற இடத்தில் வெள்ளமும் இன்னும் பல இன்னல்களும் காரணம் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும். குறிப்பாக கிராம மக்கள் உணர வேண்டும்.

டி. இராமலிங்கம்.

மக்கள் காட்டு மகசூலில் அக்கிராமம் தன்னிறைவு பெற காடு வளர்க்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் கிராமம் கிராமமாகச் சென்று மக்களை அணுகி அவர்களை உணரச் செய்ய வேண்டும். அத்தகைய கிராமங்களுக்குச் சென்று காடுகள் எவ்வாறு மண்ணரிப்பைத் தடுக்கவும், வெள்ளப் பெருக்கைத் தடுக்கவும் பருவ மழையைத் தோற்றுவிக்கவும், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவும் சுற்றுபுற நகரத்து அசுத்த காற்றைச் சுத்தப்படுத்தவும், பெருந்துணை புரிகின்றன என்று பிரச்சாரம் செய்ய வேண்டும்.

(5) வனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், வனத்துறையின் வழக்குகள், வனத்துறையில் நடைபெறும் விழாக்கள் முதலிய விவரங்களை அவ்வப்போது தினசரி செய்தித் தாள்களில் கண்டிப்பாக வெளியிட ஆவன செய்ய வேண்டும்.

(6) வானொலியில் ''விவசாய நிகழ்ச்சி'' ''கிராம நிகழ்ச்சி'' போன்று ''வனத்துறை நிகழ்ச்சியைப் பற்றி'' இடம் பெறல் வேண்டும்.

(7) குடும்ப நலத் திட்டம் குறுகிய காலத்தில் மக்கள் கவனத்தைக் கவர்ந்தது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் பாதிக்கப்படப்போவதையெல்லாம், ஆணித்தரமாக அரசு மனத்தில் பதியும் வண்ணம் செய்து விட்டது. அத்தகைய ஒரு விழிப்பு உணர்ச்சி காடுகளின் உற்பத்தியைப் பெருக்க அரசு தனது பிரச்சார சக்தியை உடனடியாக குடும்ப நலத்திட்டம்போல் செயல்பட ஆவன செய்ய வேண்டும். இதற்காக ''காட்டின் வளமே நாட்டின் வளம்'' ''வனத்தினை பேணின் வளம் பல பெருகும்''
''வனமில்லையேல் வளமில்லை
வளமில்லையேல் வாழ்வில்லை''

''மக்களின் பெருக்கம் இம்
மண்ணிற்குத்தீது
மரங்களின் பெருக்கம் இம்
மண்ணிற்கு நன்று''

Farmers! Forests bring us good rains!
Raise and preserve forest.
Forest supplies us clean air and good water
basic necessities of life.
Beware! Forest fires will destroy and deprive
you and me of our daily needs.

Do not tamper with Forest Wealth because you
waste your store of future fortune.
Raise vast forest on waste lands
One spoon forest honey a day will keep your
extra fleshaway!
Farmers! Forest brings you manure every season
ensure your regular supply by preserving them.

இது போன்ற வாசகங்கள் பட்டி தொட்டிகளிலும், சிற்றூர் பேரூர்களிலும் பரப்புதல் வேண்டும். இதற்கு அரசு மாவட்ட வாரியாகத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும்.

(8) காப்பு நிலங்களைக் காடுகளாக கூடிய சீக்கிரம் மாற்றியமைக்க வேண்டும். வனத்துறை சம்பந்தமான விவரங்களை ஸ்லைடு மூலமாக சினிமாத் திரையரங்களில் எல்லா நாட்களிலும், பொது மக்களுக்குத் திரையிட்டு காண்பிக்க வேண்டும். (தற்போது அக்டோபர் மாதம் மட்டும் காட்டப்படுகிறது)

(9) ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று (குடும்ப நலத்துறைபோல்) வனத்துறை சம்பந்தமான திரைப்படங்களைப் பொது மக்களுக்குத் திரையிட்டுக் காண்பித்து அதன் விவரங்களைத் தாள்களில் அச்சிட்டுப் பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

(10) வனத்துறையில் உள்ள அலுவலர்கள் மூலமோ (அல்லது) இதற்கெனத் தனிக்கலைக் குழுக்களை வைத்து வனத்தால் உண்டாகும் நன்மைகளையும் அவை அழிந்தால் உண்டாகும் தீமைகளையும், கதை வடிவமாக அமைத்து நாடகமாகவோ, வில்லுப் பாட்டாகவோ, மற்றும் இதர கலைநுணுக்க அம்சங்களுடன் கிராம மக்கள் கண்டு களிக்க வழி செய்ய வேண்டும்.

காடுகளில் வேட்டையாடும் அனுமதியை உடன் நிறுத்தி, மற்றும் அவைகள் நல்லமுறையில் பாதுகாக்கும் பொருட்டு 1882-ம் ஆண்டின் சட்ட திட்டங்களைச் சற்று மாற்றியமைத்து, குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க வகை செய்ய வேண்டும்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாடிய பாரதி அந்த உழவுக்கும் மூலதனமாகிய காட்டைப் பற்றி எண்ணி மனம் வருந்தி ஆங்கிலேய ஆட்சியினர் காடுகள் அழிப்பதை ''கட்டையில்லை எண்ணுபுட்டு காட்டையெல்லாம் அழித்துப்புட்டு கட்டாந்தரை ஆக்கிடாங்க அப்பவே'' என மனம் வருந்திப் பாடினார். நம் மூதாதையர்கள் கொடுத்த செல்வத்தை நாம் தற்போது அனுபவித்து வருகிறோம். அதே போன்று நம் சந்ததியினர் அனுபவிக்க காட்டின் வளத்தைப் பெருக்கியே தீர வேண்டும். ஆளுக்கு ஒரு மரம் வைத்தால்கூட நம் நாட்டிலே 55 கோடி மரங்கள் வளர வழியுண்டு. ஒவ்வொரு மரமும் மனிதனின் தொல்லைகள் இல்லை என்றால் பலகோடி மரங்களாக நம் பிற்காலச் சந்ததியினருக்குப் பெரும் செல்வமாக அமையும்.

தொழிற்சாலைகளாலும், அணு ஆயுத சோதனைகளாலும் விபரீத விளைவுகளைக் காற்று மண்டலத்தில் உண்டாகியதை உடனடியாகக் கவனிக்க வெளிநாட்டினர் விரைந்து பல நடவடிக்கை எடுக்க கையாளுகின்றனர். கடல் நீரிலும் பல களங்களை உண்டாக்கியதால் அழிந்து கொண்டிருக்கும் மீன் இனத்தின் மீட்சி வேலைக்காக முதலிடம் கொடுத்து ஆவன செய்கின்றனர். நாமும் நம் நாட்டில் வனங்கள் அழிந்துகொண்டிருப்பதையும், வன விலங்குகள் ஒழிந்து கொண்டிருப்பதையும், தடுத்து நிறுத்தி அவை தழைத்து ஓங்க உடனே செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு நாட்டிற்கும் மக்களுக்கும் எல்லா தேவைகளுக்கு அடித்தளமாக விளங்கி வரும் வனங்களையும், வன விலங்குகளையும் காத்து, நாமும் நலம் பல பெற்று நம்முடைய சந்ததியினரும் எல்லா நலமும் பெற்று வாழ அரசு வனத்துறை விளம்பரத் திட்டத்தை உடனடியாக மேற்கூறிய முறைகளில் விரிவாக்கி செயல்படுத்த ஆவனச் செய்ய வேண்டும்.

காடுகள் குறையக் குறைய மழை குறையும். காற்றின் அழுத்தம் மாறும். எந்த நன்மையைக் கருதிக் காட்டை மாற்ற முயற்சிக்கிருேமோ அந்த பலனே கிடைக்காமல் போகும். ''அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகும்'' என்னும் முதுமொழிபோல், ஓரளவுக்குத்தான் நமக்குத் தகுந்தாற்போல் இயற்கையை மாற்றலாம். முழுக்க முழுக்க மாறுதல் செய்தால் பிறகு மக்களா? அல்லது மரங்களா? என்ற பிரச்சினை எழுந்து விடும்.

மனிதனின் தேவைகள் அதிகமாகி திட்டமிடாமல் வனத்தை அழிக்கும்போது வன வளர்ச்சியே மாறிவிட்டது.

நாகரிகம் வளர, வளர, மக்கள் தொகை பெருகப் பெருக நாளடைவில் காட்டை மக்கள் அழிக்கத் தொடங்கி விட்டனர். அதிலுள்ள வன விலங்குகளையும் விளையாட்டுக்கு பொழுதுபோக்காக வேட்டையாடத் தொடங்கி பல விலங்குகளின் இனத்தை இருந்த இடம் தெரியாமல் செய்து விட்டனர்.

சுருக்கமாகச் சொன்னுல் மனிதன் நினைத்தது ஒன்று, நடந்தது வேறென்று. தினமும் ஒரு பொன் முட்டை இட்டு வந்த வாத்தின் வயிற்றைக் கீறின கதையாகப் போய் விட்டது. இன்று உணவில்லையே என்பதற்காக உழவன் ஒருவன் விதைப்பதற்காக வைத்திருந்த விதை நெல்லை சமைத்துச் சாப்பிட்டால் அவன் எங்கே பிறகு பயிரிடுவது ? நலமாக வாழ்வது தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றினுல் பயன் உண்டு! காட்டு நிலங்கள் பட்டா மூலம் பங்குபோட்டுக் கொண்டால் நாளடைவில் காடும் இருக்காது, விளை நிலங்களும் பெருகாது. அங்குள்ள நிலச்சொந்தக்காரர்கள் தங்களுடைய நிலத்தில் 1/10 பங்கையாவது காடுகளின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதைச் சட்டமாக்கியுள்ளனர்.

சென்ற உலக மகாயுத்தத்திற்குப் பிறகு நிர்மூலமாக்கப்பட்டு, கடந்த 30 வருடங்களில் மூன்றுவது வல்லரசாகத் தன்னை உயர்த்திக் கொண்டிருக்கும் ஜப்பானைப் பற்றி நாம் இங்கு மறக்கலாகாது.

ஒரு நாட்டின் நிலப்பரப்பில் 1/3 பாகம் காடுகள் இருக்க வேண்டும் என்பது நிபுணர்களின் கருத்து. ஆனுல் நம் நாட்டிலோ 22 சதவிகிதம் தான் உள்ளது. அதிலும் நம் தமிழ்நாட்டில் 16 சதவிகிதமே உள்ளது. இந்த 16 சதவிகிதத்தில் காட்டில் விளையும் மூலப்பொருட்களைக்கொண்டுரயான், பேப்பர், தீப்பெட்டி, அரக்கு, ரப்பர், பிளைவுட், படகுகள் செய்தல், ரயில் பெட்டி, தோல் பதனிடுதல், அத்தியாவசிய எண்ணெய்கள், விவசாய சாமான்கள், மற்றும் பாய், கூடைகள் செய்யவும், தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறிய யாவும் தமிழக அரசு திட்டமிட்டு செயல்படுவதாலேயே வனத்துறையினரால் இவ்வளவு தேவைகளையும் மிகச் சிறிய நிலப்பரப்பை வைத்துக் கொண்டு சமாளிக்க முடிகிறது. 16 சதவிகிதத்திலிருந்து 33 சதமாகிய நம்முடைய இலட்சிய இலக்கினை அடைய மக்களிடையே ஒரு நல்ல எழுச்சி வேண்டும். மக்களிடையே எழுச்சியை உண்டுபண்ணுவிட்டால் எந்த ஒரு திட்டமும் பலனளிக்காது. அதற்குத் தேவை வன விளம்பரத்திட்டம். நாள்தோறும் அந்த விழிப்பு உணர்விலேயே கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வெழிச்சியைப் பெற வனத்துறை அரசின் மூலம் கீழ்க்கண்ட வசதிகளை உடனடியாகப் பெற்றுச் செயல்பட வேண்டும்.

(1) தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட வன அலுவலகத்திலோ அல்லது வனத்திடையே இருக்கும் ஒரு சுற்றுலா பொழுதுபோக்கு போன்ற இடத்திலோ அம்மாவட்டத்தின் வனச் செல்வத்தினையும், வன விலங்குகளின் செல்வத்தினையும் பொது மக்களுக்குத் தெரியும்படி, பொது மக்களுக்கு விளங்கும் வண்ணம் படங்கள் மூலமும், மற்றும் பொருட்காட்சி மூலமாகவும் அந்தந்த மாவட்டத்தின் நிறை குறைகளை விளக்கலாம். குறைகளை நிவர்த்திக்க எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனையும் அதற்குப் பொது மக்களின் பணிகள் யாவை என்பதையும் நன்கு புரியும்படி சுட்டிக்காட்ட வேண்டும். அவ்விடத்திலே ஒரு சிறிய நூலகமும் இருத்தல் அவசியம்.

(2) ''புகைப்பிடித்தால் புற்று நோய் வரும்'' என்பதை அமெரிக்காவில் உற்பத்தியாகும் ஒவ்வொரு சிகரெட்டிலும் அச்சடிக்கச் சொல்லி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறு நாமும் வனங்களில் இருந்து கிடைக்கும் மூலப் பொருள்களினுல் கிடைக்கும் எல்லாப் பொருட்களின் மீதும் வனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்கிற விளம்பரம் இருக்க வழி செய்ய வேண்டும்.

(3) பள்ளிக்கூட பாடங்களிலும், கல்லூரிகளிலும், காட்டைப்பற்றிய கல்வியைக் கட்டாயப் பாடங்களாக்க வேண்டும்.

(4) காடுகளைச் சுற்றியுள்ள கிராமத்து மக்களுக்கு காடுகளைப்பேணும்அவசியத்தையும் காடுகளே இல்லாத கிராமத்து



தரம் மிகு சந்தனம்

சந்தன மணத்தின் வாசம் அந்தச் சாலை பக்கம் போவோரையெல்லாம் கவர்கிறது.

நாம் சாலை நோக்கி மேலும் போகாமல், சந்தன மணம் வரும் திசைக்கே செல்கிறோம்.

மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது என்பார்களே, அது இந்த நிறுவனத்திற்கு ரொம்பப் பொருத்தம்.

சேலம் மாவட்டம் மேட்டூரில் சிறிய அளவில் காட்சியளிக்கும் அந்த நிறுவனத்தின் பெயர்தான் : 'மேட்டூர் சந்தன மர எண்ணெய் நிறுவனம் (Mettur SandalWood Oil Company)

1938-லேயே மேலை நாடுகளுக்குச் சந்தன எண்ணெய்யை ஏற்றுமதி செய்த முதல் சிறுதொழில் நிறுவனம் என்ற பெருமையோடு விளங்குகிறது இது.

நறுமண வகைகளில் முக்கியப் பொருளாகத் திகழ்வது சந்தனம். விழாக் காலங்களில் குறிப்பாகத் திருமணத்தின் போது இதன் அருமையினை நாம் நன்கு அறிவோம்.

'அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது' என்றும், 'புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது' என்றும் சிறப்பித்துக் கூறப்படும் இந்தச் சந்தன மரத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா ?

சந்தனமரம் என்பது இந்தியாவில் வளரும் நிலைப்பசுமையான இலையுதிராச் சிறு மரம் ஆகும். இது சுமார் அறுபது முதல் நூறு ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடையும். அந்நிலையில் மரத்தின் வைரத்தின் அளவு சுமார் ஓர் அடி விட்டம் இருக்கும். ஆயிர அடிக்கும் மேற்பட்ட உயரத்தில், இருபதிலிருந்து முப்பது அங்குல மழை உள்ள இடங்களில் இதைத் தோட்டங்களில் வளர்க்கலாம். இது தரை மட்டத்திலிருந்து சுமார் 2,000 அடியிலிருந்து 3,000 அடி வரை வளரக் காணலாம். இது ஓர் அரை ஒட்டுண்ணி. இதன் வேர்கள் அருகிலுள்ள மரஞ்செடிகளின் வேர்களைப்பற்றி அவற்றிலிருந்து சில பொருள்களை உறிஞ்சிக்கொள்ளும்.

தென்னிந்தியாவில் மைசூர், குடகு, கோயம்புத்தூர், சேலம், வேலூர் ஆகிய பகுதிகளில் மட்டும் இது வளர்கிறது. பருமனைக்கொண்டு பார்த்தால் இதுவே இந்திய மரங்களில் விலையுயர்ந்தது எனலாம். இது நிறுத்து விற்கப்படுகிறது. போதிய அளவுள்ள வயிரத்தின் எல்லாப் பகுதிகளுமே பயன்படுகின்றன. அவற்றுள் வேர்களின் வயிரமே சிறந்தது.

சித்திர வேலைக்கு இம்மரம் மிக ஏற்றது. சிறு பெட்டிகள், கைத்தடிகள், பேனாக்கட்டைகள் போன்ற வேலைப்பாடமைந்த பல பொருள்கள் இதிலிருந்து செய்யப்படுகின்றன. இந்துக்களும், பௌத்தர்களும், பார்சிகளும் சந்தனக்

சந்தன மரக்கட்டைகள் துண்டுகளாக்கப்படுகின்றன.



சந்தன எண்ணெய் தயாரிக்க உதவும் கொதிகலன்.

கட்டையைச் சமயச் சடங்குகளில் பயன்படுத்துகின்றனர்.

இந்திய வாணிகத்தை மேனாட்டார் கைப்பற்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சந்தனம் முக்கியமான வாணிகப் பொருளாக இருந்தது. ஓர் ஆண்டிற்குச் சராசரியாக 1,400 டன் சந்தனக் கட்டை அரசு மூலம் ஏலம் விடப்படுகிறது. 1 டன்னின் சராசரி விலை ரூ. 53,000. தமிழ்நாடு அரசுதான் சந்தன மரக் கட்டைகளை அதிகமாக விற்பனை செய்கிறது என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

இதை நன்கு சுத்தப்படுத்தித் தரம் பிரித்துச் சத்தியமங்கலத்திலும், திருப்பத்தூரிலும் அரசு ஏலத்தில் விற்கிறது. அங்கிருந்து இது ஜெர்மனிக்கும், அமெரிக்காவிற்கும் அதிகமாக அனுப்பப்பெறுகிறது.

சந்தன எண்ணெய் வாசனைத் தொழிலிலும், சவர்க்காரத் தொழிலிலும், மருத்துவத்திலும் பயனாகிறது. சந்தனத் தூள் முகப்பவுடருக்கும், ஊதுவத்திக்கும் பயன்படுகிறது.

சந்தன எண்ணெய் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

இந்த நிறுவனத்தில் சந்தனக் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும், அவை சிறு சிறு துண்டுகளாக்கப்படுவதையும் பார்க்கிறோம். சிறு துண்டுகளாக்க இயந்திரமும் பயன்படுகிறது; இது இயங்காவிட்டால் இருக்கவே இருக்கிறது கைகள்!

சந்தன மரத் துண்டுகள் இன்னொரு இயந்திரத்தில் தூளாக்கப்படுகிறது. பிறகு சந்தனத்தூள், எண்ணெய் தயாரிக்கும் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. அங்கே உள்ள கொதிகலனில் ஏற்ற விகிதத்தில் நீர் ஊற்றிக் கொதிக்க வைக்கப்படுகிறது. கொதிகலனில் பொருத்தப்பட்டுள்ள குழலொன்று குளிர்ந்த நீரில் மூழ்க வைத்துள்ள ஒரு செப்புக் கலத்தில் விடப்படுகிறது. கொதிகலன் சூடேறும்போது எண்ணெய் பிரிந்து நீராவியோடு சென்று கலத்தை அடைகிறது. இது குளிர்ந்த பின் நீரின்மேல் மிதக்கும் எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது.



சந்தன எண்ணெய் தயாராகும் தொட்டிகள்.

நீரிலிருந்து சந்தன எண்ணெய் பிரித்தெடுக்கப் படுகிறது.



ஒரு கண்ணாடிக் குடுவையின் மூலம், நீரிலிருந்து சந்தன எண்ணெய் பிரித்தெடுப்பதைப் பார்க்கலாம். இந்த எண்ணெய் தரம் பிரித்த பிறகே தகர டப்பாக்களிலும், சிறிய பெரிய புட்டிகளிலும் நிரப்பப்படுகிறது.

நல்ல தரமான சந்தன எண்ணெய்யும், சந்தனத் தூளும் தமிழகம் தவிர இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுவதுடன், அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், ஐரோப்பா, ரஷ்யா, மத்திய தூரக் கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியச் சந்தனக் கட்டைகள் வளர்ச்சி சம்பந்தமான ஒரு குழுவொன்றும் செயலாற்றி வருகின்றது. அரசு சார்பில் இயங்கும் இந்தக் குழுவில் பிற மாநில அரசுகளின் சார்பில் உறுப்பினர்கள் உள்ளனர். இந்தக் குழுவில் இந்த நிறுவன உரிமையாளரும் ஒரு உறுப்பினர்.

தமிழ்நாட்டில் வளர்ந்த மரத்திலிருந்து தயாரிக்கப்பெற்ற இந்தச் சந்தன எண்ணெய், இன்று உலகினர் கரங்களிலெல்லாம் காட்சியளிக்கிறதென்றால், அதற்குக் காரணம் தமிழனின் கைவண்ணம் மட்டுமல்ல, தரமும்கூட!

— பி.வி.ஜி.

கேளுங்கள்? கொடுக்கப்படும்!

-ஆர்.எம்.

வினா : சாம்பல் சத்தால் பயிர்கள் அடையும் நன்மைகள் என்னென்ன? சாம்பல் சத்து மட்டுமே இட்டால் பயிருக்குப் போதுமா? பொட்டாஷ் இட வேண்டிய அளவுக்கு எத்தனை மடங்கு கூடுதலாகச் சாம்பல் இட வேண்டும்? எண்ணெய், கிழங்கு வகைப் பயிர்களுக்கு சாம்பல் சத்தை ஏன் அதிகமாகக் கொடுக்க வேண்டும்? 'பொட்டாஷ்' இட சிறந்த காலம் எது?

—அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
செங்குரிச்சி,
தென்னார்க்காடு மாவட்டம்

விடை : சாம்பல் சத்து இடுவதால் பின்கண்ட நன்மைகள் ஏற்படுகின்றன.

1. பயிர்களுக்கு அதிக வலிமை ஏற்படுகிறது.

2. நோய்களைத் தாங்கிக் கொள்ளும் தன்மை ஏற்படுகிறது.

3. தானியப் பயிர்களில் வலுவான வைக்கோல் அல்லது தட்டையை ஏற்படுத்திப் பயிர்கள் சாய்வதைத் தடுக்கிறது.

4. தானியம், மற்றும் விதைகளின் பருமனை அதிகப் படுத்துகிறது.

5. பழம், வேர்க்கடலை, கிழங்கு, கரும்பு ஆகியவற்றின் தரத்தை உயர்த்துகிறது.

6. புரதச் சத்து உற்பத்திச் செய்வதில் உதவுகிறது.

7. தாவரங்களில் நடைபெறும் இரசாயனப் பணிகளில் பங்கு கொள்கிறது.

8. தாவரங்களில் உற்பத்தியாகும் மாவுப் பொருள்களின் (கார்போ ஹைடிரேட்) தொகுப்பு, இடமாற்றம் ஆகியவைகளில் உதவுகிறது.

9. தழைச் சத்து, மணிச் சத்து ஆகியவற்றுடன் சேர்ந்து பயிர்களின் வளர்ச்சியில் உதவுகிறது.

சாம்பல் சத்தை மட்டும் இட்டால், பயிருக்குப் போதாது!

சாம்பலில் கீழ்க்கண்ட அளவுச் சத்துக்கள் உள்ளன :

	மணிச் சத்து (சதவீதம்)	சாம்பல் சத்து (சதவீதம்)
மரச்சாம்பல்	1.68	5.80
கரும்புச் சாம்பல்	0.84	2.58
நெல் உமிச் சாம்பல்	0.16	0.26
பருத்திமாரு சாம்பல்	1.77	9.35

பொதுவாகவே, சாம்பலில் தழைச் சத்து இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்!

பொட்டாஷ் உரம் இடுவதற்குப் பதில், மரச் சாம்பல் இடுவதாகக் கொள்ளவும். மரச்சாம்பலில் 5.80 சதவீதம் சாம்பல் சத்து உள்ளதால், 100 கிலோ மரச் சாம்பலில் 5.8 கிலோ சாம்பல் சத்து உள்ளது.

எனவே, 1 கிலோ சாம்பல் சத்து கிடைக்க 17.24 கிலோ (100/5.80) மரச் சாம்பல் இட வேண்டும்.

'மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்' உரத்தில் 58 முதல் 60 அல்லது 62 சதம் வரை சாம்பல் சத்து உள்ளதால், 1 கிலோ சாம்பல் சத்து கிடைக்க, 1.66 கிலோ 'மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்' பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, 1 கிலோ சாம்பல் சத்து கிடைக்க, 1.66 கிலோ 'மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்' அல்லது 17.24 கிலோ மரச் சாம்பல் இட வேண்டும் என்பது தெளிவாகிறது. இந்த அடிப்படையில் கணக்கிட்டால் 'மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்' இட வேண்டிய அளவைப்போல் 10.38 மடங்கு (17.24/1.66) மரச் சாம்பல் இட வேண்டும் என்பது புலனாகிறது. அதாவது 1 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் இடுவதற்குப் பதிலாக, 10.38 கிலோ (அல்லது 10.5 கிலோ) மரச் சாம்பல் இட வேண்டும். ஆகவே, 'பொட்டாஷ்' இட வேண்டிய அளவுக்கு 10.5 மடங்குக் கூடுதலாக மரச் சாம்பல் இட வேண்டும். இது போலவே மற்ற வகைச் சாம்பலுக்கும் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

நிலக்கடலை மற்றும் கிழங்கு வகைப் பயிர்கள் உணவை வேர்களில் சேமித்து வைப்பதால், வேரின் வளர்ச்சிக்கு உதவும் சாம்பல் சத்தை அதிகமாக இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. மேலும், நிலக்கடலை, கிழங்குகள் ஆகியவற்றின் தரத்தையும் சாம்பல் சத்து உயர்த்துவதால், அவ்வகைப் பயிர்களுக்கு அதிக சாம்பல் சத்து இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

'பொட்டாஷ்' உரத்தைப் பொதுவாக அடியுரமாகவே இடும்படி கூறப்படுகிறது. ஆனால் அண்மைக் காலத்தில் 'பொட்டாஷ்' உரத்தையும் தண்ணீரில் கரைத்து, நெற்பயிரின் தோகைகளில் தெளிக்கலாம் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஆயினும், இம்முறை இன்னும் பரிசோதனை நிலையில் இருப்பதால், 'பொட்டாஷ்' உரத்தை அடியுரமாக

இடுவதே சிறந்தது. மரவள்ளிக்கிழங்கு, கரும்பு, திராட்சை, தென்னை ஆகியவைகளுக்கு பொட்டாஷ் உரத்தை மேலுரமாகவும் இடலாம்.

வினா: ''ஆடுதுறை-31'' ரக நெல்லை, கார் பிசானம் பருவங்களில் பயிர் செய்யலாமா? எத்தனை மாதப் பயிர்? மகசூல் எவ்வளவு கிடைக்கும்? சாகுபடி முறை என்ன?

—பி. அப்துல் ரஹ்மான்,
களக்காடு,
நெல்லை மாவட்டம்.

விடை: 'ஆடுதுறை-31' ரக நெல்லை, கார்பட்டத்திலும், நவரைப் பட்டத்திலும் பயிரிடலாம்; ஆனால் பிசானம் பட்டத்திற்கு ஏற்றதல்ல! இந்த ரகத்தின் வயது 100 முதல் 105 நாட்களாகும். இது ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 கிலோ மகசூல் தரவல்லது.

ஒரு ஏக்கர் நடவு செய்ய 24 கிலோ விதையை, 12 சென்ட் நாற்றங்காலில் விதைத்து நாற்று விடவேண்டும். விதைப்பதற்கு முன்பே, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பிளிட் 406' அல்லது 'அக்ரசான்' வீதம் கலந்து வைத்திருந்து விதைக்க வேண்டும்.

'ஆடுதுறை-31' நெல் ரகத்திற்குப் பின்கண்ட அளவில் அடியுரம் இட வேண்டும்.

அடியுரம் (ஏக்கருக்கு)

பசுந்தழை—2,300 கிலோ
தழைச்சத்து—15 கிலோ
மணிச்சத்து—15 கிலோ
சாம்பல்சத்து—15 கிலோ

நாற்றுகளை 20 முதல் 25 நாட்களில் பறித்து நடவு செய்ய வேண்டும்.

நாற்றுகளை 15 × 10 சென்டிமீட்டர் இடைவெளியில் நட வேண்டும். ஒவ்வொரு தூரிலும் 2 அல்லது 3 நாற்றுகள் வைத்து நடுவது சிறந்தது.

மேலுரம்

நடவு செய்த 25 முதல் 30 நாட்களில், ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட வேண்டும்.

உயர் விளைச்சல் ரகங்களுக்கு பரிந்துரைக்கப்படும்முறையில், 'ஆடுதுறை—31' ரகத்திற்கும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

வினா: நான் 23.1.75 அன்று வானொலி விவசாய நிகழ்ச்சியைக் கடைசியில்தான் கேட்டேன். ''பண்ணை ஆலோசனைக் குழு'' வைப் பற்றி கூறினார்கள். அதுபற்றிய முழுவிவரமும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

காஞ்சி வாழை ரகம் பற்றியும், ஆடுதுறையில் உள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்தின் முகவரியையும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

—இரா. குணசேகரன்,
மேலபாலையூர்,
விருத்தாசலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை: உழவர் பெருமக்களுக்கு ஏற்படும் வேளாண்மைத் தொடர்புடைய பிரச்சனைகளை வேளாண்மைத்துறை அலுவலர்கள் அவ்வப்பொழுது தீர்த்து வருகிறார்கள். அவ்வலுவலர்களால் தீர்க்க முடியாத சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், ''பண்ணை ஆலோசனைக் குழு'' அமைத்துள்ளது.

தற்பொழுது கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பண்ணை ஆலோசனைக் குழுவும், மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் ஒரு பண்ணை ஆலோசனைக் குழுவும் செயலாற்றி வருகின்றன. இதுபற்றிய முழுவிவரமும் 16-1-74 தேதிய 'தமிழரசு' இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நீங்கள் ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சனையைப் பண்ணை ஆலோசனைக் குழுவுக்கு அனுப்ப நினைத்தால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி), உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் ஆகியோரின் மூலமாக பின்கண்ட முகவரிக்கு எழுதவும்.

''துணை வேளாண்மை
இயக்குநர்,
உழவர் பயிற்சி நிலையம்,
கோயம்புத்தூர்-3''

பண்ணை ஆலோசனைக் குழுவின் செயலாளராக உள்ள **துணைவேளாண்மை இயக்குநர்**, பண்ணை ஆலோசனைக் குழு வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து - தேவையானால் பிரச்சனைக்குரிய இடத்திற்கு நேரில் வந்துப் பார்த்து-தீர்வு காண ஆவன செய்வார்.

இத்தகைய பண்ணை ஆலோசனைக் குழுக்களை மேலும் சில இடங்களில் அமைக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளது.

''காஞ்சி'' வாழை, மொந்தன் வாழையைவிட மிகவும் சிறந்தது. இது, நாட்டு மொந்தன் ரகத்தைவிட அதிக மகசூல் தருவதுடன், சமையலுக்கு உகந்த சிறந்த வாழைக் காய்களைத் தரவல்லது.



''காஞ்சி'' வாழையின் சிறப்புகள்

1. 'காஞ்சி' வாழை, மொந்தன் வாழையைப் போல் ஏறக்குறைய 2 மடங்கு மகசூல் தரக்கூடியது. இதன் காய்களின் பருமனும், எண்ணிக்கையும் அதிகம்.

2. ''காஞ்சி'' வாழைக் காய், மொந்தன் வாழைக் காயைவிட சமையலுக்கு மிகவும் உகந்தது. ''காஞ்சி'' வாழைக்காய்களைச் சமைத்

தால் உருளைக்கிழங்கைப் போல் மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கும். மொந்தன் வாழைக்காய்களை நறுக்கும்போது கருத்துவிடும். ஆனால் ''காஞ்சி'' வாழைக் காய்களை நறுக்கும்போது கருக்காது.

3. ''காஞ்சி'' வாழை மரம், மொந்தன் வாழைமரத்தைவிட குட்டையானது; பருமன் அதிகமுள்ளது. காற்றினால் ஒடிந்து விடாமலிருக்க, இக்குணங்கள் சாதகமாக உள்ளன.

4. ''காஞ்சி'' வாழை, மொந்தன் ரகத்தைவிட 15 முதல் 20 நாட்கள் முன்னதாக தார்விட்டு அறுவடைக்கு வருகிறது.

எல்லா வகையிலும் மொந்தன் வாழை ரகத்தைவிடச் சிறந்து விளங்கும் ''காஞ்சி'' வாழையைப் பயிரிட்டு, உழவர்கள் அதிக மகசூலும், மிகுந்த வருவாயும் அடையலாம்.

ஆடுதுறையில் உள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ள கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

பயிர் நிபுணர் (வாழை),
வாழை ஆராய்ச்சி நிலையம்,
ஆடுதுறை (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

வினா: 16-12-74 தேதிய ''தமிழரசு'' இதழில் ''சவ்வரிசிக் கிழங்கு'' சாகுபடி செய்வது பற்றி விரிவாகவும், தெளிவாகவும் எழுதியுள்ளீர்கள். அதற்காக எங்கள் இளைஞர் முன்னேற்ற விவசாயிகளின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சவ்வரிசி கிழங்கு பயிரிடுவதற்குத் தேவையான கரணைகள் கிடைக்கும் இடத்தின் முகவரியைத் தெரிவிக்கவும். ஐ. ஆர். 20 நெல் பயிரிட்டுள்ளேன். அதில் குலைப்புழு விழுகின்றது. அதைத் தடுக்க என்ன மருந்து, எந்த அளவில் தெளிக்க வேண்டும்? கரும்பில் குருத்துப்புழு அதிகமாக விழுந்து பயிரை நாசமாக்குகிறது. அதற்கு என்ன செய்ய வேண்டும்?

—க. குமாரசாமி,
கிட்டாம்பாளையம்,
கோவை மாவட்டம்.


நெல் குருத்துப் புழு

விடை: சவ்வரிசி கிழங்கு சாகுபடியை எல்லா மாவட்டங்களிலும் பரப்பிட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை 'எச். 97', 'எச். 165', 'எச். 226', 'எம். 4' என்ற உயர் விளைச்சல் தரும் வீரிய ரகங்களின் கரணைகளை வழங்கி வருகிறது. உங்களுக்கு இத்தகைய ரகங்களின் கரணைகள் தேவை எனில், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள். அவர், மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களின் மூலம் உங்களுக்குத் தேவையான ரகங்களின் கரணைகளை வரவழைத்து வழங்கிடுவார். அல்லது நீங்களே நேரடியாக கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்தும் கரணைகளை வாங்கி நடவு செய்ய முயற்சிக்கலாம்.

தாங்கள், 'ஐ.ஆர். 20' நெல்லில் குலைப்புழு தாக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள். குருத்துப் பூச்சியைத்தான் தாங்கள் அவ்வாறு குறிப்பிட்டுள்ளீர்கள் எனக்கருதி பின்கண்டவாறு தடுப்பு முறைகளை மேற்கொள்ளும்படி பரிந்துரைக்கின்றோம்.

தடுப்பு முறைகள்

'பாரத்தியான்'-200 மி.லி.
அல்லது
'என்டோசல்பான்'-300 மி.லி.
அல்லது
'என்டரின்' -400 மி.லி.
அல்லது
'டைமிதோயேட்'-200 மி.லி.
அல்லது
'பெனிட்ரோதாயான்'-250
அல்லது [மி.லி.



'பாஸ்பாமிடான்'-110 மி.லி.
அல்லது
'டைகுரோட்டோபாஸ்'- 400
அல்லது மி.லி.
'பென்தியான்' -225 மி.லி.

மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில், நடவு செய்த 21-வது, 42-வது 63-வது நாட்களில் தெளித்துக் குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

அல்லது

நடவு செய்த 15-வது, 45-வது நாட்களில் வயலில்உள்ள தண்ணீரை வடித்துவிட்டு, ஒரு ஏக்கரில், பின்கண்ட குருணை மருந்துகளைத் தூவிய பிறகு 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) உயரத்திற்குத் தண்ணீரைத் தேக்கி, 3 நாட்கள்வரை தண்ணீரை வடிக்காமல் நிறுத்தி வைக்க வேண்டும்.

'லிண்டேன்' 5 சதக் குருணை
—10 கிலோ

அல்லது

'என்ட்ரின்' 2 சதக் குருணை
—25 கிலோ

அல்லது

'செவிடால்' 4:4 குருணை
—10 கிலோ

அல்லது

'டயசினான்' 10 சதக் குருணை
—5 கிலோ

மேற்கூறிய முறையில் செய்தால் குருத்துப் புழுவின் தாக்குதலிலிருந்து நெற் பயிரைக் காத்திட இயலும்.

• கரும்பில் தோன்றும் குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த 16.1.1975 தேதிய ''தமிழரசு'' —உழவர் சிறப்பிதழில் பக்கம் 35-ல் குறிப்பிட்டவாறு பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவும். *



பூம்புகாருக்குப் பொலிவூட்டிப் புது வாழ்வு படைப்போம்!

முதல்வர் கலைஞர் -உரை-

கடந்த இருபதாண்டுகளுக்கு முன்பு நானும், நண்பர்களும் சிலப்பதிகாரத்தில் படித்து மகிழ்ந்த காவிரிப்பூம் பட்டினம் எவ்வாறு இருக்கிறது என்பதை நேரில் காண வந்தோம். வந்த நேரத்தில் மீனவர்களுடைய குடிசைகள் சிலவற்றையும், கடற்கரையோரத்தில் பாழாகிக் கொண்டிருந்த ஒரு அம்மன் கோவிலையும் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அதைத் தவிர இங்கே கரிகால் சோழன் ஆண்டான்; இது சோழ மண்டலத்தின் தலை நகரங்களில் ஒன்றாக இருந்தது; அவன் உருவாக்கிய எழில்நிறை மாடங்கள், அவன் அமைத்திருந்த எழில் மிகுந்த வீதிகள், நாளங்காடிகள், பூதச் சதுக்கங்கள், அருகன் கோட்டங்கள், பாவை மன்றங்கள், வடபுலத்து அரசர்களை வென்று அவன் இங்கே கொண்டு வந்த பரிசுப் பொருள்களான தோரண வாயில், பட்டிமன்றம், முத்துப்பந்தர், இப்படிப்பட்ட இவைகள் எல்லாம் ஏட்டில்தான் இருந்தன; இங்கே இருந்ததற்கான அடையாளம் எவையும் இல்லை என்பதைக் கண்டு, மனப்புழுக்கத்தோடு அன்று நான் திரும்பினேன்.

அன்றைய தினம் மீண்டும் ஒருமுறை சிலப்பதிகாரக் காலத்தினுடைய பூம்புகாரை உருவாக்க இயலாதா என்கிற ஏக்கம் என் வாலிப உள்ளத்தில் பெருக்கெடுத்தது. ஆனால் அப்போதெல்லாம் நான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வருவேன் என்றும், நானே என்னுடைய ஏக்கத்தைப் போக்கி மீண்டுமொரு பூம்புகாரை இங்கே உருவாக்குவேன் என்றும் எண்ணியது கிடையாது.

இங்கே மன்னை அவர்களும், அன்பில் அவர்களும் வழக்கம் போல் போட்டி போட்டுக் கொண்டார்கள். இது தஞ்சாவூருக்கே உடைய தனித்த சிறப்பு என்று மன்னை அவர்களும், இல்லையில்லை, பாஞ்சாலங்குறிச்சியிலே கட்ட பொம்மன் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது என்று அன்பில் அவர்களும் சொன்னார்கள். ஆனால் அன்பிலின் வாதம் கொஞ்சம் சோடையாகப் போனது. ஏனென்றால் அவர் எடுத்தாள்வதற்கு வாதம் இருந்தாலும், நேரம் இல்லாததால் எடுத்தாளவில்லை என்று கருதுகிறேன்.

தஞ்சாவூரிலே பூம்புகார் இருந்தால்-கட்ட பொம்மன் கோட்டை திருச்சியிலே இருக்

கிறது என்று அன்பில் வாதிட்டால் அது நியாயம். திருநெல்வேலியில் இருக்கிற கட்டபொம்மன் கோட்டைக்காக அன்பில் வாதாடியது அவ்வளவு பொருத்தமல்ல. அவர் ஒன்றைச் சொல்லியிருக்க வேண்டும். அதாவது காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட சோழன் திருச்சியில் உள்ள உறையூரையும் தலைநகராகக் கொண்டிருந்தான்; அதையும் புதுப்பிக்க, தமிழக முதல்வர் வர வேண்டும் என்று அவர் கூறியிருந்தால் அவருடைய வாதம் பொருள் உள்ளதாக இருந்திருக்கும்.

பட்டினப் பாலை பாடிய புலவர் இந்தக் காவிரிப்பூம்பட்டினம் எப்படியெல்லாம் இருந்தது என்பதை ஒரு பாட்டின் மூலம் வருணிக்கிறார்.

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்.....''

என்றெல்லாம் இந்தத் துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதியான— இறக்குமதியான பொருள்கள் இவைகளைப்பற்றி எல்லாம் குறிப்பிடுகிறார். ஈழத்திலிருந்து இங்கு உணவு தானியங்கள் வந்தன; காழகத்திலிருந்து ஆக்கப் பொருள்கள் வந்தன என்று குறிப்பிடுகிறார்.

காழகம்தான் கொஞ்சம் கொஞ்சமாக மாறி 'கெடா' என்ற ஊராகத் திரிந்திருக்கிறது. காழகம், கடாரமாக மாறியிருந்த காலத்தில்தான் சோழ மன்னர்கள் அங்கே நாவாய்கள் மூலமாகப் படையெடுத்துச் சென்று, அதை வென்று, கடாரம் கொண்டான் என்ற சிறப்புப் பெயரைப் பெற்று, அந்தப் பெயரைப் பெற்றதின் அடையாளமாகத் திருவாரூருக்கு அருகே ஒரு கடாரம் கொண்டான் என்ற ஊரும், காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகே கடாரம் கொண்டான் என்ற ஒரு சிற்றூரும் விளங்குகின்ற காட்சியைப் பார்க்கிறோம்.

இந்தப் பூம்புகார்த் துறைமுகத்தில் ஏராளமான கப்பல்கள் வந்து நிற்கும்; வெளிநாட்டுப் பொருள்கள் எல்லாம் வந்து இறங்கும்; தமிழ்நாட்டுப் பொருள்கள் எல்லாம் ஏற்றுமதியாகும் என்ற வரலாற்றுச் சிறப்புகள் எல்லாம் கடலால் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன.

நான் இங்கே வந்தபோது, சில வயதானவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள், ''இங்கிருந்து பத்துக்கல்தொலைவில் கடலுக்குள் பெரிய மாளிகைகள், அரண்மனைகள் எல்லாம் இருக்கின்றன; மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது சில நேரங்களில் அவைகள் எங்களுடைய கட்டு மரங்களில், படகுகளில் தட்டுப்படுவதுண்டு'' என்கிற செய்திகளை எல்லாம் சொன்னார்கள். நான் அவர்கள் சொன்ன தொலையை நோக்கி, என் கண்களை விரித்துப் பார்த்த நேரத்தில், கண்ணீர் என்னுடைய கண்களுக்குத் திரையாகி, அந்தத் தொலை தூரத்தைப் பார்க்க முடியாத அளவிற்குச் செய்ததே தவிர, அந்த ஏக்கம் என்றைக்காவது ஒரு நாள் இப்படிப்பட்ட ஆக்கப்பூர்வமான வேலையாக உருவெடுக்க முடியுமென்று நான் கருதவில்லை. இன்று தமிழ்நாட்டு மக்களுடைய ஒத்துழைப்பினால் அந்தக் காரியங்கள் இங்கே செய்யப்படுகின்றன.

பூம்புகாரில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிற கலைக்கூடம், இப்போது கட்டப்பட்டு வருகிற கலைக்கூடம், இலஞ்சி மன்றம், இன்னும் கட்டப்படவிருக்கிற கோட்டங்கள், இங்கே அமைக்கவிருக்கிற ஒலி - ஒளி அமைப்பு அனைத்தும் சேர்ந்தால்கூட ஏறத்தாழ நாற்பது இலட்சம் ரூபாய்தான் செலவாகும். ஆனால் சிலர் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தைக் கருணாநிதி கோடி கோடியாகக் கொண்டுபோய்ப் பூம்புகாரில் கொட்டிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கொட்டப்படுவது கோடிக்கணக்கான ரூபாய் அல்ல; எல்லா வேலைகளும் முடிவுற்றால், எல்லாவற்றிற்கும் சேர்த்து ஆகிற செலவு நாற்பது இலட்சம் ரூபாய்தான்.

மீனவக் குடிசையில் இருக்கிற நண்பர்கள் கூட, வானளாவக் கட்டப்பட்டிருக்கிற கலைக்கூடத்தைப் பார்த்து, மற்றவைகளைப் பார்த்து, இவ்வளவு கட்டுகிறார்களே என்று எண்ணிடக் கூடும். அல்லது இலக்கிய வாசனை அறியாதவர்கள், கலை நுணுக்கம் புரியாதவர்கள், வரலாற்றுச் சிறப்புகளைப் பற்றிக் கவலைப் படாதவர்கள், தமிழாவது ஒன்றாவது என்று ஏகடியம் செய்கிறவர்கள், ஏழையெளிய மீனவ மக்களைத் தூண்டி விட்டு, ''இங்கே இவ்வளவு பெரிய கோட்டை கொத்தளங்களைக் கட்டுகிறார்களே, உங்களுக்கு இந்த வீடு தானா'' என்று கேட்கக்கூடும்.

இங்கே கட்டப்படுகிற ஐநூறு வீடுகளுக்கும் ஆகப்போகிற மொத்தச் செலவு முப்பத்தி ஐந்து இலட்சம் ரூபாய் ஆகும். ஆக ஐந்து இலட்சம் ரூபாய்தான் வித்தியாசமாகும்.

வாணகிரியில் இருக்கிற மீனவர்கள், இங்கே மாத்திரம் வீடுகள் கட்டிக் கொடுத்தால் போதுமா? எங்களுக்கு இல்லையா? என்று இன்றைக்கு என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். அவர்களும் பூம்புகாரை ஒட்டியிருக்கின்ற காரணத்தால் அவர்களையும் மறந்துவிட முடியாது; அங்கேயும் கட்டித்தான் தீர வேண்டும்.

இங்கே மீனவர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற ஒரு வீட்டின் மதிப்பு ரூபாய் ஏழாயிரம் ஆகும்; இந்த வீடுகளை அவர்களே சொந்தமாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தர வேண்டிய தொகை இருபதாண்டு கால தவணையாக வசூலித்தால் மாதம் ஒன்றுக்கு 52 ரூபாய் கொடுக்க வேண்டும்; இருபத்தைந்து ஆண்டு காலத் தவணை என்றால் மாதம் ஒன்றுக்கு நாற்பத்தேழு ரூபாய் என்றும், முப்பதாண்டுகாலத் தவணை என்றால் மாதம் நாற்பத்து நான்கு ரூபாய் என்றும் கொடுக்க வேண்டும். இந்தத் தொகையைத் தர வேண்டுமென்று கேட்டால், ''உன்னை யாரப்பா, வீடு கேட்டது; நாங்கள் குடிசையில் இருக்க மாட்டோமா?'' என்று கூறுவார்கள்.

அவர்கள் மாதத்திற்குத் தர வேண்டிய 44 ரூபாய் தவணையில், அரசு பாதி, அவர்கள் பாதி என்ற வகையில், அரசு பாதித் தொகையான 22 ரூபாயை மானியமாகக் கொடுத்து விடுவதென்றும், மீதமுள்ள 22 ரூபாயை மாதந்தோறும் மீனவ மக்கள் கொடுத்து விட்டு 25 ஆண்டுகளுக்குப் பிறகு வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்வது என்றும் ஒப்புதல் அளித்து நானும் ஆணை பிறப்பித்து விட்டேன்.

ஆனால் இங்கே வந்த பிறகு தங்கும் விடுதியில் இருந்தபோது, அந்த விடுதி அண்ணா

வின் பெயரைக் கொண்ட காரணத்தால், இந்த 22 ரூபாயை மீனவ மக்களால் கொடுக்க முடியுமா என்று எனக்கு நானே-மீனவப் பெருங்குடி மக்கள் யாரும் கோரிக்கை வைக்காமலேயே, நானே எண்ணிப் பார்த்தேன். பிறகு அமைச்சர் ராசாராம், மாவட்ட ஆட்சித் தலைவர், சட்ட மன்ற உறுப்பினர், வீட்டுவசதி வாரியத் தலைவர், ஆகியோரைக் கலந்து பேசி, அவர்கள் கட்ட வேண்டிய மொத்தத் தொகையில் 75 சதவிகிதத்தை அரசு மானியமாகக் கொடுத்து விடுவது என்றும், மீதமுள்ள 25 சதவிகிதத்தை நீங்கள் - அதாவது மாதத்திற்குப் பன்னிரண்டு ரூபாய் கொடுத்தால் போதும்; 25 ஆண்டுகளில் வீடுகள் உங்களுக்குச் சொந்தமாகும்

தமிழகத்தில் இருக்கிற கடற்கரை யோரங்களில் உள்ள எல்லா மீனவர்களுக்கும் இது போன்ற வீடுகளைக் கட்டித்தருகிற பணியை வீட்டு வசதிவாரியம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற திட்டத்தை நான் அவர்களோடு கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறேன்.

அண்ணா வழியில் அயராது உழைக்கின்ற இந்த அரசு, மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு ஆற்றி வருகின்ற பணிகளில் ஒரு கட்டம்தான் இங்கே கட்டி முடிக்கப்பட்டிருக்கிற 132 மீனவர்களுக்கான வீடுகள். மீதமுள்ள வீடுகளையும், விரைவில் கட்டி முடிக்க வேண்டுமென்று அந்தத் துறையின் அமைச்சரையும், வாரியத்தின் தலைவரையும் பொறியாளர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். முதலமைச்சர் என்ற முறையில் அதிகாரிகளுக்கு ஆணையிடுவதுதான் முறை என்றாலும், செய்ய வேண்டிய பணிகள் ஏழைகளுக்காக இருப்பதால், நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

சித்திரா பௌர்ணமி அன்று சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு நடந்ததைப் போல விழா நடைபெறவிருக்கின்றது. அந்தக் கட்டிடங்கள் எல்லாம் திறக்கப்படும்போது, மீனவர்களுக்கான ஐநூறு வீடுகளில் மீதமுள்ள வீடுகளும் திறக்கப்படுவதற்கான முயற்சிகளை அதற்கான அதிகாரிகள் எல்லாம் செய்ய வேண்டும். வாணகிரியில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா அப்போது நடைபெற்றாக வேண்டும்.

பூம்புகார்க் கலைக்கூடத்தைக் காண கடந்த 22 மாதங்களில் ஏறத்தாழ வந்திருக்கிற மக்கள் தொகை நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் பேராகும். ஒவ்வொருவருக்கும் பத்து பைசா கட்டணம் வீதம் வசூலித்ததில் 45,300 ரூபாய் இதுவரை கிடைத்திருக்கிறது. ஒரு நாளைக்குச் சராசரி 800 பேரிலிருந்து ஆயிரம் பேர் வரை இந்தக் கலைக்கூடத்தைக் காண்கிறார்கள். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை பத்தாயிரம் பேர் என்கிற அளவிற்கு ஆகி, எதிர்காலத்தில் நன்றி உள்ளவர்கள் இருந்தால், நம்மையெல்லாம் நினைத்துப் பார்ப்பார்கள்.

இந்தக் கடற்கரையில் கட்டப்படுகிற இந்தக் கலைக்கோயில்களைப் பாதுகாக்கவும், கடல் உள்ளே நுழையாமல் தடுக்கவும், பெரிய கருங்கற்களைக் கொண்டு வந்து கடற்கரையில் போட்டுத் தடுப்பதற்குச் சில இலட்சம் ரூபாய்கள் செலவானாலும் பரவாயில்லை. இந்தக் கட்டிடங்களும், மீனவக் குடும்பங்களும் காப்பாற்றப்பெற வேண்டும் என்ற வகையில் அதற்கான ஏற்பாடுகளை செய்யவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் உங்களுக்குத் தெவித்துக் கொள்கிறேன்.

[பூம்புகாரில் கடந்த 5.2.75 அன்று மீனவர்களுக்காக கட்டப்பட்ட இல்லங்களை திறந்து வைத்து முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து.]

அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்

"அமராவதி"

கூட்டுறவு சிறப்பு அங்காடியின் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

தரமான மளிகைப் பொருள்கள், கண்கவர் ஜவுளி வகைகள், எழுது பொருள்கள் மற்றும் உங்கள் தேவை எதுவாயினும் அவற்றை ஒரே இடத்தில், ஒரே சமயத்தில், மலிவான விலையில் வாங்கச் சிறந்த இடம்

அமராவதி கூட்டுறவு சிறப்பு அங்காடி

(திருச்சி மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கத்தின் அங்கம்)

ஜவஹர் பஜார், கரூர். + திருச்சி ரோடு, மணப்பறை.

பாரத் மிகுமின் ஆலை—டவுன்ஷிப் மற்றும் சிறந்த அச்சு வேலைகளுக்கு—சங்கத்தின்

ராக்—கோ—அச்சகம், திருச்சி-2

உங்கள்
எதிர்காலத்திற்கு
ஓர்
நற்செய்தி

TNSC
BANK

எப்பொழுதும் இல்லாத அதிகப்படியான வட்டி இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

ரூ 100/-ம், அதற்கு மேலும்	வட்டி விகிதம் வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.50%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.00%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.00%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக	8.00%
3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.00%
5 வருடங்களுக்கு மேல்	10.00%

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

379, நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் ரோடு, சென்னை-600001
தந்தி அர்பாங்க் தொலைபேசி 20367 டெலக்ஸ் 7225

என.எல். ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர்.
குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்
ஆர். கனகசபை, தலைவர்.

வறட்சி நிலையிலும் மாம்பழ மகசூல் பெருக்கிடலாம்!

எஸ்.எஸ்.நாகராஜன். M.Sc,
டாஃபே விவசாய நிபுணர்.

மரங்களில் சந்தனம், இசைகளில் கர்னாடகம், நூல்களில் திருக்குறள் என்பதுபோல், கனிகளில் சிறப்பிடம் பெறுவது மாம்பழந்தான்! பறவைகளில் தேசியப்பறவை மயில்! அதுபோல், கனிகளில் தேசியக் கனி ஆகத் தகுதி உடையது மாம்பழம்! முக்கனிகளில் முதலிடம் பெறுவது எது? ''மா-பலா-வாழை'' வரிசையிலும், ''மாவே'' முதலிடம் பெறுகிறது. மாம்பழத்தின் ''ருசி'' அலாதி! மணமும் அப்படியே! மாம்பழத்தின் மணம் இலக்கிய உலகிலும் வீசுகிறது! புராணங்களிலும், மாம்பழ மகாத்மியம் பேசப் படாமல் இல்லை! தமிழ்நாட்டு புலவர் ஒருவரின் பெயரே 'மாம்பழக் கவிராயர்' என்று இருந்துள்ளது ! அண்மைக் காலத்தில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஏற்றுமதிப் பொருளாகவும் மாம்பழம் உயர்ந்துள்ளது! ஆதலின் ருசியில், இலக்கியத்தில், புராணத்தில், ஏற்றுமதியில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள 'மாவை', மாபெரும் 'மா' என்று கூறினால் அது மிகையாகாது! மாவைப்பற்றி, புகழ்ந்து பேசவோ, அல்லது எழுதவோ நாம் சளைக்கமாட்டோம். ஆனால் சிறந்த பழங்களைக் கொடுக்கும் மாமரங்களை நாம் சரியாக பராமரிக்கிறோமா என்றால், அதுதான் இல்லை! தற்போது மாமரங்கள் பூக்கும் தருவாயில் உள்ளன. கூடிய சீக்கிரம் காய்கள் பிடிக்கும். 'காய்த்த மரம்தான் கல்லடி படும்!'' என்பதுபோல் இந்த மாபெரும் மாமரங்கள் சிறுவர்களால் கல்லடிபடுவதுடன், பூச்சிகளாலும், நோய்களாலும் மிகவும் கடுமையாகத் தாக்கப்படுகின்றன.

மாமரங்களின் தற்போதைய நிலை

குறிப்பாகத் தமிழ்நாட்டின் கிராமங்களில் அமைந்துள்ள மாந்தோட்டங்கள் சீராகக் கவனிக்கப்படவில்லை. ஆதலால் மாமரங்கள் கவையாகி, கொம்பாகி நிற்கின்றன! மேலும்,

மாந்தோப்புகளில் உள்ள மா மரங்களைச் சுற்றியும், மாமரங்களுக்கிடையிலும், புற்கள், முட்புதர்கள் வளர்ந்து மாம்பழ மகசூலைப் பாதித்து வருகின்றன! சீராகப் பராமரிக்கப்படாத தோட்டங்களில் உள்ள மாமரங்களில் இருந்து பூக்கள் கொட்டிவிடுவதும், இலை, பூக்கள் ஆகியவை கருமையான நிறம் அடைவதும் நாம் காணும் காட்சியாக உள்ளது.

இந்தியாவின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய-கோடானு கோடி மக்களுக்கு மகிழ்ச்சித் தரக்கூடிய-பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய மாமரங்கள், கவனிப்பாரற்றுக் கிடக்கும் காட்சி, விவசாயத்தில் உண்மையான பற்றுள்ளவர்களது நெஞ்சத்தைத் தொட்டு, அவர்கள் கண்களில் நீர்மல்கிடச் செய்கிறது. சாதாரண நாட்களிலேயே, விவசாயிகள் மாமரங்களைச் சரியாகக் கவனிப்பதில்லை! இந்நிலையில் வறட்சி வேறு தோன்றியுள்ளது தமிழ்நாட்டில்! இதனுல் மனம் நொந்துள்ள விவசாயிகள், மாமரங்களை முற்றிலும் கவனிக்காமலும் விட்டுவிடலாம்! இந்நிலையைத் தவிர்த்து, வறட்சி சூழ்நிலையிலும் மாமரங்களின் மகசூலைப் பெருக்க நல்லவாய்ப்பு உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை விவசாயிகளுக்குத் தெரிவித்திடக் கடமைப்பட்டுள்ளேன். வறட்சி நிலைமை, மாம்பழ மகசூலைப் பெருக்க ஏதுவானது என்பது உண்மையிலேயே விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியேயாகும்!

வறட்சியும் மாம்பழ மகசூலும்

பொதுவாக வறட்சி எல்லா பயிர்சாகுபடியிலும் நட்டத்தையே உண்டாக்கி வருகிறது. ஆனுல் இந்த ஆண்டு தோன்றியுள்ள வறட்சி, மாம்பழ மகசூல் அதிகரிக்க உதவும்! இது எங்ஙனம் என்று ஆராய்வோம்.

அதிகம் மழை பெய்தால் கொய்யா மகசூல் பெருகுவதும், மழை குறைந்த வறட்சி சூழ்நிலையில் மாம்பழ மகசூல், பெருகுவதும் விவசாயிகள் கண்டு வரும் அனுபவம்! இந்த ஆண்டு வறட்சி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் மழை பெய்யாததால்ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையோடு தற்போதுள்ள பனியில்லாத நிலையும் மாம்பழ மகசூல் பெருக்கத்திற்குச் சாதகமாக உள்ளது! பனி அதிகம் இருந்தால், மாம்பூக்கள் உதிருவதுடன், பூங்கொத்துக்களில் கரும்

பூங்கொத்துகளை நன்கு ஆராய்ந்து பூச்சிகளுக்கு ஏற்ற மருந்தைத் தெளிக்க வேண்டும்.

பூசண நோய் தோன்றி பிஞ்சுகள் கொட்டுவதும் அதிகரிக்கும். இந்த ஆண்டு தோன்றியுள்ள பனியில்லா வறட்சி, 'மா' வைப் பொருத்தமட்டில் ஒருவரப் பிரசாதம்தான்! இயற்கைச் சூழ்நிலை இவ்வாறு சாதகமாக இருக்கும் போது இதை பெரிதும் பயன்படுத்திக் கொண்டு, விவசாயிகளும் உழைத்து மாமரங்களில் அதிக மகசூலைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கேற்ற வழிமுறைகளை உடனடியாக விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும்.

உயர்ந்த மகசூல் பெற வழி முறைகள்!

தற்போதுள்ள மாந்தோப்புகளை முதலில் சுத்தப்படுத்த வேண்டும். மரங்களைச் சுற்றியும், மரங்களுக்கடியிலும் இருக்கும் புல், பூண்டு, முட்புதர்கள் ஆகியவற்றை அகற்றிட வேண்டும். சில மரங்களின் மேல் ஒருவித படரும் கொடியோடி, மரங்களைப் பூக்கவிடாமல் செய்து கொண்டிருக்கும். இக்கொடியின் வேர்களை அறுத்துவிட வேண்டும். அதோடு மரங்களின் அடிபாகத்தில் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்கும் பழைய கிளைகளை வெட்டி அகற்றிவிட்டு, மரங்களுக்கடியில் நல்ல காற்றேட்டச் சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். அடுத்தபடியாக மாமரங்களுக்குப் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டும். இது, மாம்பழ மகசூல் பெருக்கும் முறைகளில் மிகவும் முக்கியமானது.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

மாமரங்களின் மகசூல் வெகுவாகக் குறைந்து வருவதற்கு இவைகளைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களே காரணமாகும். மாமரங்களைப் பலவித பூச்சிகள் தாக்குகின்றன. தத்துப் பூச்சிகள், அசுவணி, பூங்கொத்துப் புழு, பூக்களை மலடாக்கும் ஈக்கள், பழ ஈக்கள், மாங்கொட்டைக் கூன் வண்டு, மரக்கிளைகள் துளைப்பான், இலைகளை ஒட்டிச் சேர்க்கும் புழுக்கள் போன்ற பூச்சிகள் மாமரங்களைத் தாக்குகின்றன. இத்துடன் பூஞ்சாள நோய்களும் தாக்குகின்றன. மாமரங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்போது ஒவ்வொரு பூச்சிக்கும் அல்லது நோய்க்கும் தனித் தனியாக மருந்து தெளிக்க முடியாது. முக்கியமான பூச்சிகளை அல்லது நோய்களை கட்டுப்படுத்தும் பாது

காப்பு நடவடிக்கைகளே, மற்ற பூச்சிகளையும், நோய்களையும் அழிக்க வல்லதாக இருக்க வேண்டும்.

தத்துப் பூச்சி

மாமரங்களின் முக்கிய எதிரி தத்துப் பூச்சிகளாகும். இவைகள் சுமார் 3 மி.மீ. நீளமும், தலைப்பாகம் அகன்றும், உடற்பாகம் குறுகியும், மங்கலான பச்சை நிறமாகவும் இருக்கும். இவை ஆண்டு முழுவதும் மிகச் சிறிய அளவில் இலைகளில், மரப்பட்டைகளில் இருக்கும். ஆனால், பூக்கும் காலத்திலிருந்து, அதிக அளவு பெருகி மிகுந்த சேதம் உண்டாக்கும். பூங்கொத்துகளில் இவைகள் முட்டையிடுவதால், பூ மொட்டுக்கள் உதிரும். முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம் பூச்சிகளும், பெரிய தத்துப் பூச்சிகளும் பூங்கொத்துக்களின் சாற்றை உறிஞ்சுவதால் அவை வாடி உலர்ந்து விடும். இவைகள் கொசுக்களைப் போல் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்று மரங்களில் சேதம் விளைவிக்கும். இப்பூச்சிகள் தோன்றியுள்ள இடத்தில் கருமையான பூசணநோயும் பரவும். ஏனெனில், இப்பூச்சிகளில் இருந்து வெளிப்படும் தேன்போன்ற கழிவுத் திரவத்தில், கருமையான பூசணம் உற்பத்தியாகி, பூங்கொத்துக்களும், இலைகளும், மேலும் மரம்பூராவுமே, கறுப்பாக மாறிவிடும். இது ஒரு பூசண நோய். இதன் பெயர் ''சூட்டி மோல்ட்''. எனப்படும். தத்து பூச்சிகளாலும் அதைத் தொடர்ந்து வரும் பூசண நோயாலும் மாம்பழ மகசூல் 80 சதம் வரை பாதிக்கப்படுகிறது! மிகவும் மோசமான நிலையில், மகசூல் முற்றிலுமே பாதிக்கப்பட்டு, மாமரங்கள், காய்ப்புத்திறனை நிரந்தரமாக இழந்து விடுகின்றன. ஆதலின் மாமரங்களில் தத்துப்பூச்சிகளை ஒழிப்பது மிகவும் அவசியமான முக்கியப் பணியாகும். மேலும் தற்போது தோன்றியுள்ள வறட்சி சூழ்நிலையில், அவசரமாக மேற்கொள்ள வேண்டிய பணியுமாகும். மருந்து தெளிப்பதைப் பொதுவாக மார்கழி கடைசியில் அதாவது மழை நின்ற பிறகு செய்ய வேண்டும் இந்த ஆண்டு மழையில்லை. இதனால் நிலத்தில் இருந்த ஈர மற்ற நிலையும், வெப்பமும் மாமரங்களில் இப்போது அதிக பூக்கள் தோன்ற வழி செய்துள்ளது. இப்பூக்களை நன்கு பரிசோதித்துப் பூச்சிகளால்

மந்திரத்தால் மாங்காய் விழாது! ஆனால் பூச்சி மருந்து தெளித்தால் மாம்பழ மகசூல் பெருகுவது உண்மை!

பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மருந்து தெளிக்கும் முறை

மாமரங்களுக்குத் தெளிக்கும் மருந்துக்கலவையில் ஒரு பூச்சிக்கொல்லியும், ஒரு பூஞ்சாளக் கொல்லியும் இடம் பெற வேண்டும். இம்மருந்தை மரங்களில் அரும்பு தோன்றும் பொழுதிலிருந்து தெளிக்க ஆரம்பிக்கலாம். மொத்தமாக மூன்று முறைகள் - தேவைப் படின் நான்கு முறைகள்- தெளிக்கலாம். விவசாயிகள் மருந்து தெளிக்கும் தவணைகளை முதல் கோட், இரண்டாவது கோட், மூன்றாவது கோட் என் பார்கள். ''கோட்'' என்பது தெளிக்கப்படும் மருந்துகள், பூக்களின் மேல் சீராகப் படர்ந்து ஒட்டிக் கொள்வதேயாகும்.

பொதுவாக மாமரங்களுக்கு மருந்து தெளிக்க, கீழ்க்கண்ட முறைகளில் ஏதாவது ஒன்றை கடைப்பிடிக்கலாம்.

1. டி.டி.டீ. 50 சதம் நனையும் தூள் ஒரு கிலோ, நனையும் கந்தகம் ஒரு கிலோ ஆகிய இரு மருந்தையும் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

2. ஒரு கிலோ கார்பரைல், ஒரு கிலோ நனையும் கந்தகம், ஆகியவற்றை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

3. செவின் 50 சதத்தூள் ஒரு கிலோ, பைட்டலான் ஒரு கிலோ ஆகிய இரண்டையும் 450 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

செவினுக்குப் பதில் பி.எச்.சி. 50 சதம் நனையும் தூளையும் உபயோகிக்கலாம்.

தற்போது கிடைக்கும் மருந்துகளும், செலவும்

தற்போது கிடைக்கும் மருந்துகளில் மாமரங்களுக்கு மிகவும் உபயோகமாக இருப்பவை செவின்50 சத நனையும் தூள், 'ஹெக்சிடால் 950', டி.டி.டீ. 50 சத நனையும் தூள், 'சல்டேப்', 'ரோகார்' முதலியன. செவின் விலை கிலோவிற்கு ரூபாய் 32 முதல் ரூபாய் 44 வரை உள்ளது. 'ஹெக்சிடால் 950' என்பது பி.எச்.சி. 50 சதம் நனையும் தூள் தான்.

இதன் விலை 12.5 கிலோ (டின்) ரூபாய் 100 ஆகும். டி.டி.டீ. 12.5 கிலோ விலை சுமார் ரூபாய் 200 ஆகும். 'சல்டேப்' என்பது நனையும்கந்தக மருந்து. இது பாக்கட்டுகளில் கிடைக்கிறது. ஒரு பாக்கட் விலை 5 ரூபாய். 'ரோகார்' பாட்டில்களில் கிடைக்கும் திரவ மருந்து. 250 மில்லி லிட்டர் பாட்டில் விலை சுமார் 17 ரூபாயாகும். இம்மருந்துகளை வைத்துக் கொண்டு கீழ்க்கண்டபடி தெளிக்கலாம்.

பூ அரும்பும் தோன்றும் போது முதல்கோட் மருந்து தெளிக்கலாம். 300 லிட்டர் தண்ணீரில் 0.5 கிலோ செவின், 150 கிராம் 'சல்டேப்', வாசனைக்கு 3 மூடிகள் 'ரோகார்' மருந்து ஆகியவைகளைக் கலந்துத் தெளிக்கலாம். 300 லிட்டர் கலவையை பெரிய மரங்களாக இருந்தால் 3 மரங்களுக்கும், சிறிய மரங்களாக இருந்தால் 5 மரங்களுக்கும் தெளிக்கலாம். முதல் கோட் தெளிக்க மருந்துச் செலவு, ஆட்கள் கூலி முதலியன யாவும் சேர்ந்து மரத்திற்கு 8 ரூபாய் செலவு ஆகும்.

முதல் கோட் கொடுத்து 20 நாட்கள் தள்ளி இரண்டாவது கோட் கொடுக்கலாம். இது சமயம் மரங்களில் பூங்கொத்துக்கள் அதிகம் தோன்றியிருக்கும். 300 லிட்டர் தண்ணீரில் 0.5 கிலோ செவின்-அல்லது அதிக விலை கொடுத்து செவின் வாங்க இயலாத விவசாயிகள்-செவினுக்குப் பதில் 0.5 கிலோ டி.டி.டி. 50 சத நனையும் தூள்-அதில் ஐந்தில் ஒரு பங்கு அளவு 'ஹெக்சிடால்' தூள், வாசனைக்கு 3 மூடிகள் 'ரோகார்' மருந்து ஆகியவைகளைக் கலந்து தெளிக்கலாம். 300 லிட்டர் கலவையை இரண்டு பெரிய மரங்கள் அல்லது நான்கு சின்ன மரங்களுக்குத்தான் தெளிக்க இயலும்.

மூன்றும் கோட் மருந்து, இரண்டாவது கோட் கொடுத்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு கொடுக்கலாம். இதற்கு இரண்டாவது கோட்டிற்குத் தயார் செய்யப்படுவது போலவே, மருந்து தயார் செய்யப்பட வேண்டும். இரண்டாவது மூன்றாவது கோட் மருந்து தெளிக்க மரத்திற்கு 12 ரூபாய் வரை செலவாகும். இந்த அளவு மருந்துக் கலவையைப் பெங்களூரா, ருமானி போன்ற ரகங்களுக்கு உபயோகப் படுத்தலாம். ஆனல் பங்கன



பள்ளி, மல்கோவா, ஆபிஸ் பசந்த் போன்ற ரகங்களுக்கு அளவைச் சற்றுக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

நீர்த் தெளிப்பும் அவசியம்

இந்த ஆண்டு பங்குனி 15 தேதிக்கு மேல் ஒரு மழையும், சித்திரையில் ஒரு மழையும் பெய்தால் நல்லது! அவ்வாறு மழைவராவிடில், நீர்தெளிப்பு அல்லது 'வாட்டர்ஸ்ப்ரே' அவசியமாகலாம். இது சமயம் தண்ணீருடன் வாசனைக்குக் கொஞ்சம் 'ஹெக்சிடால்' மருந்து கலப்பது நல்லது. இதனுல் பழங்கள் கொட்டுவது தவிர்க்கப்படுவதுடன், காயில் விழும் பூச்சிகளும் கட்டுப்படுத்தப்படும்.

கவனிக்கப்பட வேண்டியவை

மருந்துக் கலவையைத் தயார் செய்வதில் நல்ல கவனம் தேவை. சந்தேகம் இருப்பின் அருகில் உள்ள விவசாய அதிகாரியைக் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது. மருந்து தெளிக்க வசதியுண்டு என்பதால் அடிக்கடி மருந்தடிடிக்கும்போது, பூவரும்புகளுக்குப் பதில் இலைதுளிர்கள் தோன்றிவிடும். 'என்ட்ரின்' மருந்தை பூவரும்புகள் தோன்றும் முன் தெளித்தால், இலைத்துளிர்கள் அதிகம் தோன்றிவிடும். இம்மருந்தை பூக்கள் தோன்றிய பிறகுதான் தெளிக்க வேண்டும். 'சல்டேப்' மருந்தைக் குறித்த அளவு உபயோகிப்பதுடன், அடிக்கடி தெளிக்கக் கூடாது. குறித்த அளவு கொடுக்கும்போது இது பூஞ்சாள நோயைக் கட்டுப்படுத்தி, மேலும் காம்புகளுக்கு வலு கொடுப்பதின் மூலம் பிஞ்சுகளைக் கொட்டாமலும் பாதுகாக்கிறது. காய்களின் மேல் தோன்றும் கரும்புள்ளிகளைத் தவிர்க்கிறது. ஆனல் இந்த மருந்தை அளவிற்கு மேல் உபயோகித்தால், பூங்கொத்தின் நீளம் அதிகமாவதுடன், பூக்கள் கொட்டி விடுகின்றன.

ஒருங்கிணைந்து செயல்படுதல் அவசியம்

மாமரங்களுக்கு மருந்து தெளிக்கும்போது, உடனே பூச்சிகள் பக்கத்துத் தோட்டங்களுக்குச் சென்று ஏற்கனவே அங்கு இருக்கும் பூச்சிகளுடன் சேர்ந்து மரங்களைத் தாக்கி, கடும் சேதம் விளைவித்து விடும். ஆதலால், பக்கத்தில் இருக்கும் தோட்டங்கள் அனைத்திலும் ஒரே சமயத்தில் மருந்து தெளிக்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. இதை அனுசரித்து விவசாயிகள் ஒருங்கிணைந்து மாமரங்களைப் பாதுகாக்கும் பணியில் இறங்க வேண்டும்.

வெற்றி உறுதி

வறட்சி நிலை தோற்றுவித்துள்ள சாதகமான சூழ்நிலையில், விவசாயிகள் கவனத்துடன் மாமரங்களின் பராமரிப்புப் பணியில்-முக்கியமாக பூச்சி மருந்து தெளிக்கும் பணியில்-ஈடுபட்டால், மாமர சாகுபடியில் கணிசமான மகசூல் பெற்று, வெற்றி பெறுவது உறுதி. மாமரங்களுக்கு மருந்து தெளித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெருவதின் மூலம் அதிக வருவாய் பெற முடியும். மாமரங்களுக்கு மேற்கூறியவாறு மருந்து தெளிக்காவிட்டால், முழு அளவில் தேசம் ஏற்படலாம். 6 வயதுடைய சிறிய மரங்களுக்கு ரூபாய் 15 செலவிட்டும், பெரிய மரங்களுக்கு ரூபாய் 30 செலவிட்டும் மருந்து தெளிப்பதால், சிறிய மரங்களில் 600 பழமும், பெரிய மரங்களில் 2,500 பழமும் பெற முடிகிறது. மாந்தோப்புகளில் 100 பழம் ரூபாய் 25 வீதம் குறைந்த விலையிலேயே மொத்த வியாபாரிகளிடம் விற்பதாக வைத்துக் கொண்டாலும், சிறிய மரம் ஒன்றிலிருந்து ரூபாய் 150-ம் பெரிய மரம் ஒன்றிலிருந்து ரூபாய் 625-ம் வருவாய் பெற முடியும்! இதில் நான்கில் ஒரு பங்கு வருவாய் கிடைத்தால்கூட வறட்சி தோன்றியுள்ள நிலையில், அது விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்கும். எனவே இம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெறுமாறு விவசாயிகளை வேண்டிக் கொள்கின்றேன்.